www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய பூமி

පුදිය පුමි

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

PUTHIYA POOMI

சுற்று 10 | ஜனவரி 2003 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 54

# சமாதானத்தின் மறுபக்கம்!

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐ.தே. முன்னணி ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்து கொண்டுள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தை நான்காவது கட்டத்தினுள் புகுந்து நிற்கின்றது. இதுவரை பேசப்பட்டதெல்லாம் புனரமைப்பு, புனர்வாழ்வு, மறுசீரமைப்புப் பற்றியவையும் அதற்குரிய நிதியை உலக நாடுகளில் இருந்து பெற்றுக்கொள்வது சம்மந்தமானதேயாகும்.

கடந்த ஒரு வருடகாலத்தில் முன்னெடுக்கப்பட்டுவந்த சமாதானத்திற்கான பேச்சுவார்த்தை முயற்சியில் ஒரு அம்சம் வெளிப்படையானதாகத் தெரிகின்றமை முக்கியமானதாகும். அமெரிக்காவும், மேற்கு நாடுகளும் யப்பானும் இலங்கையின் நீடித்த சமாதானம் நிலவ வேண்டும் என்னும் நிலைப்பாட்டிற்கு வந்துள்ளன. அதற்காக இவர்கள் ஆளும் பேரினவாத அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எத்தகைய அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டும் என்பதில் பெருத்த அக்கறை காட்டவோ வற்புறுத்தவோ இல்லை. அதேவேளை விடுதலைப் புலிகள் இயக்கத்திடமிருந்து எதிர்காலத்தில் போராடாமல் இருப்பதற்கான வாக்குறுதிகளை வாங்குவதிலேயே மிகக் கவனமாக இருந்தும் வருகின்றன. அமெரிக்கா முன்வைத்து வரும் கருத்துக்கள் மிரட்டும் தொனியுடன் காணப்படுகின்றன. மேற்கு நாடுகளும் யப்பானும் பணக்கட்டுக்களைக் காட்டி வருகின்றன. உதவி வழங்கும் நாடுகள் எனப்படும் இவ் உலக முதலாளித்துவ நாடுகள் ஒஸ்லோ மாநாட்டில் எழுநூறு கோடி அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளன. அடுத்து யப்பானில் இவ்வருட நடுப்பகுதியில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் கூட்டத்தில் மேலும் அதிக தொகை வழங்கப்படும் என்ற பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளன. இந்நிலையிலேயே பிரதமர் ரணில் யப்பானுக்கான அரசமுறைப் பயணத்தை முடித்துத் திரும்பியுள்ளார். அவர் ஏற்கனவே அமெரிக்கா முதல் மேற்கு நாடுகள் வரை பயணம் செய்து தமது ஏகாதிபத்திய அடிவருடித்தனத்தை விசுவாசமாக வெளிப்படுத்திக் கொண்டார். கடந்த இருபது வருடகால யுத்தத்திற்குக் காரணமான தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்படுவதற்கான அடிப்படைகளைத் தேடுவதே தொடரும் பேச்சுவார்த்தையில் முன்னெடுக்கப்பட வேண்டியவையாகும். அதற்குரிய முக்கியத்துவத்தைக் கொடுப்பதில் அரசாங்கமும் உதவி வழங்கும் நாடுகளும் அதிக அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை.



கடந்த இருபது வருடகால யுத்தத்திற்குக் காரணமான தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்படுவதற்கான அடிப்படைகளைத் தேடுவதே தொடரும் பேச்சுவார்த்தையில் முன்னெடுக்கப்பட வேண்டியவையாகும். அதற்குரிய முக்கியத்துவத்தைக் கொடுப்பதில் அரசாங்கமும் உதவி வழங்கும் நாடுகளும் அதிக அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை.

அதற்குப் பதிலாக சமாதானம் என்னும் பெயரில் யுத்தம் இடம்பெறாமல் இருப்பதையே இவர்கள் விரும்புகிறார்கள். இத்தகைய சமாதானச் சூழலில் தமது பணவலிமையை பல பக்கங்களில் இருந்தும் அழிவுற்றுக் கிடக்கும் வடக்கு கிழக்கில் காட்டுவதன் மூலம் தமிழ் மக்களை அவர்களது உரிமைப் போராட்டக் கோரிக்கை நிலைப்பாட்டிலிருந்து திசைதிருப்பிவிடலாம் என்னும் உள்ளார்ந்த நோக்கிலேயே செயல்பட்டும் வருகின்றன.

அமெரிக்காவும் மேற்குலகும் யப்பானும் முன் நிறுத்தி நிற்கும் சமாதானம் என்பதற்கு இரண்டு பக்கங்கள் இருப்பதைக் காணுதல் வேண்டும். ஒன்று வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கும் முழு நாட்டு மக்களுக்கும் சமாதானம் வேண்டும் என்பதாகும். அந்தளவுக்கு யுத்தம் இந்நாட்டையும் மக்களையும் நாசப்படுத்தி விட்டது. இன்று எவர் சமாதானத்திற்காக நின்றாலும் அவர்களை

தொடர்ச்சி 10ம் பக்கம்..

# அமெரிக்காவிற்கு இலங்கை தளமாகிறது

கடந்த ஒரு மாதகாலமாக ஈராக்கில் 'இரகசிய ஆயுதப் பதுக்கலைக்' கண்டறிவதற்காக அனுப்பப்பட்ட ஐ.நா. குழுவினர் இதுவரை நடாத்திய சோதனைகளில் எந்தவொரு துரும்பைத்தானும் கண்டு பிடிக்கவில்லை. அமெரிக்கா ஈராக் மீது ஒரு வலிந்த போரை நடாத்தவும் சதாமை வீழ்த்த தனக்குத் தலையாட்டும் கட்சியை உருவாக்கவும் முடிவுசெய்து விட்டது. ஆனால் அப்போருக்கு ஒரு சிறு காரணத்தையாவது உலகுக்குக் காட்டவே ஆயுதப் பரிசோதனை என்ற நாடகம் ஐ.நா. மூலம் நடாத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் ஈராக் மீதான போர் அமெரிக்க புஷ் தலைமையால் தீர்மானிக்கப்பட்டு விட்டது.

அத்தகைய போரில் இலங்கையின் வான், கடல் பரப்பை அமெரிக்கா பயன்படுத்த இருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. அதனை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆஸ்லி வில்ஸ் அண்மையில் செய்தியாளர் சந்திப்பில் வெளிப்படுத்தியும் உள்ளார். அமெரிக்க-இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் இன்னும் ஒப்பமிடப்படவில்லையாயினும் ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட 'சுதந்திர வான்வெளி' ஒப்பந்தம் இருக்கிறது. அதனைப் பயன்படுத்தி அமெரிக்க போர் விமானங்கள் இலங்கையைத் தளமாகக்கொண்டு ஈராக் போரில் பங்குபற்றும்.

அமெரிக்கா எங்கே தொடங்கி எங்கே வந்து நிற்கிறது என்பது மட்டுமன்றி எங்கே இலங்கையைக் கொண்டு சென்று நிறுத்திவிடப் போகின்றது என்ற அபாயம் நிறைந்த கேள்வியே நாட்டை நேசிக்கும், மக்களைப் பற்றிச் சிந்திப்போருக்கு முன்னால் எழுகின்றது.

# ராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தால் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகிறது!

கடந்த பத்தொன்பது வருட கால யுத்தத்தில் வடக்கு-கிழக்கில் ராணுவம் பரந்து தமது ராணுவ நிலைகளை அமைத்து விஸ்தரித்து வந்துள்ளன. இவை மக்களின் குடியிருப்புக்கள், விவசாய நிலங்கள், மீன்பிடிக் கரையோரங்கள் மற்றும் தொழில் முயற்சி இடங்களிலேயே அமைக்கப்பட்டன. அதன் காரணமாக மக்கள் தமது வாழ்விடங்களையும் தொழில் முயற்சிகளையும் இழந்து இடம்பெயர்ந்தனர். அகதி முகாம்களிலும் வெவ்வேறு பகுதிகளிலும் அல்லற்பட்ட வாழ்வையே வாழ்ந்து வருகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம்-யுத்த நிறுத்தம்-சமாதான சூழலில் இவ்வாறு வாழ்ந்து வரும் மக்கள் தமது சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பிச் சென்று வாழ்வதை அரசாங்கமும் ராணுவமும் தடுத்து வருகின்றது. உயர் பாதுகாப்பு வலயம் என்னும் பெயரில் மக்களது வாழ்வுரிமைக்கான அனைத்து அடிப்படை உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. இவ்வாறு செய்வதன் மூலம் மக்களது வீடுகள், விளை நிலங்கள், கரையோரங்கள், தொழிலகங்களில் ராணுவம் தொடர்ந்து தமது நிலையைப் பலப்படுத்தி விஸ்தரித்து நிற்கின்றனர். இதனால் வடக்கு-கிழக்கில் சுமார் மூன்று லட்சம் மக்கள் வரை மீளக்குடியமர முடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் வடபகுதி ராணுவ உயர் அதிகாரி வெளியிட்டுள்ள அறிக்கையில் நாட்டின் ஆள்புல ஒருமைப்பாட்டிற்கும், இறைமையைப் பாதுகாக்கவும் இத்தகைய உயர் பாதுகாப்பு வலையம் அவசியம் எனக் கூறி இருப்பது வேடிக்கை தரும் கூற்றாகவே காணப்படுகின்றது. நாட்டின் பாதுகாப்பு எனக் கூறி மக்களது குடியிருப்புகளையும் தொழில் முயற்சிகளையும் தமதாக்கி அவர்களது வாழ்வைப் பாழ்படுத்துவது எவ்வகையிலும் ஆள்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதாகவோ இறைமையைப் பேணுவதாகவோ அமையமாட்டாது.

மேலும் இந்த உயர் பாதுகாப்பு வலையப் பிரச்சினை அரசாங்க-புலிகள் இயக்கப் பேச்சுவார்த்தைத் தொடரில் ஒரு முறுகல் நிலையையும் ஏற்படுத்தியுள்ளது. ராணுவத்தின் பின்னால் இருந்து பேரினவாத சக்திகள் முடுக்கிவிடும் செயற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். சமாதான சூழலைக் குலைத்து மீண்டும் யுத்தம் ஒன்றைத் தொடக்க இவ்விடயத்தையே ஒரு சாட்டாக்கிக் கொள்ளவும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. எனவே மக்களது மீளக்குடியமர்விற்கு உயர் பாதுகாப்பு வலையம் என்ற பெயரில் தடையாக அமைந்துள் ராணுவ நிலைகளில் இருந்து ராணுவம் விலகி மக்களுக்கு வழிவிட ஆவண செய்யப்பட வேண்டும். மக்களது அடிப்படை வாழ்வுரிமைகள் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்துகின்றோம்.

**புதிய பூமி**

இவ்விதழில் இருந்து ரூபா 12.00 ஆக உயர்த்தப்பட்டு உள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

*நிர்வாக பீடம்*

# மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்காக நவீன் திசநாயக்கா கண்ணீர் விடுகிறார்!

மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்காக பிரதி அமைச்சர் நவீன் திஸாநாயக்கா கவலைப்படுகிறார். தோட்டப் புறங்களுக்கான அபிவிருத்தி முறையாக இடம்பெறவில்லை என்றும் அதற்கான பணம் ஒரு சில தலைவர்களின் சட்டைப் பைகளுக்குச் சென்று அதன் மூலம் அவர்கள் மாளிகைகள் கட்டி சொகுசாக வாழ்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறியதில் உண்மை பல உண்டு. ஆனால் சொல்லியவர் யார் என்றும் பார்க்க வேண்டியுள்ளது. மலையகத்தில் இனவாதத்தைப் பரப்புவதிலும் அதற்கான பேரினவாதச் செயல் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியவர் மறைந்த காமினி திஸாநாயக்கா. அவரது புத்திரர் தான் இப்போது மலையக மக்களுக்கு வேதம் ஓதுகின்றார். அவரும் தந்தையின் வழியைப் பின்பற்றுபவராகவே இருந்து வருகிறார்.

மேல்கொத்மலை நீர் மின்சாரத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவேன் எனச் சபதமிட்டு தனது மாமனார் கரு ஜெயசூரியாவுடன் கைகோர்த்து நிற்கும் இதே பிரதி அமைச்சர் நவீன் திஸாநாயக்கா தான் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பரிந்து பேசுகிறார். சம்பள உயர்வுப் பிரச்சினையின் போது பதுங்கி மறைந்து கொண்ட இதே ஆள்தான் இப்போது யூஎன்.பி. தொழிற்சங்கத்தை புனரமைத்து ஆகக் கூடிய அங்கத்தவர்களைக் கொண்டதாக மாற்றம் செய்யப் போகிறாராம். எல்லாம் வாக்கு வங்கிக்கும், தொழிற் சங்க சந்தாப் பணத்திற்காகவும் தான் இத்தகைய அபிவிருத்தி பற்றிய சவடால் பேச்சுக்கள்.

மலையக மக்களை எவ்வாறு ஏமாற்றலாம் என்பது அவர்களுக்கு கைவந்த கலையாகும். அற்ப சொற்ப சலுகைகளாகக் காட்டி எலும்புத் துண்டங்களை வீசி எறிந்து தமது இருப்பை மலையகத்தில் பாதுகாத்துக்கொள்வதே முக்கியமானதாகும். இவ்விடயத்தில் ஆறுமுகம் தொண்டமானுக்கோ, சந்திரசேகரனுக்கோ எவ்விதத்திலும் தான் குறைந்தவன் அல்ல என்பதை பிரதி அமைச்சர் நவீன் திஸாநாயக்கா தனது உரை மூலம் தெரிவித்துள்ளார்.

மேல் கொத்மலை திட்டத்தின் மூலம் தலவாக்கெல்லை நகரின் ஒரு பகுதியை சுபனீகரம் செய்து சிங்கள குடியேற்றத்தை நடாத்தி மலையகத் தமிழ் மக்களின் பலத்தை சிதறடித்து அதன் ஊடாகப் பேரினவாதத்திற்குப் பலம் சேர்க்கவே நவீன் திசாநாயக்கா தூரநோக்குடன் செயல்பட்டு வருகிறார். தனது திட்டத்திற்கு சந்திரசேகரனை அணைத்தும் ஆறுமுகத்தை உதைத்தும் கொள்ள முயன்று வருகிறார்.




கொழும்பில் இடம்பெற்ற தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்தின் 13வது நினைவு தினக் கூட்டத்தில் நோர்வே தொழிலாளர் கட்சியின் (APK) பிரதிநிதி ரூனா மரியா பிபரிக் நினைவுப் பேருரை நிகழ்த்துகிறார். பேராசிரியர் சி.சிவசேகரம் தலைமை தாங்குகிறார். கே.நடனசபாபதி அருகில் இருக்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com



# மலையக ஆதிக்க அரசியலும் அடாவடித்தனமும்

~ மஸ்கெலியா குகன் ~

மலையகத்தில் இரண்டு பாராளுமன்ற அரசியல் ஆதிக்க சக்திகளிடையே போட்டியும் மோதலும் இடம்பெற்று வருகின்றமை தொடரும் நிகழ்வுகளாகும். ஒரு புறம் இ.தொ.கா.வும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானும் நிற்கிறார்கள். மறுபுறம் மலையக மக்கள் முன்னணியும் அமைச்சர் பெ. சந்திரசேகரனும் இருக்கிறார்கள். இவர்கள் இரு தரப்பினரும் போட்டியிடுவது. மோதுவது ஏதோ மலையக மக்களின் பிரச்சினைகள். தேவைகள். உரிமைகள் என்பவற்றுக்காக அல்ல என்பது தெளிவு. தமது செல்வாக்கு. அரசியல் ஆதிக்கம், சுற்றி நிற்போரின் தேவைகள். வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ளல் போன்றவற்றுக்கேயாகும். மலையகத்தின் சுயநலக்காரர்கள் அனைவரும் இவ்விரு அணியினருக்கும் பின்னால் நிற்கின்றனர்.

இவர்களது போட்டி மோதலுக்கு அண்மைய உதாரணம் தான் அட்டன் தொழில் பயிற்சி கல்லூரியில் இடம்பெற்ற சம்பவமும் அதனைத் தொடர்ந்த ஜனநாயக விரோத அடாவடித்தனமும். மேற்படி தொழில் பயிற்சி கல்லூரி முன்பு இ.தொ.கா.வின் ஆதிக்கத்திலேயே இருந்து வந்தது. தோட்ட உள்கட்டமைப்பு அமைச்சே அதனைக் கவனித்து வந்தது. பின்பு இக் கல்லூரி பெ. சந்திரசேகரனின் சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. இதனால் இ.தொ.கா.வின் பிடி தளர வேண்டியதாயிற்று.

இந் நிலையிலேயே அக் கல்லூரியின் அதிபர் திடீரென புகுந்த ஒரு கோஷ்டியினால் விரட்டப்பட்டு புதிய அதிபர் கதிரையில் அமர்த்தப்பட்டார். பழைய அதிபர் நீக்கப்பட்டது பற்றியோ புதிய அதிபர் நியமிக்கப்பட்டமை பற்றியோ உத்தியோக பூர்வ அறிவித்தல் எதுவும் விடுக்கப்படவில்லை. இதனால் குழப்பமான சூழல் ஏற்பட்டு மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டது. இது பற்றி சம்மந்தப்பட்டவர்களுக்கு கவலையே இல்லை.

இத்தகைய அரசியல் தலையீட்டையும் அதிரடியாக முறையற்ற விதத்தில் கல்லூரிக்குள் புகுந்து அதிபரை விரட்டி புதியவரை இருத்தியதை மலையகப் புத்திஜீவிகள் பெரும்பாலோர் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனைக் கண்டித்து இது போன்ற சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டது.

நவம்பர் 2002. 11ம் திகதி நடைபெற்ற மேற்படி சம்பவத்தைக் கண்டித்தும் மலையகக் கல்வித் துறையில் அரசியல் தலையீடு செய்யப்படுவதை நிறுத்தவும் கோரி அட்டன் நகரசபை மண்டபத்தில் டிசம்பர் 8ம் திகதி ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதனை ஜனநாயக உரிமைகளுக்கான மலையக அமைப்பு நடாத்தியது. இக் கூட்டத்திற்கு மலையகப் புத்திஜீவிகளும் மாணவர்களும் மற்றும் சமூக அக்கறை கொண்டோரும் சமூகம் கொடுத்திருந்தனர். ஆனால் இக் கூட்டத்திற்குள் புகுந்து கொண்ட இ.தொ.கா.வினர் அடாவடித்தனமாகக் கூட்டத்தைக் குழப்பி நடாத்த விடாது தடுத்தனர். "என்ன ஜனநாயகம்! யாருக்கு ஜனநாயகம்". "யாரடா ஜனநாயகம் பற்றிப் பேசுவது" என அட்டகாசம் புரிந்தனர். குண்டர்கள் ஆங்காங்கே கதிரைகளை எடுத்து வீசி சண்டித்தனம் செய்தனர். இவை அனைத்தையும் பொலிசார் எனப்பட்டவர்கள் பார்த்தவாறே நின்றனர். கூட்டம் சிறிது நேரத்தில் கைவிடப்பட்டது. இவ்வாறு அடாவடித்தனம் புரிந்தவர்கள் மத்தியில் முன்னாள் இ.தொ.கா. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரும் உற்சாகமாக இருந்தனர்.

இதுதான் மலையகத்தின் "ஜனநாயக அரசியல்" ஆதிக்க அரசியலின் அடாவடித்தன நிலை. இன்றைய அரசாங்கத்தில் மலையகம் சார்பாக இரண்டு அமைச்சர்கள். பிரதி அமைச்சர் பதவிகள் என்பனவற்றை இ.தொ.கா. வும் ம.ம.முயும் தம் வசம் வைத்திருக்கின்றன. அதனைத் தாராளமாகக் கொடுத்த ஐ.தே.மு. அரசாங்கம் இவ்வாறு ஆதிக்க அடிபிடி நடப்பதைப் பார்த்து ரசித்துக் கொள்கிறது. ஏனெனில் மலையக மக்கள் தமக்கு எதிராகத் திரும்பாதவாறு இவ்விரு தரப்பினரும் மிகக் கவனமாகப் பார்த்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு உண்டு. எவ்வளவுக்கு போட்டி மோதலில் இறங்கினாலும் இவ் இரு தரப்பினரும் தமது அடிமை விசுவாசத்தை மறக்க மாட்டார்கள். ஒன்றில் அந்தப் பக்கம் அல்லது இந்தப் பக்கத்தில் இருந்து பேரினவாத ஆளும் வர்க்கத்திற்கு சேவகம் செய்து கொண்டே இருப்பார்கள்.

# இந்து கலாசார அமைச்சும் வடிசாராயமும்

இந்து கலாசாரத்திற்கும் வடிசாராயத்திற்கும் என்ன சம்மந்தம் எனச் சிலர் ஆச்சரியப்படலாம். ஆனால் அவ் ஆச்சரியத்தை உடைத்திருக்கிறது இந்து கலாசார அமைச்சு. அதற்குரிய அமைச்சர் மகேஸ்வரன்.

வடபுலத்தில் வடமராட்சியில் அமைந்துள்ள திக்கம் வடிசாராய உற்பத்தி நிலையம் ஒரு முக்கிய மது உற்பத்திக் களமாகும். வடபகுதியில் பனை மரங்களில் இருந்து பெறப்படும் கள்ளிலிருந்தே மேற்படி வடிசாராயம் எடுக்கப்படுகிறது. இச் சாராயம் மதுப் பாவனையாளர்களிடையே கிராக்கி பெற்றதாகும். அதாவது இச்சாராயத்திற்கும் கள்ளத்தனமாக வடிக்கப்படும் கசிப்பு என்பதற்கும் சிறு அளவே வித்தியாசம் என்று மது அருந்துவோர் கூறுகிறார்கள்.

இந்த திக்க வடிசாராய உற்பத்தியால் வரும் வருமானம் லட்சக் கணக்காகும். வருட முடிவில் அதன் ஆதாயம் பல லட்சங்களாகும். இதனாலேயே முன்பு இவ் வடிசாராய நிலையத்தை தத்தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க தமிழ் இயக்கங்கள் தமது பலத்தைப் பிரயோகித்து வந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும். வடிசாராயம் அதன் பாவனை அதிகரித்த லாபம் பற்றிய பிரச்சினை ஒரு புறமிருக்க முறைப்படி இந் நிலையம் தெங்கு. பனம் பொருள்கள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்திடமே இருக்க வேண்டியதாகும். ஏனெனில் அதன் லாபம். பயன்கள் யாவும் கள் இறக்கும் சீவல் தொழிலாளர்களுக்கே சென்றடைய வேண்டும். ஆனால் அவ்வாறு இருப்பதை பணத்தின் மீது கண் வைத்த எந்த இயக்கமும் அனுமதிக்கவில்லை. பணமாகவும். சாராயமாகவும் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவங்களும் கடந்த காலங்களில் இடம்பெற்றன.

1994க்குப் பின் ஈ.பி.டி.பி.யினரின் குடாநாட்டு ஆதிக்கத்தின் கீழ் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவின் இந்துவில் தொடங்கி தமிழ் விவகாரம் எனப்பட்ட நீளமான பெயரைக் கொண்ட அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இதே டக்ளசைத் திட்டித் தீர்த்து பாராளுமன்ற உறுப்பினராகி அதே இந்து கலாசார அமைச்சைப் பெற்றுக் கொண்டவர் தி. மகேஸ்வரன். இந்த இந்து அமைச்சும், அமைச்சரும் திக்கம் வடிசாராய நிலையத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்து சீவல் தொழிலாளர்களுக்கும் பனை, தெங்கு உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்திற்கும் புறமுதுகைக் காட்டி நிற்கின்றனர். அமைச்சர் ஒரு பெரும் வர்த்தகப் புள்ளி என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாகும். எனவே எங்கே லாபம் எப்படிப் பணம் பண்ணலாம் என்பது அமைச்சருக்கு கைவந்த கலையாகும். அதனால்தான் கற்பக தருவாக உள்ள திக்கம் வடிசாராய உற்பத்தி நிலையத்தை பஞ்சமா பாதகங்களில் ஒன்றெனக் கூறுவதையும் பாராது இந்து கலாசார அமைச்சின் கைகளில் வைத்திருக்கிறார். அந் நிலையத்தின் கணக்கில் இருந்த இரண்டு கோடி ரூபாய்களைக் கொண்டு தனது பெயரில் புண்ணிய காரியங்கள் எனக் கூறி தான. தருமங்கள் செய்து வருவதாகவும் கூறப்படுகின்றது. அண்மையில் ஐம்பது முச்சக்கர வண்டிகள் (ஓட்டோ) குடாநாட்டின் கோவில்களுக்கு அன்பளிப்புச் செய்யபட்டதாகவும் கூறப்படுகின்றது. சாதாரண உழைக்கும் சீவல் தொழிலாளர்களின் கடும் உழைப்பால் உருவாக்கப்பட்ட லாபப் பணம் இந்துக் கோவில்களுக்கு தானமாக்கப்படுகிறது. இதில் வேடிக்கை என்னவெனில் இந்தப் பணம் வழங்கப்பட்ட சில கோவில்களுக்குள் சீவல் தொழிலாளர்களான தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றும் அனுமதிக்கப்படவில்லை என்பதுதான்.

அண்மையில் திக்கம் வடிசாலையை தெங்கு. பனம் பொருள்கள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்கக் கோரி தொடர் மறியல் போராட்டம் யாழ் நகரில் நடைபெற்றது. பெருந் தொகையான சீவல் தொழிலாளர்கள் இதில் கலந்து கொண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். வடிசாராய உற்பத்தியால் வரும் லாபப் பணத்தைக் கொண்டே இந்து கலாசாரம் பேணிப் பாதுகாக்கப்படுகின்றது என்றால் மிகுதியான நான்கு பாதகங்களாலும் கூட இந்து மதத்தைப் பாதுகாக்கலாம் என்பதையே இந்து கலாசார அமைச்சு எடுத்துக் காட்டி வருகின்றது. பணம். சொத்து. சுகம். அதிகாரம். ஆதிக்கம் இவைதான் பாராளுமன்ற அரசியலின் அடிப்படை என்பதையும் தொழிலாளர்கள் . மக்கள் என்பதெல்லாம் ஆளும் வர்க்கத்தினருக்கு அற்பமானவை என்பதையும் இந்து கலாசார, அமைச்சும். அமைச்சரும் எடுத்துக்காட்டி வருகின்றனர்.

இவர்களுக்கு வாக்குப் போட்ட சீவல் தொழிலாளர்களும். தாழ்த்தப்பட்ட மக்களும் தமது தவறை இப்போதாவது உணர்வார்களா? வாக்குச் சேகரித்துக் கொடுத்து எலும்புத் துண்டங்களைப் பெற்ற தாழ்த்தப்பட்ட கனவான்கள் எனப்படுவோர் என்ன சொல்வார்கள். அவர்கள் எதைத்தான் கூறுவது. ஏனெனில் அவர்கள் நவீன அடிமைகள் அல்லவா?

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரே ஒரு வெகுஜன அரசியல் பத்திரிகை

புதியபூமி ஒவ்வொரு மாதமும் 1ம் திகதி வெளிவருகிறது.

செய்திகள்-கட்டுரைகள் அனுப்புங்கள் உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்

வருட சந்தா - 200 ரூபா ஆறு மாதம் - 100 ரூபா
வெளிநாடுகளுக்கு US $ 20.00 (தபாற் செலவு உட்பட)

பணம் அனுப்பும் வங்கி விபரம் : சோ. தேவராஜா
கணக்கு இலக்கம் : 0672-21-2002634-6
Bank of Ceylon, Central Super Market, Colombo 11.

ஆசிரிய பீடம் / நிர்வாகம் : புதிய பூமி
S-47. 3வது தளம். கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
(C.C.S.M. Complex) கொழும்பு - 11. இலங்கை.
Tel: 435117, 335844 Fax : 01-473757

# நாலு நடக்கும் நற்குணம் உலகிலே

## பாரத தர்மம்

இந்தியா இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாது என்று தான் சொல்லப்பட்டது. என்றாலும் ஈ.பி.டி.பி. அலுவலகங்கள் வடக்கில் செயற்படாது தடுக்கும் முயற்சிகட்கு இந்தியத் தூதரகத்தின் மூலம் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் ஜனநாயகம் பற்றி இந்தியாவின் நேர்மையான அக்கறையை நாம் கண்டிப்பது கூடாது. மட்டுமல்ல அப்படியான அக்கறையை மெச்சவும் வேண்டும். இந்தியா நமது உள் விவகாரங்களில் நுழையாதவரை அதை நாம் கண்டிக்க நியாயம் இல்லை.

என்றாலும். சென்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தீவுப்பகுதிகட்குச் சென்று தாக்குண்ட போது இந்தியத் தூதரகம் அதைக் காணாமல் விட்டது கொஞ்சம் கவலை தருகிறது. அதுவும். அடிபட்டோர் இந்தியாவை மறுத்து வாயே திறவாத விசுவாசிகள். இன்னமும் இந்தியாவே தாய்நாடு என்கிறவர்கள். அம்மே. பாரதமாதா. நீ இவர்களுக்குத் தாயா. மாற்றாந்தாயா?

## ஜோஜ் புஷ் பகடிகள்

பொதுவாழ்வில் உள்ளவர்கள் பற்றிய கிண்டலும் கேலியும் அங்கதமும் உலகில் எங்கும் உள்ளதுதான். அதில் கதை பாதி கற்பனை பாதியாக இருக்கும். ஆனால் அமெரிக்க சனாதிபதி புஷ் விஷயத்தில் கற்பனைக்கே தேவை இல்லை. அவருடைய ஒவ்வொரு சொல்லும் செயலும் எல்லாரையும் சிரிக்க வைக்கும். இதிற் சிறப்பு என்னவென்றால் அவர் மற்றவர்கள் சிரிக்க வேண்டும் என்று நினைத்து எதையுமே செய்வதில்லை.

புத்தகம் ஒன்றைத் தலைகீழாகப் பிடித்துக் கொண்டு ஒரு குழந்தைக்கு வாசிக்க உதவி செய்கிற படம் ஒன்று இன்ற்றர் நெற்றில் உலா வந்து மேல்நாடுகளில் சில பத்திரிகைகளிலும் வெளியானது.

படைவீரர்களுடன் அமர்ந்து பார்க்கும் கண்ணாடி உறையால் மூடப்பட்டு இருந்த பைனாக்குலர் வழியாக அவர் கவனித்துப் பார்க்கும் படம் ஒன்றும் பலராலும் விநியோகிக்கப்பட்டுள்ளது. அவருடைய முகபாவங்களும் மிகவும் கேலிக்கு உள்ளானவையே. என்றாலும் எல்லாவற்றிலும் பெரிய பகடி அவர் அமெரிக்க சனாதிபதியாக இருப்பதுதான். இப்பேர்க்கொத்த ஒரு அசட்டுக் கோமாளியை அரச அதிகாரத்தின் உச்சியில் வைத்துக் கொண்டு அமெரிக்கா எப்படி உலகை அதிகாரம் செய்ய முடிகிறது என்று யோசித்துப் பார்த்தால் வியப்பு ஏற்படலாம். ஆனால் உண்மையில் அமெரிக்காவின் சனாதிபதியாக ஒரு குரங்கை நியமித்தாலும் அமெரிக்காவின் உலக அரசியல் நடத்தை மாறாது. ஏனென்றாற் குரங்காட்டிகள் வேறெங்கோ இருந்து குரங்கைத் தாம் வேண்டியபடி ஆட்டி நாட்டை ஆளுவார்கள்.

## அன்றும் இன்றும்

தோழர் கார்த்திகேசன் அவர்கள் இறந்து இருபத்தைந்து ஆண்டுகளாகிறது. அவர் இறந்தபோது அவரது குடும்பத்தின் அநாதரவான நிலையையும் அவரது கொள்கைகட்கு நெருக்கமானவரான அவரது மருமகன் தோழர் சின்னத்தம்பி அருகில் இல்லாததையும் பாவித்து அவரது பழமைவாத உறவினர்கள் அவர் என்றுமே விரும்பாத சடங்காசாரங்களைச் செய்து நெற்றியில் பட்டையாகத் திருநீறு தீட்டி அவரை அவமதித்தார்கள். அவர் உயிரோடு இருந்தபோது வெறுத்தொதுக்கிய விடயங்களை அவரது சாவின் போது அவருக்குச் செய்தது மிகவும் அருவருக்கத்தக்க விடயம்.

அவரது நினைவு நூல் வெளியீட்டுக் கூட்டம் ஒன்று சென்ற நவெம்பர் மாதம் நடைபெற்றது. அதிலே அவரது கொள்கைகட்கு இன்றுவரை நெருக்கமாகவும் விசுவாசமாகவும் இருந்து வருகிறவர்கள் ஒதுக்கப்பட்டு மாக்ஸிய நடைமுறையிலிருந்து விலகியோடியவர்களும் மாக்ஸியத்தை வெறுப்பவர்களும் மேடையேற்றப்பட்டனர்.

அவரை அன்று அவமதிக்கப் பின்னணியில் இருந்தோர் மாக்ஸிய விரோதிகள் மட்டுமல்ல பத்தாம் பசலிகளுங்கூட. அவர்களது நடத்தையை விளங்கிக் கொள்ளலாம்.

இன்று நடந்ததற்குப் பின்னணியில் இருந்தோர் மாக்ஸியத்திலிருந்து ஒதுங்கி என்.ஜி.ஓ. நிழலில் ஒண்டிக் கிடக்கும் உதிரிகள். இவர்களது நடத்தையை... இதுவும் அது போலத்தான் என்று விளங்கிக் கொள்ளலாம்.

## சமாதானத்துக்காக உயிரைக் கொடுத்தல்

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சமாதான நோக்கங்கள் பற்றி யாரும் சந்தேகிக்கக் கூடாது. ஏனெனில் அவர் சமாதானத்துக்கான போர் நடத்தியவர் அல்லவா. இங்கு வேறு யாராவது அவ்வளவு உக்கிரமாகச் சமாதானத்துக்காகப் போரை முன்னெடுத்ததில்லை.

இப்போது சமாதானத்துக்காக உயிரையும் கொடுப்பேன் என்று சொல்லியிருக்கிறார்.

அவர் ஏன் அநியாயமாக உயரைக் கொடுக்க வேண்டும்! அரசியலிலிருந்து ஒதுங்கினாலே அது சமாதானத்துக்கான ஒரு நல்ல பங்களிப்பாக இருக்காதா?

## சமாதானத்துக்கு எதிரான மனித உரிமை

யூரி.எச்.ஆர்.(ஜே). என்றால் என்ன என்று விசாரிப்பவர்கள் மனித உரிமைகட்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்) என்ற கருத்தை ஏற்க ஒரு நியாயமும் இல்லை என்று உணர்வார்கள். யாழ்ப்பாணத்திலோ பல்கலைக்கழகத்திலோ இல்லாத. மனித உரிமை பற்றிய அக்கறையற்ற கோமாளிப் புத்திசீவிக் கூலிப்படையே அது. என்றாலும் அதனால் தொடர்ந்தும் அறிக்கைகளை வெளியிட முடிகிறது. அதற்கான பணம் எங்கிருந்து வருகிறது? அதன் அறிக்கைகள் இன்று சமாதான எதிர்ப்பாளர்களால் படு உற்சாகமாக வரவேற்கப்பட்டு மீளப் பிரசுரிக்கப்படுவது ஏன்? களத்தில் இறங்கித் தகவல் திரட்ட ஆளில்லாத இந்த அமைப்புக்கு விடுதலைப்புலிகள் பற்றிய தகவல்களை வழங்குவது யார். பல விடயங்கள் ராணுவத்திடமிருந்தே கிடைத்தவை போலத் தெரிவதால் இந்த "அமைப்பு" (மெய்யாக இரண்டரைப் பேர்வழிகள்) பற்றிய சந்தேகங்கள் மேலும் வலுப் பெறுகின்றன.

## இன்று அவர்களுக்கு

ஈ.பி.டி.பி.யினரை நெடுந்தீவிலிருந்து வெளியேற்றும் "போராட்டம்" பற்றி த.வி.கூட்டணி மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கிறது.

அதன் தலைமைப் பிரமுகர் ஒருவர் "இன்று அவர்களுக்கு நாளை நமக்கு" என்று அந்தரங்கமாக முறைப்படுவதாகக் கேள்வி. ஒரு விடயம் தவறு என்று தெரிந்தால் அதைக் கண்டிக்கத் திராணியற்ற தலைமைகளால் ஒரு மக்களின் நியாயமான உரிமைகட்களாகப் போராட முடியுமா?

## சபாபதிக்கு வேறு தெய்வம் சமனாகுமா?

அமிர்தலிங்கத்தின் அரசியல் வாழ்வின் உச்ச நிலை பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவி. யூஎன்.பி. பெற்ற மாபெரும் வெற்றியால் பிற சிங்களக் கட்சிகள் யாவுமே ஓரங்கட்டப்பட்டதன் காரணமாக அமிர்தலிங்கம் பெற்ற அப்பதவி மூலம் தமிழினம் கண்டது என்ன? இப்போது ஆனந்தசங்காரியாருக்கு துணை சபாநாயகர் பதவிக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இது. முன்பு யூஎன்.பி. 1965-70 ஆட்சிக்காலத்தில் மு.சிவசிதம்பரத்துக்கு வழங்கியதுதான். எனவே முதலாவது என்று சொல்ல முடியாது. என்றாலும் சங்கரியாருக்கு ஒருபுறம் நப்பாசை மறுபுறம் நடுக்கம். நாளை பாராளுமன்ற ஆசனமே இல்லாது போகக்கூடிய சூழலில் நல்ல தருணமடா இதை நழுவவிடுவாயோ" என்ற பாட்டு நினைவுக்கு வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# பாடசாலை அனுமதிக்கு பணம் அறவீடு!

இப்பொழுது நாட்டின் சகல பாடசாலைகளிலும் மாணவர்களை அனுமதிக்கும் காலமாகும். இதனையொட்டி கல்வி அமைச்சும், யுனிசெப் திட்டமிடல் கூட்டமைப்பும் பத்திரிகைகளில் பெரும் விளம்பரங்களை வெளியிட்டு வருகின்றன. அதில் 'வாழ்க்கையில் உன்னதமானவையெல்லாம் ஆரம்பிப்பது 'அ'விலேயே... என்று கூறி, 'கல்வி இல்லாமல் வாழ்க்கை இல்லை, இன்றே உங்கள் பிள்ளைகளை பாடசாலைகளில் சேருங்கள்' என்றெல்லாம் அழகான வசனங்கள் இருந்தன.

ஆனால் பாடசாலைகளில் பெற்றோர் தமது பிள்ளைகளை அனுமதிப்பதற்குச் சென்றால் அதிபர்களும் நிர்வாகிகளும் பெருந்தொகைப் பணத்தை நன்கொடையாகச் செலுத்தும்படி நிர்பந்திக்கப்படுகின்றனர். முதலாம் ஆண்டில் சேர்ப்பதற்கு ஆயிரம் முதல் ஐயாயிரம் வரை கேட்கப்படுகிறது. அடுத்தடுத்த வகுப்புக்களுக்கான அனுமதிக்கு மென்மேலும் தொகை கூடிக்கொண்டே செல்கிறது. தரம் உயர்ந்த பாடசாலைகளில் என்றால் பத்தாயிரம் முதல் இருபதாயிரம் வரை அறவிடப்படுகின்றது. கட்டிடம், தளபாடம், ஏனைய வளங்களின் தேவைக்கென்றே இவ்அறவீடு நடத்தப்படுகின்றது.

கல்வி அமைச்சு அனுமதிக்கு எவ்வித பண அறவீடும் செய்யக்கூடாது எனக் கூறுகின்றது. ஆனால் பாடசாலை அதிபர்களும் நிர்வாகிகளும் பணம் கொடுக்காதுவிட்டால் அனுமதியை மறுக்கிறார்கள். இப்பணம் பாடசாலை அபிவிருத்தி என்ற பெயரில் அதிபர்கள் சில நிர்வாகிகளின் பைகளிலேயே சென்று விடுகின்றன என்பது பலரும் பேசிக்கொள்ளும் இரகசியமாகும்.

இத்தகைய அனுமதிப் பண அறவீட்டினால் பாதிக்கப்படுபவர்கள் சாதாரண உழைக்கும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களாகவே உள்ளனர். அவர்கள் இதன்மூலம் 'கழிக்கப்பட்ட' பாடசாலைக்கு செல்லுமாறு வலியுறுத்தப்படுகின்றனர். இதுதான் இலவசக் கல்வியின் லட்சணம். ஏழைகளுக்கு கல்வி மறுப்பும் பாகுபாடும் அதேவேளை வசதியானோர்க்கு கல்வி வாய்ப்பும் என்பது இன்றைய ஏற்றத்தாழ்வு கொண்ட சமூக அமைப்பில் எழுதப்பட்ட விதியாகவே இருந்து வருகின்றது. அதனையே பாடசாலை அனுமதிக்கான பண அறவீடு எடுத்துக் காட்டுகின்றது.

# ஆனந்த சங்கரியார் பிரதி சபாநாயகர்?

தமிழ் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி பாராளுமன்றத்தில் வெற்றிடமாக உள்ள பிரதி சபாநாயகர் பதவிக்குத் தெரிவாகலாம் என நம்பப்படுகின்றது. அதனை இந்து கலாச்சார அமைச்சர் முன்வைத்து உள்ளார். பிரதமரும் அதனை ஆமோதித்துள்ளார். ஆனால் ஆனந்தசங்கரியாருக்கு முழு மனம் இருந்த போதிலும் "தம்பியவை" என்ன சொல்லுவினமோ என்ற அச்சமும் ஒறு புறம். அதனை விட மனமில்லாமை மறுபுறமாகவும் இருந்து வருகிறார். இதில் ஆச்சரியம் இருக்க முடியாது. யூஎன்.பி. என்றால் தமிழர் தலைமைகளுக்கு நெஞ்சத்திற்கு நெருங்கிய சகாக்கள்தான். இது வர்க்க பாசத்தால் வழி வழி வந்த விடயமாகும். முன்பு மு.சிவசிதம்பரம் யூஎன்.பி. யால் உப சபாநாயகர் பதவி வழங்கி கௌரவிக்கப்பட்டார். அப்போது அவர் கூறிய வாசகம் "எனக்கு பதவி கிடைத்ததன் மூலம் ஒவ்வொரு தமிழனும் உப சபாநாயகராகியமைக்குச் சமனாகும்" என்றார். இப்போது சங்கரியார் அதனைப் பெற்றால் சுயநிர்ணய உரிமை, அரசியல் தீர்வு, சமாதானம், இயல்பு வாழ்க்கை யாவற்றையும் விடத் தமிழர் அனைவரும் பெரும் பாக்கியம் அடைந்து கொண்டவராவர் என்றும் கூறப்படலாம். எதனைக் கூறினாலும் அதனை நியாயப்படுத்தவும் ஆதரிக்கவும் ஒரு பழைமைவாதக் கூட்டம் தமிழர்கள் நடுவே இன்றும் ஆதிக்கத்துடன் இருந்து வரவே செய்கிறது என்பது தான் கவலைக்குரியது. மாற்று அரசியலுக்கான சிந்தனையை உள்வாங்காது விட்டால் இத்தகைய அரசியல் அவலங்கள் தொடரவே செய்யும்.

# இப்போது யப்பானும் இணைந்துள்ளது.

உலகின் பிரபல பல்தேசிய நிறுவனங்கள் 500களில் ஒன்றான மிற்சுயி கப்பல்களைப் பராமரிப்பது, பழுது பார்த்தல் போன்ற வேலையில் ஈடுபட உள்ளது. தினமும் திருகோணமலையூடாக 250 கப்பல்கள் செல்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதற்கு யப்பானின் மிற்சுயி என்ஜீனியரிங் கப்பற் கட்டுமானக் கம்பனி தீர்மானித்துள்ளது.

இத்துடன் 900 மெகாவாற் மின்சாரத்தை நிலக்கரியைப் பயன்படுத்திப் பெறுவதற்காக மூன்று மின் நிலையங்கள் நிறுவப்பட உள்ளன. முதலாவது மின் நிலையம் 300 மெகாவாற் மின்சாரத்தை வழங்கும். இவற்றிற்காக அறுபது கோடி (60) அமெரிக்க டொலர் முதலீடு செய்யப்படவுள்ளது.

இதுமட்டுமல்ல எப்பாவெல பொஸ்பேட் சுரங்கங்களில் முதலீடு செய்யவும் மிற்சுயி தீர்மானித்துள்ளது.

உலகிலேயே மிகவும் சிறந்த ரகமான பொஸ்பேட் இலங்கையில் இருப்பதால் அதையும் வெட்டி அள்ளிச் செல்ல யப்பான் தீர்மானித்துள்ளது.

இலங்கையில் சமாதானம் நிலைக்க வேண்டும் என்பதில் யப்பான் ஏன் அதிக கரிசனை காட்டி நிற்கிறது என்பதற்கு அதிக விளக்கம் தேவை இல்லை. உதவித்தொகைக்கான அடுத்த கூட்டம் யப்பானில் நடைபெற இருப்பதில் ஆயிரம் அர்த்தங்கள் இருக்கவே செய்யும்.

# ஒரு கல்வி வலயத்திற்கு இப்படியும் ஒரு பெயர்

யாழ் குடாநாட்டில் உள்ள கல்வி வலயங்களில் ஒன்றிற்கு "சிறுபான்மையோர் கல்விவலயம்" எனப் பெயர் சூட்டி அழைக்கிறார்கள் சில அதிபர்கள், ஆசிரியர்கள். இது செல்லப்பெயரோ அல்லது சிறப்புப் பெயரோ அல்ல. அது ஒருவகை அடையாளப் பெயராகும். குறிப்பிட்ட அந்த கல்விவலயப் பணிப்பாளர் தொட்டு கோட்டக்கல்வி அதிகாரிகள், மற்றும் பணிமனையில் பணியாற்றுவோர் பற்றிய சாதி அடையாளத்தை மிகத் துல்லியமாக அறிந்து எண்ணிக்கையைக் கூட்டி விகிதாசாரத்தைக் கணக்கிட்டே இவ்வாறான ஒரு பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். இதனை நக்கலாகவும் நையாண்டியாகவும் பரப்பி வருபவர்கள் சாதித்தடிப்புக் குறையாத சில அதிபர்களும் ஆசிரியர்களுமாவர். இதிலுள்ள விஷேசம் யாதெனில் அதே அதிபர்கள் ஆசிரியர்கள் அந்த கல்வி வலயப் பணிப்பாளரிடம் சென்று தமக்கும் தம்மவர்களுக்கும் தேவையான இருப்பு. மாற்றம், நியமனம், பதவி உயர்வு. இன்னும் பிற தேவைகளுக்கு சேர். சேர் போட்டு கைகளைப் பிசைந்து அலுவல் பார்த்துக் கொள்வார்கள். வெளியில் படியிறங்கி வந்தபின் தங்களது சாதிமான் புத்தியைக் காட்டியும் கொள்கிறார்கள். என்று தணியும் இந்த சாதியின் தாகம் என்று மடியும் இந்த பழமையின் மோகம்.

# அமைச்சர்களின் பிள்ளைகள் அட்டகாசம்

அமைச்சர்கள் எஸ்.பி.திஸநாயக்கா. மகிந்த விஜயசேகர ஆகியோரின் மூன்று பிள்ளைகளான தடியன்கள் சேர்ந்து ஐந்து நட்சத்திர ஹோட்டலில் மற்றொரு உயர் அரசாங்க அதிகாரியின் மகனைத் தாக்கியிருக்கிறார்கள். ஏற்கனவே அமைச்சர் மகிந்த சமரசிங்கவின் மகன் மற்றொரு தாக்குதலில் ஈடுபட்டதாகப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது. ஏற்கனவே முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையின் இரண்டு பிள்ளைகள் தாக்குதல்கள், கொலைகளில் சம்மந்தப்பட்டு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். அவரது கடைசி மகன் அண்மையில் ஒரு ஹோட்டலில் வைத்து ஒரு கலைஞரைத் தாக்கியதாக முறைப்பாடு செய்யப்பட்டது.

அமைச்சர்களின் பிள்ளைகள் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் உண்டு, குடித்து, கும்மாளமிட்டு, தாக்குதல்களில் ஈடுபட்டு அட்டகாசம் புரிவதற்குரிய பணம், செல்வாக்கு. ஆடம்பரம் எங்கிருந்து கிடைத்தது. அண்மையில் வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் ஒரு அமைச்சர் தனது பகல்வேளைச் சாப்பாட்டிற்காக ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் ஒரு லட்சம் ரூபா செலவிட்டதாக எதிர்த்தரப்பினர் குறிப்பிட்டனர்.

இவை ஒரு நாளில் அல்ல தொடர்ந்து மக்களின் பணத்தில் சுகபோகம் அனுபவித்து வருவது தொடரும் சங்கதிகள். நாட்டு மக்களின் வாழ்க்கைநிலை தொடர்ந்து தாழ்ந்து கொண்டு செல்கிறது. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர் நாற்பது வீதமாக உள்ளனர். உழைக்கும் மக்கள் பல்வேறு நெருக்கடிகளால் வறுமை கொடு நோய்களுக்கு ஆளாகி வருகின்றார்கள்.

ஆனால் அமைச்சர்களும் பிள்ளைகளும் குடும்பங்களும் சுற்றத்தவரும் மேட்டுக்குடி ஆடம்பர வாழ்வில் புரண்டு எழுகிறார்கள். மக்களை ஏமாற்றி பாராளுமன்ற அரசியலில் வாக்கு வாங்குவதில் இதே கனவான்கள் கைதேர்ந்தவர்கள். அரசியல் அறியாமையும் நிலவுடை வழிவந்த மேலோரைப் பணிந்து நிற்கும் அடிமைத்தன தாழ்வுணர்வும் மக்களிடையே இருந்து அகலாத வரை மக்களுக்கு விடுதலையோ விமோசனமோ கிடைக்க மாட்டாது. மாற்று அரசியலான மார்க்சிச அரசியல் மூலமே ஆளும் மேட்டுக்குடியினரையும் அவர்களது ஆட்சி அதிகாரத்தையும் எதிர்த்து நிற்கும் துணிவையும் ஆற்றலையும் பெற முடியும்.

# ஒரு மலையக மாணவனின் டயறி

**- எஸ். உதயசூரியன் -**

9.11.02 லீவு விடப்பட்டது. "றிப்போர்ட்" கொடுப்பார்கள் என எதிர்பார்த்தோம். ஆனால், கொடுக்கப்படவில்லை. பாடசாலை மட்ட கணிப்பீடு. பெரிய தலைவலியை கொடுத்துவிட்டதாக சேர்மார்களும், டீச்சர்மார்களும் ஏசிக் கொண்டிருந்தனர். றிப்போர்ட் கேட்கச் சென்ற எனது நண்பர்கள் ஆறுமுகம் சேரிடம் நல்லா பேச்சு வாங்கிக் கொண்டு வந்தனர். 12.00 ணிக்கு "ஆசிரியர் பார்ட்டி" என்று செல்வராஜ் சேர் சொன்னதும் எல்லோரும் ஹையா...! நல்லா வெளயாடலாம் என்று சத்தம் போட்டார்கள். சேர் சொன்னபடி 11.45க்கே பார்ட்டி ஆரம்பமாகிவிட்டது. நல்ல சாப்பாடு கோழிக்கறி. ஆட்டிறைச்சி. "சைவம்" என மேசையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. "ஏய் எல்லாம் ஓடிப்போய் விளையாடுங்க்"என்று பெரிய மேடம் சத்தம் போட்டார்கள். அதையும் கேட்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பிள்ளைகள் ஆறுமுகம் சேரிடம் நல்லா வாங்கிக் கிட்டு வந்தார்கள். ஓடி வரும்போது விழுந்து சிவகுமாருக்குக் காயம் பட்டது.

2.30மணி வரை விளையாடினோம். ஏ.எல். அண்ணன்மார்கள். அக்காமாரோடு ஏதோ "லவ்" பண்ணிக் கொண்டு. வகுப்பறையில் இருந்தபடியால். சிவலிங்கம் சேர் அவர்களை ஏசி விரட்டியதாக பத்மா கூறினாள். கிறிக்கட் விளையாடும் போது எங்கள் வகுப்பு பொடியன்களுக்கும் பத்தாம் வகுப்பு பொடியன்களுக்கும் பெரும் சண்டை ஏற்பட்டது. அட்டன் ஜெகதீஸ்வரன் அடித்ததால். சுப்பிரமணியத்துக்குத் தலையில் காயம் ஏற்பட்டது. "அவனுக்கு செம்மையா ஒதைக்க வேணுமென்று" எங்கள் வகுப்பு பொடியன்கள் கூறினார்கள். எங்கும் ஒரே "ஊத்தப்பேச்சு" சின்ன வகுப்பு பொடியன்கள் எல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். 2.35 அளவில் நான் வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

9.11.02 வீட்டிலிருந்தேன். ராகுல சாங்கிருத்தியாயனின். பொது உடமைதான் என்ன? என்ற புத்தகத்தை சிவம் கொண்டு வந்து தந்தார். ஆழமாகப் படித்தேன். மாலையில் விளையாடப் போனேன்.

9.11.02 அட்டன் போனேன். நகரசபை மண்டபத்தில் ஏதோ கூட்டம் என்று சொன்னார்கள். நானும் சுரேசும் போனோம். ஜனநாயக உரிமைகளுக்கான மலையக அமைப்பு என்று "பெனர்" போடப்பட்டிருந்தது. கடலை வாங்கி சாப்பிட்டுக் கொண்டே என்ன நடக்கின்றது என பார்த்துக் கொண்டிருந்தோம். "கொழும்பு கோச்சி" போய் சில நிமிடங்களில் கூட்டம் ஆரம்பமானது. பொலிஸ்கார் நிறைய பேர் இருந்தனர். அட்டன் தொழிற்பயிற்சி நிலையத்தின் அதிபரை மாற்றிவிட்டார்களாம். இப்படி சம்பவங்கள் நடக்கக் கூடாது என பேசினார்கள். நாங்கள் பாலத்திலே சாய்ந்துக் கொண்டு நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தோம். திடீரென சி.டபிள்யூசி. ஆட்கள் திமுதிமுவென கூட்ட மண்டபத்துள்ளே போனார்கள். ஒரே. சத்தம். சிறிது நேரத்தில் பலர் வெளியே வந்தனர். கிறிஸ்தவ பாதிரியார் ஒருவரும் வந்தார். தொடர்ந்து. உள்ளே போன கூட்டத்தினர் பேசத் தொடங்கினர். "ஜனநாயக உரிமையை தீர்மானிக்க வேண்டியது நாங்கடா", என்று உரத்து கத்தினார். வெளியே வந்தவர்கள் கசமுசாவென்று பேசிக் கொண்டே பொலிஸ் ஸ்டேசன் பக்கம் போனார்கள். யாரோ ஸ்பீக்கர் போட வேறு ஆட்கள் பேசினர். யாரோ மண்டபத்தை "புக்" பண்ண வேறு ஆட்கள் கூட்டம் போட்டனர். கேவலமாக இருந்தது. இந்த அசிங்கத்தைப் பார்க்க வேண்டாமென்று சுரேஸ் வீட்டுக்குப் போனோம். அங்கே. மயில் சேர் வந்தார். பிரின்சிப்பல்ல மாத்துறது டீச்சர். சேர்மார மாத்துறது. இன்னக்கா மொத மொத நடக்குது. யூஎன்.பி.காரன் கூட்டம் போட்டதால ஒரு பிரின்சிப்பல்ல மாத்திப்புட்டாங்க. தனக்கு ஜால்ரா போட்டதால தகுதி இல்லாதவனுங்களுக்கும் பிரின்சிப்பல் போஸ்ட்டு. வப்பாட்டிக வேற, தண்ணப்பாட்டி வேற. இப்படி அடுக்கிக் கொண்டு போனார். சுரேஸ் வீட்டில் ஹிந்திப் படம் பார்த்தோம். அநியாயம் செய்யும் அரசியல்வாதிகளை. அவனுங்கவுட்டு கூட்டத்தை அடிச்சி நொறுக்குற கத... ஆனால் தனி ஒரு மனிதனால் மட்டும் இப்படி செய்ய முடியுமா? என்ற கேள்வியோடு வீடு வந்தேன். ●

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தியா மோட்டார் கார்கள் அன்பளிப்பு

இலங்கையின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வசதியான மோட்டார் வாகனங்கள் வாங்குவதற்கும் அவர்களது உதவியாளர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வாங்குவதற்கும் இந்திய அரசாங்கம் 55 கோடி 80 லட்சம் ரூபாய்களை வழங்கியுள்ளது.

இவ் வாகனங்களுக்கு விண்ணப்பிக்கும் கடைசித் திகதி 2002 நவம்பர் 29 எனவும் அறிவிக்கப்பட்டது. திட்ட அமுலாக்க அமைச்சு வெளியிட்ட மேற்படி காலக்கெடுவுக்குள் 206 பா.உ.கள் தமது விண்ணப்பங்களை சேர்ப்பித்திருந்தனர். மிகுதி 19 பா.உ.களும் விண்ணப்பிப்பதற்கு வசதியாக முடிவுத் திகதி நீடிக்கப்பட்டது.

இந்த விண்ணப்பத்தை எந்தவொரு பா.உறுப்பினராவது தவறவிடவில்லை என்பது முக்கியமானதாகும். அதாவது ஏற்கனவே எல்லோரும் வாகனங்கள் வைத்திருப்பவர்களே. அத்துடன் அமைச்சர்களாக இருப்பவர்கள் ஐந்து. பத்து வாகனங்களுக்கு மேல் பாவனையில் வைத்திருக்கிறார்கள். அப்படி இருந்தும் கூட ஒருவரும் தவறாது விண்ணப்பித்துள்ளனர்.

அதற்குக் காரணம் ஒரு பா.உ. 19,000 அ.டொலர்களுக்கு மேற்படாத வாகனத்தை தீர்வையின்றி இறக்குமதி செய்ய முடியும். அதே வாகனத்தை தீர்வையுடன் இறக்குவதாயின் 50 லட்சம் ரூபா முடியும். அத்துடன் தீர்வையின்றி இறக்குமதி செய்யும் இவ் வாகனங்களுக்கான பணம் பா.உ.களின் மாதாந்தச் சம்பளத்தில் இருந்து கழிக்கப்படும். அதுவும் சிறு தொகையே யாகும்.

இந்தியா வழங்கும் இவ் உதவியில் உள்ள நிபந்தனை இந்திய வாகனங்களை மட்டுமே கொள்வனவு செய்ய முடியும் என்பதாகும். இவ்வாறான குறைந்த விலைச் சலுகையை எந்தப் பா.உ.தான் தவறவிடுவார். இதில் பெரிய வியாபாரமே உள்ளடங்கி இருக்கிறதை அவர்களே அறிவார்கள். இப்போதே வாகன இறக்குமதியாளர்களும் வாகன விற்பனைத்தரகர்களும் பா.உ.களைச் சுற்றி வட்டமிடத் தொடங்கிவிட்டனர்.

முன்னைய ஆட்சியினர் 2000ம் ஆண்டில் 70 ஆடம்பர குண்டு துளைக்காத மோட்டார் கார்களை இறக்குமதி செய்து கொண்டனர். இப்போது இந்த அரசாங்கம் அதனையும் பயன்படுத்துகின்றது. பா.உறுப்பினர்களைக் குளிர்வித்து வைத்திருந்தால்தான் அடுத்த பக்கம் திரும்பிப் பார்க்க மாட்டார்கள்.

மக்கள் போக்குவரத்தில்படும் கஷ்டங்கள். அவலங்கள் சொல்லும் தரமன்று. வாக்குப்போட்ட மக்கள் நெரிசலிலும். பொடி நடையிலும் நாளாந்தம் மாய்ந்து வருகின்றனர். ஆனால் வாக்குப்பெற்று பாராளுமன்றம் சென்ற சீமான்கள். சீமாட்டிகள் சகல செல்வங்களையும் பெற்று மேன் மேலும் சுகபோகம் தேடியும் நாடியும் அலைகின்றனர்.

அதேவேளை இந்திய அரசாங்கம் இவ்வேளை பார்த்து பா.உ.களுக்கு மோட்டார் வாகனங்களுக்கு உதவி இருப்பது தற்செயலானது அல்ல. இந்தியா இறால் போட்டுச் சுறாப் பிடிக்கவே நிற்கிறது. ஒரே நேரத்தில் உதவி என்பதையும் வியாபாரத்தையும் பா.உ.களை தனது பக்கப் பார்க்கச் செய்வதையும் இந்தியா மிக நாசுக்காக செய்துள்ளது. இந்த பா.உ.களுக்கு நாடு. மக்கள். பிரச்சினைகள் மீது உள்ள அக்கறைகளை விட சொத்து. சுகம் பெறுவதிலும் சென்ற தேர்தலில் செலவு செய்தவற்றை மீட்பதிலும் அடுத்த தேர்தலுக்கு பணம் சேர்ப்பதிலும் அதிக அக்கறையாக உள்ளனர். இதுவே பாராளுமன்ற ஜனநாயகத்தின் உச்சமாகும். ●

படிப்பகம்

# இலங்கை மீதான அமெரிக்க-இந்தியப் போட்டி மேலாதிக்கப் பிடி பற்றியதேயாகும்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாக்சிஸ்ட் லெனினிஸ்ட் (விடுதலை) பாட்னா மாநாட்டில் தோழர் தம்பையா உரை



இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணப்படுவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற சமாதான முயற்சிகளை அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆதரிப்பதாக கூறுவது தமிழ்மக்கள் மீதுள்ள அன்பினாலோ, அவர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் மீதுள்ள ஆதரவினாலோ அல்ல. மாறாக ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலை தென்னாசிய பிராந்தியத்தில் எவ்வித தங்கு தடையுமின்றி நிறை வேற்றிக் கொள்ளும் அமெரிக்க உள்நோக்கமேயாகும். ஏகாதிபத்திய உலகமயமாதல் ஒரு தேசிய இனத்தின் தேசிய அபிலாஷைகளுக்கு ஆதரவாக இருக்கப்போவதில்லை. இலங்கை தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைப் பிரயோகத்திற்கு ஏகாதிபத்திய உலகமய மாதல் பாதகமாகவே இருக்கும் என்ப தால் அமெரிக்காவின் ஆதரவு என்பது இலங்கை தமிழ்ப் பழமை வாதிகள் பெருமைப்பட்டுக்கொள்வது போன்று ஆரோக்கியமானதாக இருக்கப் போவதில்லை. அதேவேளை சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு என்று கூறிக் கொண்டு சமாதான முயற்சிகளை குழப்பவேண்டும் என்று எண்ணம் கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், செங்கொடியை அசைத்துக் கொண்டிருக்கும் பேரின வாத ஜே.வி.பிக்கும், சிஹல உருமய விற்கும் சில முஸ்லீம் தலைமை களுக்கும் ஆதரவாகவும் பக்கபல மாகவும் நடந்துகொள்ளும் இந்திய ஆளும்வர்க்கத்தின் மேலாதிக்க. விஸ்தரிப்புவாத நோக்கங்கள் அசட்டை செய்யப்படக் கூடியவையல்ல. அமெரிக்க ஏகாதிபத்திய உலகமய மாதலின் அடிப்படைகளை ஏற்றுக் கொண்டுள்ள இந்திய ஆளும்வர்க்கம் அதனது நிகழ்ச்சிநிரலை அதற்கேற்ற வகையிலேயே தென்னாசிய பிராந்தியத் தில் அமுல்நடத்த முயற்சிக்கிறது. இப்பிராந்திய நாடுகளை அதனதுள கட்டுப்பாட்டில் வைத்திருக்க திட்டமிட்டு செயற்பட்டுவருகிறது. அந்த அடிப் படையில் இலங்கையில் அமைதி ஏற் படுவது இந்திய ஆளும் வர்க்கத்திற்கு அவசியமற்றதாகும்.

பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணப்பட வேண்டும் என்ற மக்கள் இயக்கங்களை இடதுசாரிகளே பல வழிகளாலும் முன்னெடுத்து வருகின்றனர்.

விடுதலை புலிகள் இயக்கம் பேரின வாதத்திடமோ, இந்திய மேலாதிக்கத் திடமோ சமரசம் செய்யாது போராடியது. அதனால் அவ்வியக்கம் தமிழ் மக்களின் முதன்மைப் பிரதிநிதி யாக நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் முக்கிய பங்கை வகிக்க வேண்டிய தகுதியைப் பெற்றது. இவ்வாறு கூறுவது விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஜனநாயகத்திற்கான சான்றிதழ் வழங்குவதாகாது. அவ்வியக்கத்தின் சிறுமுதலாளித்துவ

அக்கறை செலுத்துகிறது. இந்திய ஆளும்வர்க்கத்திற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குமிடையிலான முரண்பாடுகள் ஆதிக்கப் போட்டியின் அடிப்படையிலானதேயன்றி ஏகாதி பத்திய உலகமயமாதலை முன்னெடுப் பதற்கு எதிரான அடிப்படையாகக் கொண்டவை அல்ல.

## சமாதான முழக்கத்தின் பின்னால் உலகமயமாதல் வேகமடைகிறது!

நிலைமைகளை தீர்மானிக்கின்றன. ஒரு கம்யூனிஸ்ட் தேசிய எல்லைகளை கடந்தவனாலும் ஒரு நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு. ஐக்கியம், சுதந்திரம் என்பவற்றை மேலாக மதிப்பவனாவான். இந்தியாவில் வாழும் கம்யூனிஸ் இந்தியாவின் இறைமை, ஒருமைப்பாடு, ஐக்கியம், சுதந்திரத்தை நேசிப்பது போன்று இப்பிராந்தியத் திலுள்ள ஏனைய நாடுகளினது இறைமை, ஒருமைப்பாடு, ஐக்கியம் சுதந்திரம் என்பவற்றையும் நேசிப்பவனாவான்.

கீழ் போராடிக்கொண்டிருக்கின்றனர். உலகமக்கள் நம்பிக்கை கொண்டுள்ள இன்னொரு உலகம் என்பது எல்லா மக்களையும் நாடுகளையும் சமமாக மதிக்கும், உலகவளங்கள் சமமாகப் பங்கிடப்படும் சமத்துவமான சமூகமே ஆகும். அதற்கு ஒரே தீர்வு புரட்சியே ஆகும்.

இந்திய ஆளும் வர்க்கம் உள்நாட்டில் இந்துத்துவத்தை கட்டிவளர்ப்பதில் அக்கறையாக இருக்கிறது. மதச்சார் பின்மையை தவிடுபொடியாக்கி




இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாக்சிஸ்ட் லெனினிஸ்ட் (விடுதலை) பட்னா நகரில் நடத்திய 7வது தேசிய மாநாட்டில் தலைமைக்குழுவினரையும் பிரதிநிதிகளையும் கானலாம்.

இந்த சூழ்ச்சியில் பேச்சுவார்த்தையின் மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருக்கும் இலங்கை மக்களுக்கு இந்திய மக்களும், கம்யூனிஸ்ட்டுகளும், இடதுசாரி, முற்போக்கு ஜனநாயக சக்திகளும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். சமாதான முயற்சிகளை குழப்ப எண்ணம் கொண்டுள்ள சக்திகளுக்கும், அம்முயற்சிகளில் வேறு உள்நோக்கங் களை கொண்டுள்ள சக்திகளுக்கும் எதிரான இலங்கை மக்களின் போராட்டத்திற்கும் இந்திய மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இவ்வாறு இந்திய பீகார் மாநிலத் தலைநகரமான பட்னாவில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மாக்சிஸ்ட்டு-லெனினிஸ்ட்டு) (விடுதலை) 7வது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போது புதிய-ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் இ. தம்பையா கோரிக்கை விடுத்தார்.

மேற்படி மாநாட்டு நிகழ்ச்சிகள் பாரதீய நிருத்திய கலா மந்திர் உள்ளக. வெளியக அரங்குகளில் நவம்பர் 25 முதல் 30 வரை நடைபெற்றன. தோழர் இ. தம்பையா அம்மாநாட்டில் உரை யாற்றும்போது மேலும் குறிப்பிட்டதாவது,

"இலங்கையின் இடதுசாரி இயக்கம் பலவீனமடைவதற்கு தேசிய இனப் பிரச்சினையும் யுத்தமும் முக்கிய காரணங்களாக அமைந்தன. ஆனால் யுத்தம் நிறுத்தப்பட்டு இனப்

வர்க்க நிலைப்பாட்டினால் இழைக்கப் பட்ட தவறுகள் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவை அல்ல. எனினும் அவ்வியக்கம் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதையும். ஐக்கிய இலங்கைக்குள் அரசியல்தீர்வு காணப்பட முடியும் என்று அவ்வியக்கம் நம்புவதையும் எமது கட்சி வரவேற்கிறது.

அதனால் தமிழ்மக்களின் தேசிய அபிலாஷைகளுக்கான சுயநிர்ணய உரிமைப் போராட்டம் சமாதான நடவடிக்கைகள் என்ற பேரில் அமெரிக்க ஏகாதிபத்திய அக்கறை களுடன் எவ்விதத்தில் சமரசம் செய்து கொள்ளக் கூடாது என்பதை எமது கட்சி எச்சரிக்கிறது. அதேபோன்று தமிழ்மக்களின் போராட்டம்

இப்பிராந்தியத்தில் ஏகாதிபத்திய உலக மயமாக்கலுக்கு எதிரான போராட்டம் என்பது இந்திய விஸ்தரிப்புவாதத்திற்கும் மேலாதிக்கத்திற்கும் எதிரான போராட்டமாகும். இந்திய மேலாதிக்கத் திற்கும் விஸ்தரிப்புவாதத்திற்கும எதிரான போராட்டம் என்பது சாராம் சத்தில் ஏகாதிபத்திய உலகமய மாக்கலுக்கு எதிரானதுமாகிறது. இப்பிராந்தியத்தில் மிகவும் பலமாக இருக்கும் இந்திய முதலாளிவர்க்கம் இப்பிராந்திய மக்களின் விடுதலைக்கு ஒருபோதும் ஒத்திசைவாக இருக்க மாட்டாது. இப்பிராந்திய விடுதலை இயக்கங்களை சீரழிப்பதில் இந்தியா முக்கிய பங்கை வகித்துவருகிறது. இப்பிராந்திய நாட்டு அரசியல்

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் ஐ.தே.மு. அரசாங்கத்திற்குமிடையிலான புரிந்துணர்வு என்பது ஏகாதிபத்திய உலகமயமாக்கலின் அக்கறைகளுக்கு விட்டுக்கொடுக்கும், அக்கறையாக வன்றி. அடக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கு அடித்தளமிடுவதாக இருக்க வேண்டும் என்பதே எமது கட்சி நிலைப்பாடாகும். அதை நோக்காகக் கொண்டே எமது கட்சி வேலைத்திட்டங்களை முன்னெடு க்கும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையின் பேரினவாத, முதலாளித் துவ அரசாங்கங்களுடனோ சக்திகளுட னோ சமரசம் செய்துகொண்டது மில்லை. ஏகாதிபத்தியத்திற்கும் மேலாதிக்கத்திற்கும் விட்டுக்கொடுக்

## சமாதானம் நாட்டிற்கு அவசியம் நியாயமான அரசியல் தீர்வு தேசிய இனங்களுக்கு முக்கியம்.

எவ்வகையிலும் இந்திய மேலாதிக்க நலன்களுக்குள் அமிழ்ந்து போய்விடக் கூடாது.

இந்திய ஆளும் வர்க்கம் ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக் கூடாகவே அதனது நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியம் அதனது நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதில் இப்பிராந்தியத்தில் இந்திய ஆளும்வர்க்கத்தை அதனது ஏஜன்டாக வைத்திருப்பதில் கூடிய

மாற்றங்களில் இந்திய ஆளும் வர்க்கம் முக்கிய செல்வாக்கை செலுத்துகிறது.

கம்யூனிஸ்ட்டுகளாகிய நாங்கள் மிகவும் வெளிப்படையானவர்கள். நாங்கள் வசிக்கும் நாடுகளின் குறிப்பான சூழ்நிலைகளுக்கே நாம் குறிப்பாக மேலான பொறுப்பானவர்களாயினும் ஏமது சர்வதேச கடமையை மறக்கலா காது. நாம் தேசிய எல்லைகளுக்குட் பட்டவர்களல்லர். சர்வதேச நிலைமை களே எமது குறிப்பான தேசிய

காது போராடி வருகிறது.

தமிழ் மக்களிடையே அவர்களின் சுயநிர்ணய உரிமைகளுக்காகவும், பெரும்பான்மை சிங்கள மக்களிடையே ஜனநாயக உரிமைகளுக்காக இயக்கங் களை முன்னெடுத்து வருகிறது.

தற்போதைய ஏகாதிபத்திய உலகமய மாக்கலுக்கு எதிராக பெரும் எண்ணிக் கையான மக்கள் 'இன்னொரு உலகம் சாத்தியமானதே' என்ற சுலோகத்தின்

வருகிறது. இலங்கை ஆளும் வர்க்கம் சிங்கள பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகிறது. பாகிஸ் தானின் ஆளும் வர்க்கம் முஸ்லிம் அடிப் படைவாதம் பற்றி அதிகம் பேசுகிறது. இவை ஆட்சியிலிருப்பதற்கான தந்தி ரோபாயங்கள். அவற்றின் மூலோபாயம் ஏகாதிபத்திய உலகமயமாதலே ஆகும். அவ்விடயத்தில் இந்திய, இலங்கை. பாகிஸ்தானிய, பங்களாதேஷ் ஆளும் வர்க்கத்தினர் கைகோர்த்துக் கொண்டு உறுதியாக இருக்கின்றனர்.

நாம் கம்யூனிஸ்ட்டுக்கள். முன்செல்ல வேண்டியவர்கள். நாம் பிளவுபடாத ஒரே குடும்பத்தினர் என்பதை ஐக்கியப்பட்ட வேலைகளால் நிரூபித்து புதிய உலகை படைப்போம். பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை உயர்த்தி நிற்போம். நேர்மையான சகல மாக்சிச லெனினிசக் கட்சிகள் இயக்கங்கள் அமைப்புகளுடன் ஐக்கியப்பட்டு முன்செல்வோம்.

இத்தேசிய மாநாட்டில் கூடி இருக்கும் பிரதிநிதிகள் அனைவருக்கும் அவர்களின் ஊடாக முழு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாக்சிஸ்ட் லெனினிஸ்ட் (விடுதலை) முழுவதற்கும் இலங்கையின் மாக்சிஸ லெனினிஸக் கட்சியான புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பாக புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது இரு கட்சிகளுக்கிடையிலான ஐக்கியம் வலுப்பெற வாழ்த்துகின்றேன்.

# இந்திய-யப்பான் கம்பனிகளின் கோரப் பிடிக்குள் இலங்கை

ஏற்கனவே திருகோணமலை எண்ணெ ய்க் குதங்களைத் தன் வச மாக்கிய இந்தியா இப்பொழுது பெற்றோலியப் பொருள்களின் இறக்குமதியிலும் விநியோகத்திலும் குதித்துள்ளது.

உலகின் இராட்சதக் கம்பெனிகள் 500ல் 249வது இடத்தையும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் முதலாவது இடத் தையும் வகிக்கும் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் நேரடி முதலீடாக ஐந்து பில்லியன்களை பங்கு களாகவும் மேலும் ஐந்து பில்லியன்களை உட்கட்டமைப்பு நடவடிக்கைகளுக்- காகவும் முதலீடு

செய்கிறது. இதற்காக இந்தக் கம்பெனியின் முழுமையான உடமையில் லங்கா இன்டியன் ஒயில் கோப்பரேசன் (LIOC) உருவாக்கப்பட் டுள்ளது.

இந்த இன்டியன் ஒயில் கோப்பரேசன் இந்திய பெற்றோலிய கைத்தொழிலில் 48வீதம் செயற்பாட்டைக் கொண் டுள்ளது. மீதமுள்ள 52வீதம் இடத்தை யும் பாரத் பெற்றோலிய கோப்பரேசனும். இந்துஸ்தான் பெற்றோலிய கோப்ப ரேசனும் கூட்டாகக் கொண்டுள்ளன.

இங்கு உருவாக்கப்பட்டுள்ள லங்கா இன்டியன் ஒயில் கோப்பரேசன் (LIOC) நிர்வாக இயக்குனர்/பிரதான நிறை வேற்று அதிகாரியுமான திரு.எம். நாகேஸ்வரனின் கூற்றுப்படி இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திட மிருந்தே ஆரம்பத்தில் பெற்றோலியப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படும். ஏதாவது பற்றாக்குறை ஏற்படும் பட்சத்தில் தாமே அவற்றை இறக்குமதி செய்வார்கள் எனவும் தெரிவிக்கின்றார்.

ஜனவரியில் 100 பெற்றோல் நிரப்பு நிலையங்கள் LIOCயினால் பொறுப்பேற் கப்படும். எந்தெந்த நிரப்பு நிலையங்கள் பொறுப்பேற்கப்படும் என்பது தேர்ந்தெ டுக்கப்பட்டுள்ளது. கொழும்பு. கண்டி. காலி. குருநாகல். அனுராதபுரம் ஆகிய பிரதான நகரங்களில் இவை அமைய உள்ளன. இந்தியா வெறுமனே பெற்றோலியப் பொருட்களை மட்டும் விநியோகிப்பதாக அமையாது. இந்த நிரப்பு நிலையங்களில் வாகனங்கள் கழுவும் சேவை. சுப்பர் மார்க்கட்டுக்கள். ஓட்டமேட்டற் ரெல்லர் மெசின்கள். உணவு மையங்கள். இன்டர் நெற் வசதிகள் என்பனவும் இடம்பெற உள்ளன. சுருங்கச் சொன்னால் பெற்றோலிய விநியோகம் என்ற பெயரில் உணவு விநியோகத்திலும் வங்கிச் சேவையிலும் அத்தோடு சம்பந்தப்பட்ட பல சேவைகள் மூலம் முழு நாட்டிலும் இக் கம்பெனியின் சுரண்டல் ஆதிக்கம் நிலைநிறுத்தப்படும்.

அதன் மூலம் இலங்கைப் பெற்றோலி யக் கூட்டுத்தாபனம் மூடு விழாவைக் கண்டு கொள்ளும். தனியார் மயத்தின் மூலம் ஒரு புறத்தால் அமெரிக்க மேற் குலக யப்பானிய பல்தேசிய நிறுவனங் களும் மறு புறத்தால் இந்தியக் கம்பெனி களும் நாட்டிற்குள் புகுந்து வருவதையே காண முடிகின்றது. நாட்டின் இறைமை யையும் தேசிய பொருளாதாரத்தையும் காட்டிக் கொடுத்து சகலவற்றையும் அந்நியருக்கு தாரை வார்த்து அடிமை சேவகம் புரியத் துணிந்துள்ள ஆளும் வர்க்கத்தை மக்கள் எழுச்சி மூலமாக மட்டுமே தட்டிக் கேட்க முடியும். ●

www.padippakam.com
படிப்பகம்

புதியபூமி
புதிய பூமி REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 10 ஜனவரி 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 54

எஸ்.47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.: 435117. 335844 பாக்ஸ்: 01-473757

# புதியபூமியின் உறுதிமொழி

புதியபூமி மிகுந்த நம்பிக்கையோடு புதிய ஆண்டினுள் பிரவேசிக்கின்றது.

புரட்சிகர வெகுஜன அரசியல் மார்க்கத்திற்கு வலுச் சேர்க்கும் தனது பணியில் மேலும் திடமாக வழி நடப்பதில் தன்னை உறுதியாக்கி நிற்கின்றது.

சுரண்டலும் ஒடுக்குமுறைகளும் ஏற்றத்தாழ்வுகளும் சமூக நீதி மறுப்புகளும் நிறைந்து காணப்படும் இன்றைய சமூக அமைப்பில் புதியபூமி திடமான மாற்றுக் கோட்பாட்டுடனும் கருத்துப் பரப்புரைகளுடனும் தனது பணியினைத் தொடர்கிறது.

புதியபூமி உழைக்கும் மக்களை அறிவுறுத்தி அநீதிகள், அவலங்களை அறிய வைத்து மக்களின் அடிப்படை நலன்களை வென்றெடுக்க தனது எழுத்துக்களைப் பயன்படுத்துகின்றது.

புதியபூமிக்கு கோட்பாட்டு அடிப்படையும் இலட்சிய பூர்வமான குறிக்கோளும் உண்டு. சமூக விடுதலையும், சமூக மாற்றமும் அதன் தொலை நோக்குடைய இலக்காகும்.

அநீதி, அடக்குமுறை, சுரண்டல், ஏமாற்று, அரசியல் மோசடி இன்றும் பிற முதலாளித்துவக் கேவலங்கள் அனைத்தையும் எதிர்த்து மக்கள் பக்கத்தில் நின்று புதியபூமி குரல் கொடுத்து வருகின்றது.

ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமை என்னும் போர்வைகளுக்குள் மறைந்து கொண்டு ஏகப் பெரும்பான்மை மக்களின் வாழ்வைப் பறித்து ஒரு சிறு தொகையினரின் சொத்து, சுக வசதிக்காக முன்னெடுக்கப்படும் அனைத்தையும் புதியபூமி எதிர்த்து நிற்கிறது.

வர்க்க, இன, சாதிய, பால் அடிப்படையிலான முரண்பாடுகளையும் அவை காரணமான ஒடுக்குமுறைகளையும் அடையாளம் கண்டு ஒடுக்கப்படுவோர் பக்கத்தில் புதியபூமி உறுதியாக நிற்கின்றது.

புதியபூமி கடும் விமர்சனம் செய்து தாக்குதல் தொடுக்கின்றது என்றும் அவ்வாறு செய்வது பண்பற்ற செயல் என்றும் சில முனைகளில் இருந்து குரல் வைக்கப்படுகிறது.

புதியபூமி தனி நபர்களையோ அவர்களது எழுத்துக்கள், கருத்துக்களை வெறுமனே விமர்சனம் செய்ய வேண்டும் என்பதற்காகவோ தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்காகவோ எவர் மீதும் தாக்குதல் தொடுப்பதில்லை.

இன்றைய ஏற்றத்தாழ்வு மிக்க கொடூர சமூக அமைப்பிலே மக்கள் சார்பாகவும் அவர்கள் வேண்டி நிற்கும் சமூக நீதிக்காகவும் ஆளும் அதிகாரப் பீடத்தையும் அவர்களுக்கு சார்பான அரசியலையும் சகல வழிகளாலும் ஏமாற்றி மோசடி செய்யும் சமூகப் புல்லுருவிகளையும் புதியபூமி தாக்கியே தீரும். பழமைவாதத்தைக் கட்டிக் காத்து நிற்கும் சாதியவாதிகளையும் பெண்களை அடக்கி ஆள நிற்கும் ஆணாதிக்க வாதிகளையும் புதியபூமி தயவு, தாட்சண்யம் இன்றித் தாக்கியே தரும்.

பழமையின் பெயராலும் நவீனத்துவத்தின் குரலெனவும் தூய அழகியல் என்றும் பேசி மக்கள் இலக்கியக் கோட்பாட்டிற்கு எதிராகப் பேசியும் எழுதியும் வரும் இலக்கியக் கனவான்களின் போலித் தனத்தையும் பிற்போக்கு நிலைப்பாட்டையும் புதியபூமி தோலுரித்தே வரும்.

பேரினவாத ஆளும் வர்க்க சக்திகள் அவர்கள் யாராக இருப்பினும் தேசிய இனங்கள் மீது ஒடுக்குமுறையினை எவ்வடிவத்தில் ஏவினாலும் அதனை புதியபூமி கடூரமாக எதிர்த்து நிற்கும். ஏகாதிபத்திய உலகமயமாதலின் கீழ் முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு மக்கள் விரோத, நாட்டு விரோத செயற்பாட்டையும் புதியபூமி எதிர்த்து முறியடிக்க முன் நிற்கும். மாக்சிசத்திற்கு எதிராக அரசியல், சமூகத் தளங்களிலும் கலை இலக்கியக் களங்களிலும் எந்தக் கொம்பன்கள் எழுதினாலும், பேசினாலும், செயல் புரிந்தாலும் புதியபூமி விட்டுக் கொடுக்காது சமரசம் செய்யாது சமர் புரிந்தே தீரும்.

மக்களே, மக்கள் மட்டுமே உலக வரலாற்றின் உந்து சக்தியாவர் என்னும் வரலாற்று உண்மையின் பக்கத்தில் புதியபூமி தன்னை உறுதியாக நிலை நிறுத்தி ஒடுக்குமுறைக்கு உள்ளாகி நிற்கும் அனைத்து மக்களின் சார்பாக நின்று புதியபூமி போராடி வரும் என்பது இப் புதிய வருட உறுதிமொழியாகும்.

- ஆசிரியர் குழு-

# பேரினவாத ஒடுக்குமுறையும் பேச்சுவார்த்தை முன்னெடுப்பும்

இலங்கையில் பேரினவாத ஒடுக்கு முறையின் வளர்ச்சிக்கு ஒரு நூற்றாண்டு வயதாகிறது. இந் நாட்டின் தமிழ், முஸ்லீம், மலையகத் தேசிய இனங்கள் இவ் ஒடுக்கு முறைக்கு உட்பட வேண்டியதாயிற்று. கடந்த இரண்டு தசாப்த கால தேசிய இன விடுதலைப் போராட்டமும் அதனை நசுக்க முன்னெடுக்கப்பட்ட யுத்தமும் தற்போது தற்காலிகமாக ஓய்வைப் பெற்று நிற்கின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தம், யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பன பிரதான நிகழ்ச்சி நிரலாகி நிற்கின்றன. மூன்றாவது கட்டப் பேச்சுவார்த்தை முடிவடைந்து நான்காவது சுற்றுக்கு நாள் குறிக்கப்பட்டுள்ளது. இனிமேல் தான் கடினமான கட்டத்திற்குள் பேச்சு வார்த்தை புகுந்து கொள்ளப் போகின்றது.

ஒரு புறத்திலே அமெரிக்கா, மேற்கு நாடுகள், யப்பான் ஆகியன பெருந் தொகைக் காசுக் கட்டுகளுடன் புனரமைப்பு, புனர்வாழ்வு, மறுசீரமைப்பு என்பனவற்றை வடக்கு-கிழக்கில் முன்னெடுக்க உதவி வழங்குவதாகக் கூறி நிற்கின்றன. மறு புறத்திலே இலங்கையின் ஆளும் பேரினவாதக் கட்சியானது தனது வர்க்க இனத்துவ நிலைக்கு ஏற்ப மிகவும் உன்னிப்பான உள் இயல்புடன் பேச்சுவார்த்தைக் காய்களை நகர்த்தி வருகின்றது.

இதேவேளை எதிர்க்கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி., சிஹல உறுமய போன்றன வழமையான பேரினவாதக் கூச்சலைக் கிளப்பி நிற்கின்றன. இதற்கு இந்தியா தனது பங்களிப்பை வழங்கி வருகின்றது. தற்போதைய சமாதான முயற்சிகளைக் குழப்பி முறியடித்துக் கொள்ள திரை மறைவில் காரியங்கள் ஆற்றப்படு கின்றன.

இன்றைய சூழலில் பேரினவாத ஆளும் வர்க்க சக்திகள் அரசாங்கப் புறத்திலும் எதிர்த் தரப்பிலும் தமது பேரினவாத நிலைப்பாட்டை விட்டிறங்கி கீழே வந்து நியாயமான அரசியல் தீர்வுக்கு வருவார்களா? என்பதே பிரதான வினாவாக எழுந்து நிற்கின்றது. ஏனெனில் இலங்கையில் பேரினவாதம் என்பது பௌத்த சிங்கள இன அடிப்படையைக் கொண்டதாகும். அது இந்தியாவின் இந்துத்துவ பாசிச சக்திகளின் இன்றைய வளர்ச்சி போன்று இல்லாது விடினும் அதன் அம்சங்களை உள் வாங்கி மேலும் தன்னை நிலைப்படுத்த முயன்று வருகின்றமை கவனத்திற்குரியதாகும்.

இரண்டு பாராளுமன்றக் கட்சிகளிலும் இப் பேரினவாதம் படிந்து இறுகி வந்திருப்பதை எக்காரணம் கொண்டும் மறைக்க இயலாது. யூஎன்.பி.யிடம் இருக்கும் பேரினவாத நிலைப்பாட்டை தமிழர் பழமைவாதத் தலைமைகள் பெரிதுபடுத்துவதுமில்லை எதிர்த்து நிற்பதும் இல்லை. யூஎன்.பி. ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இப் பாராளுமன்றத் தலைமைகள் மிக நெருக்கமாகவே இருந்து வந்துள்ளன. அதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான ஆட்சியை வன்மமாக எதிர்த்து அவர்களிடம் மட்டுமே பேரினவாதம் இருப்பதாகவும் காட்டி வந்துள்ளமை முக்கியமானதாகும்.

அவ்வாறே சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்து வந்த பாராளுமன்ற இடதுசாரிகள் யூஎன்.பி. எதிர்ப்பை மட்டும் காரணமாகக் கொண்டார்களே தவிர தாம் அங்கம் பெற்ற ஐக்கிய முன்னணியில் முன்னெடுக்கப்பட்ட பேரினவாத ஒடுக்கு முறை பற்றி விமர்சிக்கவோ எதிர்க்கவோ தயாராக இல்லாத நிலையிலேயே இருந்து வந்தனர்.

மேலே குறிப்பிட்ட இரு தரப்பினரதும் பேரினவாத ஒடுக்கு முறை பற்றிய கண்ணோட்டம் இன்றும் பல்வேறு வழிகளில் நீடித்து வருவதைக் காண முடிகின்றது. இத்தகைய நிலைப்பாடு தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்குப் பாதகமானதாகவே காணப்படுகின்றது.

பேரினவாத ஒடுக்கு முறை எங்கிருந்து வந்தாலும் அதனை எதிர்த்து நிற்கின்ற நிலைப்பாடே இன்று உறுதியானதாகத் தேவைப்படுகின்றது. இன்றைய சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுப்பிலும் இவை கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டியவையாகும்.

**வெகுஜனன்**

யூ.என்.பி. அகப் புறச் சூழ்நிலை காரணமாகவும் அமெரிக்க மேற்குலக நெருக்கத்தினாலும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வந்துள்ளதே தவிர முற்று முழுதாகத் தமது பேரினவாத நிலைப்பாட்டைக் கைகழுவிக் கொண்டுள்ளது என எவரும் தப்புக் கணக்கு போட்டுவிடக் கூடாது. அதனாலேயே போராடி நிலைநிறுத்தி வந்தவற்றை பேச்சுவார்த்தை மேசையில் சொல்லாடி இழந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருப்பது அவசியம்.

ஏனெனில் யூஎன்.பி. ஆளும் வர்க்க சக்திகளுடன் வர்க்க நிலையில் மிக நெருக்கமாக இருந்து வரும் தமிழ்ப் பழமைவாத பாராளுமன்ற மேட்டுக்குடி ஆதிக்க அரசியல் சக்திகள் பணிந்து நசிந்து விட்டுக் கொடுக்கும் நிலை மீண்டும் உருவாகக் கூடாது. ஏதோ கிடைப்பது கிடைக்கட்டும் இப்போதைக்கு பெற்றுக் கொள்வோம் என்ற கருத்து நிலை பரப்பப்படுவது ஆபத்தானதாகும்.

ஏனெனில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரதேச சுயாட்சி என்பதைச் சிதைக்கும் நோக்கிலான விளக்கங்களும் வியாக்கியானங்களும் தமிழ் ஊடகங்களிலே வெளிவந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக சமஷ்டி பற்றிய விளக்கங்கள் வெவ்வேறு வகைகளில் முன்வைக்கப்படுகின்றன. கருத்துக்கள் முன்வைக்கப்படுவதும் விவாதங்கள் இடம்பெறுவதும் ஆரோக்கியமான திசையில் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

அதேவேளை பௌத்த சிங்கள இன வாதத்தை அடிப்படையாகக் கொண்ட சிங்கள, ஆங்கில ஊடகங்கள் விஷமம் பரப்புகின்றன. பிரதேச சுயாட்சி பற்றிய தெளிவான நிலைப்பாட்டை புலிகள் இயக்கம் முன்வைத்த பின்பும் அதனை தீர்வுக்குரிய சாதக அம்சமாகப் பார்ப்பதற்குத் தயாரில்லாத நிலையில் இவ் இனவாத ஊடகங்கள் பிரதேச சுயாட்சியும் பிரிவினையின் ஒரு வடிவம் என்றே பிரச்சாரம் செய்து வருகின்றன. இத்தகைய பரப்புரைகளுக்குப் பின்னால் உள்நாட்டு பேரினவாத பிற்போக்கு சக்திகளும் அயல்நாட்டு ஆதிக்க வாதிகளும் இருந்து வருகிறார்கள் என்பது தெளிவாகின்றது.

இன்று இலங்கை நாட்டிற்கும் அனைத்து மக்களுக்கும் சமாதானம் தேவை என்பது சகல நிலைகளிலும் முன்னுரிமையுடன் விளங்கும் பிரதான அம்சமாகும். அச் சமாதானம் இரண்டு தசாப்த கால பேரினவாத ஒடுக்கு முறை யுத்தத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு மிக மிக அவசியமானதாகும். அதே வேளை இப் பேரினவாத ஒடுக்கு முறை யுத்தம் சிங்கள மக்களுக்கும் பெரும் இழப்புகளைத் தேடிக் கொடுத்துள்ளதை மறுக்க அல்லது மறைக்க முடியாதுள்ளது.

இந் நிலையில் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் முன்னால் இரண்டு தெரிவுகள் மட்டுமே உண்டு. ஒன்று இன்றைய சமாதான சூழலைப் பாதுகாத்து பேச்சுவார்த்தை மேசையில் விட்டுக் கொடுப்புடன் நியாயமான அதிகாரப் பகிர்வுக்கு வந்து பிரதேச சுயாட்சி என்ற நிலைக்கு இணங்கிக் கொள்வது. அதன் மூலம் ஒன்றுபட்ட இலங்கைக்குள் தேசிய இனப்பிரச் சினைக் குத் தீர்வு தேடிக் கொள்வதாகும். இரண்டு. இன்றைய சந்தர்ப்பத்தைப் புறந்தள்ளி சமாதான சூழலைக் குழப்பி பேரினவாத நிலைப்பாட்டை உச்சப்படுத்திக் கொள்வதன் ஊடாக மீண்டும் யுத்தத்திற்குள் நாட்டையும் மக்களையும் தள்ளிக் கொள்வதாகும்.

இவ் இரு தெரிவுகளில் பேரினவாத சக்திகள் எக் கட்சிகளில் இருந்தாலும் ஒன்றைத் தெரிவு செய்து கொள்ள வேண்டிய முக்கியமான கால கட்டத்திலேயே இருக்கின்றன. அழிவுப்பாதையா? அன்றி ஆக்கபூர்வ மான தீர்வுப் பாதையா? என்பதை தூர நோக்கில் வைத்து முடிவுக்கு வர வேண்டியவர்கள் சிங்கள மக்களேயாவர்.

இலங்கையின் பேரினவாத ஆளும் வர்க்க சக்திகள் தமது உயர் வர்க்க மேட்டுக்குடி சாதிய அரசியல் அதிகாரத்தையும் தலைமைத்துவத்தையும் தக்க வைத்துக் கொள்வதற்காகவே இனவாதத்தை மக்கள் மத்தியில் பரப்பி பேரினவாத ஒடுக்கு முறையை நடைமுறைப்படுத்தி வந்தனர். இதன் சாதக, பாதக விளைவுகளைச் சிங்கள மக்கள் இன்றாவது பகுப்பாய்வு செய்து மறு மதிப்பீட்டுக்கு உள்ளாக்க வேண்டும். 54 வருட "சுதந்திரத்தின்" கீழ் சிங்கள ஆளும் வர்க்கத் தலைமைகள் சாதாரண சிங்கள மக்களுக்கு எவற்றை பெற்றுக் கொடுத்தன. இருபது வருட யுத்தத்தால் சாதித்தவை யாவை? இன்றைய சூழலில் சிங்கள மக்கள் பேரினவாத ஒடுக்கு முறையின் அம்சங்களை ஆராய்ந்து தாங்கள் யாருடைய பக்கத்தில் நிற்பது என்பதைத் தீர்மானிப்பது அவசியமாகும்.

# தீ விபத்திலும் இனவாதப் பிரச்சாரம்

அண்மையில் புறக்கோட்டை ஐந்து லாம்புச் சந்தியில் அமைந்துள்ள கடைத் தொகுதியில் தீ விபத்து ஏற்பட்டது. இதனால் இருபது பேர் இறந்தனர். 20 பேர்வரை கடும் தீக்காயங்கள் அடைந் தனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் மூச்சுத்திணறி ஒரே அறையில் பரிதாப மாக உயிரிழந்தனர்.

இத்தீவிபத்தும் அதில் சிக்கி உயிர் இழந்தவர்களின் காயப்பட்டவர்களின் பரிதாபம் ஒரு புறத்தில் துயரமாகி நின்றது. அதேவேளை மறுபுறத்தில் இத்தீவிபத்தை இனவாதமாக்கிய பிரசாரங்கள் சிங்கள ஆங்கில ஊடகங்களில் பரப்பப்பட்டன.

இக்கடைத்தொகுதியில் அமைந்துள்ள கடைகள் யாவும் தமிழர்களுடையது என்பதை மையமாக வைத்தே இனவாதம் பரப்பப்பட்டது. தீப்பிடித்த கடையில் புலிகளின் குண்டுகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன என்றும் அதில் ஒன்று வெடித்தே தீப்பிடித்து பரவியதாகவும் பிரச்சாரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. மேலும் ஒருபடி மேலே சென்று தமிழ்க் கடைகளில் இவ்வாறு குண்டுகள் பதுக்கப்பட்டு வருவதாகவும் தேவை ஏற்படும்போது கொழும்பு நகரமே நாசமாக்கப்படும் அபாயம் காத்திருப்பதாகவும் கூறப்பட்டது. அத்துடன் இதுதான் சமாதானத்திற்கான பரிசா என்றுகூடக் கேள்வி தொடுக்கப்பட்டது.

எரிகிற வீட்டில் விறகு பொறுக்கியவர்கள் போன்றே இவ் இனவாதிகளின் ஊடகங்கள் தமது கேடுகெட்ட பிரசாரத்தை நடாத்திக் கொண்டன. சமாதானத்தை குலைக்க எங்கே ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் என அலைந்து நிற்கும் இவ் இனவாதிகளுக்கு ஐந்து லாம்புச் சந்தி தீ விபத்து கைகொடுக்கும் என எதிர்பார்த்தனர்.

தொடர்ச்சி 11ம் பக்கம்..

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# பிரதேச சுயாட்சி-சுயநிர்ணயம்-சமஷ்டி ஒரு கண்ணோட்டம்

நமது அரசியல் நிருபர்



தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் சமஷ்டி அடிப்படையில் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்க உடன்பட்டுள்ளனர். எனவே இதுதான் 1948இலேயே நாங்கள் கேட்டது என்று தமிழரசுக் கட்சியின் வாரிசுகள் துள்ளிக் குதிக்கலாம். எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து 77 ஆண்டுகளாகின்றன என்று உரிமை கோருகிற கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன. ஆனால் அவர்களில் எவரும் சமஷ்டிக் கேட்டபோது மனதில் இருந்த சமஷ்டியும் இன்று ஆலோசிக்கப் படுவதும் ஒன்றா?

சமஷ்டி ஆட்சி என்பது அரச அதிகாரப் பகிர்வுக்கான ஒரு ஏற்பாடு. உலகின் பலவிதமான சமஷ்டி அமைப்புக்கள் உள்ளன. அமெரிக்கா கூட 50 அங்கங்களைக் கொண்ட சமஷ்டி ஆட்சிதான். உடைவுக்கு முன் சோவியத் யூனியனும் சமஷ்டி தான். நாம் கருத்திற் கொள்ள வேண்டியது ஏதென்றால். எந்த விதமான அதிகாரங்கள் எந்த விதமாகப் பகிரப்படுகின்றன என்பதே. சமஷ்டி என்பது பிரிவினைக்கான ஒரு மூடுதிரை என்று ஜே.வி.பி. வடக்கு-கிழக்கு இணைந்த எந்த அமைப்பையும் பிரிவினை என்றே சொல்லும். ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவிப்பது எதையுமே குறிக்க வேண்டியதில்லை.

பண்டாரநாயக்க சமஷ்டி கேட்ட நோக்கம் கண்டிய மாவட்டங்களில் கரையோரச் சிங்கள வணிகர்களது பொருளாதார ஆதிக்கம் பற்றிய அச்சத்தாலேயே. பண்டாரநாயக்க கேட்ட சமஷ்டியில் மலையகத் தமிழருக்கோ. முஸ்லிம்களுக்கோ எதுவிதமான அதிகாரப் பகிர்வுக்கும் இடமிருக்கவில்லை. தமிழரசுக்கட்சி கேட்ட சமஷ்டியும் அதிகம் வித்தியாசமானதல்ல. அது வடக்கு-கிழக்கில் தமிழ்த்தேசிய முதலாளியத்தின்

ஆதிக்கத்துக்கு உத்தரவாதமளிக்கும் ஒரு சமஷ்டியைக் கேட்டதே ஒழிய இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் அன்றைய நிலைமையைக் கூடச் சரிவர விளங்கிக் கொள்ளவில்லை. தமிழரசுக்கட்சி கேட்ட சமஷ்டி முறையில் முஸ்லிம்கள் முழு இலங்கையிலும் பரவி வாழும் யதார்த்தம் கணிப்பில் எடுக்கப்படவில்லை. மலையகத் தமிழரது நிலைமையை சமஷ்டி ஆட்சி எந்த விதமாக முன்னேற்றும் என்பது கூறப்படவில்லை. கொழும்பையே தாயகமாகக் கொண்ட தலைவர்மாரால் தென்னிலங்கை வாழ் தமிழர் பற்றி எதையுமே தெளிவாகக் கூற முடியவில்லை.

தமிழரசுக்கட்சி கேட்ட சமஷ்டி ஒரு அரசியல் அலங்கார வார்த்தையென்ற அளவுக்கு அப்பால் போகவில்லை. இந்தச் சமஷ்டி எப்படிப்பட்டது என்று தமிழரசுக்கட்சி சிங்கள அரசியற் தலைமைகட்கோ. சிங்கள மக்களுக்கோ என்றும் விளங்க முயலவுமில்லை. அதன் தலைவர்மாருக்கே அது விளங்கியிருக்கும் என்று சொல்வதும் கடினம்.

தமிழீழப் பிரிவினைக் கோரிக்கை தமிழரசுக்கட்சியின் வாரிசான தமிழர் விடுதலைக் கூட்டணியால் முன்வைக்கப்பட்ட போது அந்தரங்க சுத்தியுடன் அவர்கள் தனித் தமிழீழம் கேட்கவில்லை என்பதும் ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் தலைமையுடன் இரகசிய உடன்படிக்கை செய்து கொண்டே நாடகமாடினார்கள் என்பதும் பின்னர் கசிய வந்த உண்மைகள். இந்தப் பசப்பைப் பகிரங்கப்படுத்திய காரணத்தால் தமிழ் மாக்ஸிய-லெனினியவாதிகள் தமிழ்த் துரோகிகள் என்று பழிக்கப்பட்டார்கள்.

தேசிய இனப்பிரச்சினையை வரலாற்றில்

1957ல் பண்டாரநாயக்கா செல்வநாயகம் உடன்படிக்கையில் பிரதேச சபைகள் என்ற ஆலோசனையும் தமது சுயாட்சிக் கருத்து நிலையிலிருந்தே கம்யூனிஸ்ட்டுக்கள் ஆதரித்தனர். கம்யூனிஸ்ட் கட்சி 1963ல் பிளவுபட்டது.

மலையகத் தமிழரும் தனித்துவமான தேசிய இனங்களாக உருவெடுப்பதையும் அவர்கள் சரிவர அடையாளங் கண்டனர்.

எனவேதான் தனித் தமிழீழம் அல்லாமல் வேறில்லை என்ற முழக்கங்கள் நடுவே தமிழரின் பாரம்பரியப் பிரதேசங்களில்

தங்கியுள்ளது. அனைத்திலும் முக்கியமானது சுயநிர்ணயம் ஆகும்.

இன்று சமஷ்டி என்று ஆனந்தக் கூத்தாடுகிற தமிழ்த் தலைமைகள் சுயாட்சி என்பதைப் பற்றிப் பேசவே தயங்குகின்றன. சுயநிர்ணயம் என்பதை நினைத்துப் பார்க்கவும் அஞ்சுகின்றன. அதற்கேற்பத் தமிழ். ஆங்கில நாளேடுகளும் செய்தி விமர்சன ஏடுகளும் சுயாட்சி , சுயநிர்ணயம் என்ற கோட்பாடுகளைத் தவிர்க்கின்றன. இது ஆதிக்க அரசியல் சக்திகளுக்கு ஆமாம் போடும் ஒரு போக்கேயாகும். அத்துடன் பேரினவாதிகள் எதைக் கொடுத்தாலும் வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற அடிமைத்தன வற்புறுத்தலுமாகும்.

## சமஷ்டி என்ற பெயரில் சுயநிர்ணய உரிமையுடனான சுயாட்சி மழுப்பவோ மறுக்கப்படவோ கூடாது.

திரிபுவாதிகள் பாராளுமன்ற ஆசனங்கட்காக கொள்கைக்குத் துரோகமாக நடந்தார்கள். தொழிலாளி வர்க்கத்தையும். சிறுபான்மைத் தேசிய இனங்களையும் காட்டிக் கொடுத்தார்கள். ஆனால் மாக்ஸிய-லெனினியவாதிகளான உண்மையான கம்யூனிஸ்ட்டுக்கள் தமது நிலைப்பாட்டில் தொடர்ந்தும் உறுதியாகவே நின்றார்கள்.



பிரிந்து செல்லும் உரிமையுடனான சுயாட்சி என்பதையும் மலையகத் தமிழர்கட்குச் சுயாட்சி அமைப்புகள் தேவை என்பதையும் அவர்கள் தளராது வற்புறுத்தினர்.

தனித் தமிழீழம் கேட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி முதல் இன்று அரசியல் லாபத்துக்காகப் பிளவுபட்டு இயக்கம் நடத்துகிற தலைமைகள் எல்லாம் மாறி மாறிப் பேரினவாத அரசாங்கங்களுடன் ஒத்துழைத்துப் பிரிவியைனைத் தலை முழுகிப் "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்று அல்லற்பட்ட வேளைகளிலும் சுயநிர்ணய அடிப்படையிலான சுயாட்சி என்ற நிலைப்பாட்டை மாக்ஸிய-லெனினியவாதிகள் மட்டுமே முன்வைத்து வந்தனர்.

இன்று சமஷ்டி என்ற பேரின் பின் சுயாட்சி என்ற கருத்தாக்கம் மழுப்பப் படுகிறது. இதற்கு அரசாங்கமும் அதற்குக் காவடி எடுக்கும் கட்சிகளும் ஒத்துப் போகின்றன. விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் இறங்கி சுயநிர்ணயத்துடன் கூடிய தமிழர் பிரதேச சுயாட்சி என்ற கருத்தை முன்வைத்தபோது அதை மாக்ஸிய-லெனினியவாதிகள் மனமார வரவேற்க



விடுதலைப்புலிகளின் தமிழர் தாயகம் அயலார் தலையீட்டுக்கு இடமற்ற ஒரு சுயாட்சியாக இல்லாது போனால். தமிழர் தாயகமாக இராது. எனவேதான் சுயாட்சி உரிமைகளை முழுமையாகக் கொண்ட ஒரு சமஷ்டி அமைப்பை வற்புறுத்த வேண்டியுள்ளது. அது போலவே. வரையறுக்கப்பட்ட உரிமைகளைக் காரணங் காட்டித் தமிழினத்தின் தேசிய இன ஒடுக்கல் மீண்டும் தலை தூக்குவதைத் தவிர்க்கப் பிரிந்து போகும் உரிமை முக்கியமாகிறது.

## விழிப்பும் முன்னெச்சரிக்கையும் இல்லாதுவிடின் யாவும் கைநழுவிச் சென்றுவிடும்.

வைத்துச் சரிவர நோக்கி வந்தவர்கள் கம்யூனிஸ்ட்டுக்கள் மட்டுமே. சிங்களம் மட்டும் சட்டம் வருவதற்கு முன்னமே சிங்களப் பேரினவாதத்துக்கும் தமிழ்த் தேசியவாதத்துக்கும் முரண்பாடுகள் இருந்து வந்ததை அடையாளங் கண்டு தமிழர் வாழும் பாரம்பரியப் பிரதேசங்கட்குச் சுயாட்சி என்ற தீர்வு ஆலோசனையை முன்வைத்தது கம்யூனிஸ்ட் கட்சியே. இதனை 1954ல் வல்வெட்டித்துறை மாநாட்டு ஆவணமாக வடிவமைத்துப் பிரகடனப்படுத்தியது. இத்தீர்மானத்தை தமிழரசுக்கட்சி திட்டமிட்டே மறைத்து பிரசாரம் செய்து வந்தது.

தேசிய இனப்பிரச்சினை மேலும் சிக்கலான சூழ்நிலையின் கீழ். தனித் தமிழீழம் கேட்கப்பட்ட போது சுயநிர்ணயக் கோட்பாட்டை முன்வைத்துப் பிரிவினை என்ற நிலைப்பாட்டிற்கு மாற்றாகப் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயாட்சி என்ற நிலைப்பாடு இருபது வருடங்கட்கும் முன்பே மாக்ஸிய-லெனினியவாதிகளால் முன்னெடுக்கப்பட்டது. அதே சமயம். தமிழ்த் தேசியவாதத் தலைமையால் மற்றத் தமிழ் பேசும் சமூகங்கள் இணைந்த ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டத்தை வழிநடத்த இயலாததையும் முஸ்லிம்களும்

முடிந்தது. அது அவர்கள் வற்புறுத்தி வந்த நிலைப்பாட்டுக்கு உடன்பாடு என்பதாலேயே.

சமஷ்டி என்பது முழுமையான சுயாட்சியாக இருக்க வேண்டும் பிரிந்து போகிற உரிமை மறுக்கப்பட்ட சமஷ்டி ஆட்சி சுயநிர்ணயம் அற்றது. சமஷ்டி ஆட்சி என்பது ஒரு வகையான சுயாட்சி முறையாக இருக்க முடியுமே ஒழிய அது தன்னளவிலேயே முழுமையானதல்ல. தமிழ்த் தேசிய இனத்தின் முழுமையான தேசிய ஆளுமையை அது எப்படி நிறைவு செய்யும் என்பது இந்த சமஷ்டி ஆட்சிக்கு என்ன அதிகாரங்கள் உள்ளன என்பதிலேயே

சமகால இலங்கை வரலாறு பாராளுமன்ற ஏய்ப்புகளின் வரலாறு. ஏமாற இடமளியாத ஒரு வாய்ப்பை இடையறாத போராட்டமே பெற்றுத் தந்தது. ஆயினும் விழிப்புடனும் எதிர்காலம் பற்றிய எச்சரிக்கையுடனும் இல்லாது போனால் சமஷ்டி என்ற பேரில் சுயநிர்ணயம் மட்டுமன்றிச் சுயாட்சி அதிகாரமும் கை நழுவக் கூடும்.

சமஷ்டி ஆட்சி வர முன்னரே அது என்னவிதமான அமைப்பு என்று தெரியாமலே விடுதலையை வென்று விட்ட தோரணையில் தமிழ்த் தலைவர்மாரும் தமிழச் செய்தி நிறுவனங்களும் நடந்து கொள்வது ஆயுதப் போராட்டத்துக்கு முந்திய காலங்களையே நினைவூட்டுகிறது.

# நரபலி நரேந்திர மோடி குஜராத்தில் மீண்டும் பதவியில்!

## இந்து-முஸ்லீம் வெறி வளர்க்கப்படுகிறது!

"மகாத்மா", "அகிம்சா மூர்த்தி" என்றவாறு போற்றிப் புகழப்படும் காந்தியின் சொந்த மாநிலம் குஜராத். அந்த மண்ணிலே பத்து மாதங்களுக்கு முன்பு ஒரு திட்டமிட்ட நரபலி வேட்டை நடாத்தப்பட்டது. அதற்கு தலைமை தாங்கியவர் அம்மாநில முதலமைச்சர் நரேந்திர மோடி. அந்த வேட்டையில் பலியானவர்கள் ஒன்றுமறியாத முஸ்லீம் மக்கள். அடிக்கடி இந்திய மாநிலங்களில் இடம் பெற்ற இந்து-முஸ்லீம் கலவரம் என்பதில் குஜராத் வன்முறை மிகப் பெரும் மனித அழிவையும் சொத்தழிப்புகளையும் கண்டு நிற்கிறது. மூவாயிரம் முஸ்லீம்கள் வெட்டியும். சுட்டும். எரித்தும் கொல்லப்பட்டனர். பலகோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன அல்லது சூறையாடப்பட்டன. முஸ்லீம் மக்களுக்கு எதிரான அண்மைய காலத்தின் மிகப் பெரும் வன்முறை அதுவாகும். இதனால் ஒன்றரை லட்சம் முஸ்லீம்கள் இருப்பிடம் இழந்து அகதிகளாகிக் கொண்டனர்.

கடந்த ஆண்டில் இடம்பெற்ற இவ் இந்து-முஸ்லீம் வன்முறையானது தற்செயலான ஒன்றல்ல. இந்துத்துவ -பாசிச சக்திகளால் திட்டமிடப்பட்டதாகும். குஜராத்தின் கோத்திரா புகையிரத நிலையத்தில் 58 இந்துவாதிகள் எரித்துக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பழிவாங்குவதாகக் கூறியே முஸ்லீம் மக்கள் மீது கொடிய வன்முறை ஏவி விடப்பட்டது. அந்த முஸ்லீம் விரோத வன்முறைக்கு இரண்டு உள்நோக்கங்கள் இருந்தன. ஒன்று, நாடு முழுவதற்குமான இந்துத்துவ -பாசிச அலையை குஜராத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டும் என்பதாகும். இரண்டாவது. பதவியில் இருக்கும் பாரதியா ஜ. கட்சியானது அதன் முதலமைச்சர் நரேந்திர மோடியின் தலைமையில் மீண்டும் ஆட்சிக்கு வந்து அதிகாரத்தில் அமர்ந்து கொள்வதற்குரிய அடிப்படையைத் தேடிக்கொள்வதாகும். அத்துடன் அடுத்து வரவிருக்கும் மாநிலத் தேர்தல்களுக்கு ஒரு பரீட்சார்த்தமும் குஜராத்தில் செய்யப்பட்டது.

இந்துத்துவ -பாசிச வெறியர்களுக்கு மேற்கூறிய பரீட்சார்த்தத்தில் வெற்றி கிடைத்திருக்கிறது என்றே கூற வேண்டும். கடந்த மாதம் இடம்பெற்ற குஜராத் மாநிலத் தேர்தலில் நரபலி நரேந்திர மோடியும். பாரதியா ஜனதாக் கட்சியும் "அமோக" வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவ்வெற்றிக் களிப்பைப் பகிர்ந்து கொள்ள அமசடக்கி இந்து வெறியர் வாஜ்பாயியும். அதிரடி இந்து வெறியர் எல்.கே.அத்வானியும் குஜராத் சென்று முதலமைச்சரின் தலைமையிலான பதவி ஏற்பில் கலந்து கொண்டுள்ளனர். நரேந்திர மோடி "நல்லாட்சி நடத்துபவர்". "நேர்மையானவர்" என்று போற்றிப் புகழப்பட்டிருக்கிறார். ஆனால் இவ்வளவிற்கும் இத்தேர்தலில் அறுபது வீதத்திற்கும் குறைவானவர்களே வாக்களிப்பில் கலந்து கொண்டுள்ளனர். இது இந்திய "ஜனநாயகத்தின் மகிமை"யைக் காட்டி நிற்பதாகும்.

குஜராத்தில் திட்டமிட்டு நடாத்தப்பட்ட இன வன்முறைப் படுகொலை சொத்தழிப்பை பார்த்த போது இலங்கையின் 1983ம் ஆண்டின் யூலை இன வன்முறையே கண்முன் வந்து நின்றது. அங்கே இந்துத்துவ -பாசிச சக்திகள் திட்டமிட்டன. நரேந்திர மோடி தலைமை தாங்கினார். குஜராத்தின் கோத்திரா புகையிரத நிலைய சம்பவம் காரணமாகியது. இந்துத்துவ உணர்வுகள் பழிவாங்கியது என நியாயம் கூறப்பட்டது. பாதிக்கப்பட்டோர் முஸ்லீம் மக்கள். பொலிசும். அதிகார வர்க்கமும் நரேந்திரமோடியின் பக்கத்தில் நின்றனர்.

அவ்வாறே இங்கே 1983ல் பௌத்த-சிங்கள பேரினவாதிகள் திட்டமிட்டனர். ஜே.ஆர்.தலைமை தாங்கினார். யாழ். திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டமை காரணமாகியது. சிங்கள தேசிய உணர்வு பழிவாங்கியது என நியாயப்படுத்தப்பட்டது. தமிழர்கள் எங்கும் பாதிக்கப்பட்டனர். ஆயுதப் படைகள். சிறைக் காவலர்கள் பக்க பலமாக நின்றனர்.

அங்கே நூறு முஸ்லீம்கள் வீட்டோடு வைத்து கொழுத்தி எரிக்கப்பட்டனர். இங்கே 53 பேர் சிறைச்சாலையில் கோரமாக கொலை செய்யப்பட்டனர். கடைகள். வீடுகள் எரிக்கப்பட்டு தமிழர் அகதிகளாகினர்.

குஜராத் இன வன்முறைக்கும் 83 யூலை இன வன்முறைக்கும் நூற்று க்கு நூறு வீத ஒற்றுமை எவ்வாறு ஏற்பட்டது. முதலாளித்துவ ஜனநாயகமும். இன. மத வெறித்தனங்களும் அவற்றின் மறைவில்



இந்து மதவெறிக் கொலைக் கும்பலிடம் உயிர்ப் பிச்சை கேட்டு மன்றாடும் குத்புதீன் நஸ்ருதீன்.

நிற்கும் ஆளும் சுரண்டல் வர்க்க சக்திகளும் தான் காரணமா கும். அவர்கள் எங்கிருப்பினும் ஒரே நோக்கும். போக்கும் கொண்டவர்களேயாவர்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் ஊடகங்கள் பற்றி (9)

## சிறு சஞ்சிகைகள் ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் வேறுபாடு உண்டு

தேசபக்தன்

சிறு சஞ்சிகைகள் என்ற கருத்து தமிழகத்திலிருந்துதான் இலங்கைக்கு அறிமுகமானது. எனினும் கையெழுத்துப் பத்திரிகைப் பாரம்பரியம் ஒன்றும் தமிழகத்திலும் பின்பு இலங்கையிலும் இருந்து வந்துள்ளது. இன்று தட்டெழுதல், பிரதி எடுத்தல் என்பன மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளதால் சிறுதொகையிலான பிரதிகளைத் தயாரித்து ஒரு குறிப்பிட்ட வட்டத்தினரிடையே விநியோகிக்க முடிகிறது. ஐரோப்பியத் சிறுதமிழ்ச் சஞ்சிகைகள் ஜேர்மனியிற் தொடங்கியபோது இவ்விதமாக நண்பர்களிடையே விநியோகிக்கிற முயற்சியாகவே உருவெடுத்தன.

எனினும், சிறு சஞ்சிகை எனப்படுவது நண்பர்கள் வட்டத்துக்குள் விநியோகிக்கப்படும் பிரசுரம் என்பதற்கும் அப்பால், பொதுவான சில அக்கறைகளை அடையாளப்படுத்துவதும் அவ்வாறான அக்கறையையுடையவர்களது வாசிப்புக்கும் பங்களிப்புக்குமாக நடத்தப்படுவதுமான ஏடு எனலாம். ஒரு சிறு சஞ்சிகை தன்னை வலிந்து ஒரு வட்டத்துக்குள் குறுக்கிக்கொள்ள விரும்புவதாகக் கூறமுடியாது. தான் அடையாளப்படுத்தும் அக்கறைகட்கு நெருக்கமான தேவையை ஒவ்வொரு சிறுசஞ்சிகையும் ஏற்கிறது. அது எண்ணிக்கையிற் பெருந்தொகையிலானோரைச் சென்றடைய வேண்டுமென்றால் அது அடையாளப்படுத்தும் அக்கறைகள் மாறவும் விரிவடையவும் வேண்டிவரும். அப்போது அது சிறுசஞ்சிகை என்ற வரையறைக்கு வெளியே வந்து பர்வலான வாசிப்புக்குரிய பத்திரிகையாக மாறுகிறது.

ஒரு சஞ்சிகை சிறு சஞ்சிகையா என்பதை அதன் வாசகர்களது எண்ணிக்கையை மட்டும் வைத்தோ அது கடைகளில் விற்பனைக்கு வைக்கப்படுவதில்லை என்பதை வைத்தோ முடிவு செய்ய இயலாது. விஞ்ஞான ஆய்வுச் சஞ்சிகைகள் கடைகளில் விற்கப்படுவதில்லை. பல சமயங்களில் சிலநூறு பிரதிகளே வெளியாகின்றவை குறிப்பிட்ட சில அக்கறையுடையவர்களாலேயே வாசிக்கப்படுகின்றன. அவற்றை யாருமே சிறு சஞ்சிகைகள் என்பதில்லை. ஏனெனில் அவை விஞ்ஞான அறிவு நிறுவனங்கள் சார்ந்த பிரசுரங்கள். அவற்றின் இலக்கு தனி வாசகர்களை விட நூலகங்களாகவே இருக்கும். எனவே சிறு சஞ்சிகை என்பதற்கான இறுக்கமான வரைவிலக்கணத்தை விட ஒரு சஞ்சிகையின் செயற்பாட்டுத் தளத்தை வைத்தும் அதன் உள்ளடக்கத்தை வைத்தும் விநியோக முறையை வைத்தும் சில முடிவுகட்கு வரலாம். தனிப்பட்ட முறையிலான விநியோகம் ஒரு முக்கியமான அடையாளமே எனினும் சில சூழ்நிலைகளில் புரட்சிகர அரசியல் பத்திரிகைகளும் அவ்வாறே விநியோகிக்கப்படுகின்றன. அவ்வாறே சில சமயங்களிற் தனிப்பட்ட நட்புக்காகக் கடைகளிற் கூடிச் சிறு சஞ்சிகைகள் விற்கப்படுகின்றன.

சிறு சஞ்சிகைகள் எனப்படுவன வணிக நோக்குடன் நடக்கும் பத்திரிகைகளினின்றும் அரசியல் அமைப்புக்களதும் வெகுசன அமைப்புக்களதும் வெளியீடுகளினின்றும் வேறானவையாகவே கருதப்படுகின்றன. தமிழகச் சூழலில் இவற்றுட்பல ஒருவிதமான இலக்கிய மேட்டிமைத்தனத்துடன் தம்மை அடையாளங்காட்டி வந்துள்ளன. எனினும் தம்மைச் சிறு சஞ்சிகைகளாகக் கருதாத மணிக்கொடி முதல் சரஸ்வதி, தாமரை ஆகியன உட்படச் சுபமங்களா, காலச்சுவடு என்பன வரையிலான தமிழக ஏடுகளும் இலங்கையில் பலகாலமாக வெளிவந்துள்ளன. மல்லிகை, தாயகம், அலை உட்பட்ட பலவேறு ஏடுகளும் கனதியான ஏடுகளாகவே வெளிவந்துள்ளன. இவை எவையுமே சிறுசஞ்சிகைகளாகத் தம்மைப் பிரகடனப்படுத்திக் கொள்ளவில்லை.

தமிழகச் சிறுசஞ்சிகைப் பாரம்பரியத்தின் இலக்கிய மேட்டிமைத்தனம், தனிநபர் வாதம், வலதுசாரி அரசியற்சிந்தனை, தூய அழகியல்வாதம் என்பனவற்றுடன் தன்னை இனங்கண்டு வந்துள்ளதை நாம் தவறவிடுவது கடினம். சில ஏடுகள் 'ஜனநாயக' முறையிலும் 'பத்திரிகா தர்மத்துடனும்' நடந்து கொள்வதாகத் தோன்றினாலும் அவற்றின் வர்க்கப் பார்வையும் சமூக நோக்கும் அவை வற்புறுத்தும் தூய இலக்கியப் பார்வையை ஊடறுத்துத் தம்மை வெளிக்காட்டத் தவறுவதில்லை.

மேற்குறிப்பிட்ட பார்வையின் தவிர்க்க முடியாத ஒரு விளைவாக. இலக்கியப் பார்வை. இலக்கியத்தின் அரசியல் போன்றன தொடர்பான விவாதங்கட்கும் அப்பால். தனிப்பட்ட கோபதாபங்களும் காழ்ப்பும் தனிநபர் வழிபாடும். தமிழகச் சிறு சஞ்சிகைப் பண்பாட்டின் ஒரு முக்கிய அடையாளமாகிவிட்டது.

இடதுசாரிச் சிறு சஞ்சிகைகள் எனப்படுவனவும் இவ்வாறான நடத்தைக்கு விலக்கானவையாக இருந்ததில்லை.

மேற்குறிப்பிட்ட தனிநபர்வாதக் கோளாறுகளுக்கு முக்கியமான ஒரு காரணம் சிறு சஞ்சிகைகளது பிரகடனஞ்செய்யப்பட்ட உன்னத நோக்கங்கட்கும் அப்பால் அவற்றின் குறுகிய பார்வையாகும். இலக்கியத்தின் சமூக அடையாளத்தை மறுத்து தனி மனித ஆளுமையையும் மேதமையையுமே இலக்கிய உன்னதத்தின் அளவுகோல்களாக்கும் போது தனிமனிதவாதம் படிப்படையாக மேலோங்குகிறது.

இடதுசாரிச் சிறுசஞ்சிகையிற்கூட ஒரு தெளிவான படைப்பிலக்கிய நோக்கும் கூட்டு முயற்சியும் அரசியல் நடைமுறை சார்ந்த வழிகாட்டலும் இல்லாதபோது நனிநபர்வாதமும் சீரழிவும் வந்து இணைந்துவிடுகின்றன. இலக்கியம் ஒரு கூட்டுமுயற்சியாகும் போது அதன் சமூகப் பார்வை வலுப்பெறுகிறது.

**தரம் என்பது அரசியல்-சமூகப் பார்வையினின்றும் பிரித்துப்பார்க்க முடியாத ஒன்றாகும்.**

இலங்கையில் தமிழக இலக்கியப் போக்குகளின் எதிரொலிகள் எப்போதுமே கேட்கப்பட்டுள்ளன. எனினும் தமிழகச் சிற்றேடுகளது பாணியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளும் வெகு விரைவிலேயே துவண்டு விடுகின்றன. ஒரு சிலரது ஆத்ம திருப்திக்காகச் செய்யப்படுகிற காரியங்களாகவே பல சிற்றேடுகள் வந்து போயுள்ளன.

இலங்கையில் கலை இலக்கிய ஏடுகளை வணிக நோக்கில் வெற்றிகரமாக நடத்துவது கடினமாக இருந்ததற்கு அவற்றின் விற்பனையும் விநியோகமும் தொடர்பான பிரச்சினைகளும் காரணமாகவும் விளம்பர ஆதரவு போதாமையாலும் கைநட்டத்தில் அல்லது வரவும் செலவும் மட்டுமட்டாக மட்டுமே நடத்தப்படுகின்றன. இந்தியச் சிற்றேடுகட்கும் இலங்கையின் கலை-இலக்கிய ஏடுகட்குமுள்ள முக்கிய ஒற்றுமை இதுவே.

இதைவிட, இலங்கையில் வெளியாகும் நூல்களையும் சஞ்சிகைகளையும் தமிழகத்தில் விநியோகிப்பதில் பல இடர்பாடுகள் இருந்து வந்துள்ளன. இந்திய அரசு கடைப்பிடிக்கும் கண்டிப்பான இறக்குமதிக் கொள்ளைகள் பற்றி இதுவரை எதுவும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. மறுபுறம் ஈழத்து இலக்கியம் பற்றித் தமிழகத்தில் செய்யப்படுகிற ஆரவாரங்களெல்லாம் பெருமளவும், அங்கு வெளியாகிற ஏடுகளை இங்கும் அதிலும் முக்கியமாகப் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர் நடுவிலும் விற்கிற அக்கறையுடன் தொடர்புடையதுதான். அது எதிர் பார்க்க வேண்டியதே. உண்மையான அக்கறை என்பது பொதுவான அரசியல் நோக்கும் சமூக அக்கறை களும் இரு தரப்பிலும் பொதுவாக உள்ள இடத்தில் மட்டுமே இயலுமானவை.

இலங்கையைப் பொறுத்தவரை தமிழகத்தினதுடன் ஒப்பிடக்கூடிய சிறு சஞ்சிகைப் பாரம்பரியம் என எதுவும் இல்லை. இங்குள்ளது ஒரு தரமான இலக்கிய அக்கறை சார்ந்த ஒரு பாரம்பரியமே. தரம் என்பது ஒவ்வொருவரது அரசியல்-சமூகப் பார்வையினின்றும் பிரித்துப் பார்க்க இல்லாதது என்பதை மனதிற் கொண்டே இதைக் கவனிக்க வேண்டும். அதைவிட முக்கியமாக. இலங்கையில் உருவாக்கி வளர்க்கப்பட்ட கனதியான திறனாய்வு மரபு. அது இன்று நலிந்துள்ள நிலையிலும். தமிழகத்துச் சிற்றேடுகளது தனிநபர்வாதக் கோளாறுகளினின்றும் நமது சஞ்சிகைகளை சிறிது காத்து வந்துள்ளது.

---

# யாழ் குடாநாடு பாலைவனமாகுமா?

## நில நீர் பற்றிய அறிவு அவசியம்

## ஆழ்ந்து சிந்தித்து செயல்படவேண்டும்? அல்லாதுவிடில் மக்கள் இடம் பெயர்வார்கள்

-நிலநீர் ஆய்வாளர் க. நடனசபாபதி-

யாழ்ப்பாணத்தின் மேற்கே புங்குடுதீவு. எழுவைதீவு. அனலைத்தீவு. நயினாதீவு. நெடுந்தீவு ஆகிய பல தீவுகள் உள்ளன. இச்சிறு தீவுகள் மேற்குப் புறங்கள். கிழக்குப் புறங்களை விட உயர்ந்து காணப்படுகிறது. மேற்குப் புறத்தே வாழ்வோர் விவசாயத் தொழிலையும், கிழக்குப் புறத்தே வாழ்வோர் மீன்பிடித் தொழிலையும் மேற்கொண்டு வருவது வழக்கம். மேற்கே வாழ்வோர் விவசாயத் தொழிலை வெற்றிகரமாக மேற்கொள்ள நன்னீர் தேவை. பெரும்பாலான கிணற்று நீர் உவர்த்தன்மை அடைந்து விட்டதனால் தமது விவசாயத் தொழிலை கைவிட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதனால் வேறு வழியின்றித் தவிக்கலாயினர். இத் தீவுகளில் தொடர்ந்து வாழ முடியாமல் வன்னிப் பரப்பிற்கு இடம் பெயர்ந்தனர்.

இப்பகுதியில் தமது விவசாயத் தொழிலை மேற்கொண்டனர். இப்பகுதி மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் சிறிய தீவுப்பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வந்தோரே.இதன் காரணமாகவே வேலணையைச் சேர்ந்த பண்டிதர் க. பொ. இரத்தினம் கிளிநொச்சிப் பகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நிலை உருவானது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நில நீரைத்தான் மக்கள் தங்கள் சகல தேவைகளுக்கும் பயன்படுத்த வேண்டியுள்ளனர். கிணறுகளிலிருந்து துலா-கப்பி மூலம் போதியளவு நீரைப் பெற முடியாத காரணத்தால் எரிவாயு. மின்சாரம் ஆகியவற்றால் செயல்படும் எந்திர இறைக்கும் பொறிகளைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். ஊற்றுகள் வாயிலாகக் கிணறுகளில் ஊறிச் சுரக்கும் நீரின் அளவைக் காட்டிலும் கூடதலான அளவு நீர் இறைத்து எடுக்கப்படுவதனால் உவர் நீர் நன்னீரின் இடத்தைப் பிடிக்கத் தொடங்கி விட்டது. இதன் கர்ரணமாகவே அநேக நன்னீர் வழங்கிய கிணறுகள் உவர் நீர் வழங்கும் கிணறுகளாக மாறத் தொடங்கிவிட்டன. இத்தகைய மாற்றம் ஏற்படுவதற்கு உரிய காரணங்களை இப் பிரதேச விஞ்ஞானிகள் நன்கு அறிந்திருந்தனர். கல்வியறிவு குறைந்தோர் காரணம் அறியாது திணறலாயினர்.

இந்நிலையில் இஸ்றவேல் தேசத்து அறிஞர்கள் சிலர் இந்நன் நீர் வளத்தை நன்கு அறிந்து ஆலோசனை வழங்க அழைக்கப்பட்டனர். இந்த அறிஞர் குழு யாழ்ப்பாணப் பகுதிக்கு 1964ல் வந்திருந்தனர். யாழ்ப்பாண மக்களின் நீர்ப்பிரயோக முறைகளை நன்கு ஆராய்ந்து பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாயினர். இவர்கள் யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இப்படித்தான் தெரிவித்தளர்.

"யாழ்ப்பாணக் குடாநாடு விரைவில் ஒரு பாலைவனமாகும்" என்ற இச்செய்தி அக்காலச் செய்தித்தாள்க் அனைத்திலும் வெளிவந்தது. இது நாட்டையே பெரிதும் கலக்கத்திற்குள்ளாக்கி விட்டது. இதன் விளைவாக 1965 லிருந்து யாழ்ப்பாணத்து நிலநீர் ஆய்வை மேற்கொள்ளத் தொடங்கியது. இந்த ஆய்வுக்கு வட பிரதேச விஞ்ஞான ஆசிரியர்கள் பூரண ஆதரவு நல்கினர். ஆனாலும் கூட யாழ்ப்பாண மக்களின் நீர்ப்பாவனையில் மாற்றமெதுவும் ஏற்படாத காரணத்தில் அநேக நன்னீர்க் கிணறுகள் உவர் நீரக் கிணறுகளாக மாறி வருகிறது. இப்படிப்பட்ட நிலை தொடர்ந்து வளர்ச்சி பெற்றால் வாழுவதற்கே தகுதியற்ற பிரதேசமாக மாறிவிடும். இதன் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து வேறிடம் செல்ல நேரிடும் காலம் வெகு தூரத்தில் இல்லை. அதனால் யாழ்ப்பாணம் பாலைவனமாகும் என்பது இடம்பெற்றுவிடுமோ என்ற அச்சம் நிலவுகிறது.

### குளங்கள்

குடாநாட்டில் குளங்கள் சுமார் 1000க்கு மேல் உள்ளன. இவை அனைத்தும் மக்களால் உருவாக்கப்பட்டவை அல்ல. அமிலத்தன்மையை அடைந்த மழைநீரால் கழுவப்பட்ட பாதைகளில் ஏற்பட்ட பதிவுகளே குளங்களாக உருவெடுத்துள்ளன.

குளத்தில் நிரம்பியுள்ள நீர் கால்நடைகளின் தேவைகளையும். சலவை மேற்கொள்ளவும் பொருள்களைக் கழுவவும் பயன்படுகிறது. விவசாயத் தேவைகளுக்கும் பயன்படுகின்றன.

இக்குளங்களை மழைநீர் நிரப்புகிறது. நிலத்தில் ஓடிச் செல்லும் மழைநீர் நிலத்தைக் கழுவிக் கொண்டு செல்லும் போது மண்ணையும் சுமந்து செல்கிறது. அப்போது வண்டல் மண்ணையும் கொண்டு செல்வதனால் பெரும்பாலான குளங்கள் களி மண்ணால் நிரம்பிவிடுகின்றன. அதனால் அநேக குளங்கள் தூர்ந்து விடுகின்றன. இதனால் குளங்கள் தேங்கி வரும் நீரை வைத்திருப்பதற்குப் பதிலாக களிமண் நிரம்பி மூடப்பட்டு விடுகின்றன.

### குளங்களை ஆழமாக்குதல்

குளங்கள் தூர்ந்து போய்விட்டால் களிமண்ணை அகற்றுவது குளங்களில் நீர் நிரம்ப ஏதுவாகும். குளங்களிலிருந்து களி மண்ணை முற்று முழுதாக அகற்றிவிட்டால் குளத்தில் நீர் சிறிதும் தங்கியிராது. களிமண் மிகவும் நுண்ணிய துணுக்கைகளால் ஆனபடியால் களிமண் நீர் உட்புகவிடாது. இதனாற்றான் களி மண்ணை நீரை உட்புகவிடாத பொருள் என்று அழைக்கின்றனர். களிமண் ஒரு றுயவநசரிசழழக அயவநசயைட என்று கூறவர். ஆகவே ஓரளவிற்கு குளத்தின் அடிப்பகுதியில் களிமண் என்கிற வண்டல் மண்ணை தங்கவிட்டால் குளத்தில் நீர் தங்கியிருக்கும். குளம் நீர் கொண்டதாகவிருக்கும். இதனை நில மேல் நீர் என்பர். இக்குளத்து நீர் சலவைத் தொழில். கால்நடைக்கான தேவைகளோடு விவசாயத்திற்கும் பயனாகும்.

குளங்களிலிருந்து முழு வண்டல் மண்ணையோ களிமண்ணையோ நீக்கிவிட்டால் குளத்தில் நீர் தங்குவதற்கும் பதிலாக நிலவடியை அடைந்துவிடும். இதனால் நிலவடி நீரின் கொள்ளளவு ஓரளவுக்குத்தான் அதிகரிக்கும். நுண்துளைகளில் கொள்ளக்கூடிய அளவுக்கு மேற்பட்ட நீர் பக்கவாட்டில் தள்ளப்பட்டு கடலை அடையும். ஆகவேதான் குளங்களை ஆழப்படுத்தும்போது கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். குளத்தில் நீர் நிரம்பவும் வேண்டும், மேலதிக நீர் நில வடி நீராகவும் மாற வேண்டும் எனக் கருதினால் குளத்திற்குள் கிணறுகளை அமைத்தல் வேண்டும். குளத்தின் அடியில் ஓரளவு வண்டல் இருக்காவிட்டால் குளத்தில் நீர் தேங்கி இருக்கும். மேலதிக கிணறுகள் வாயிலாக நிலத்தின் அடியை அடையும். இந்த நோக்கங்களைக் கருத்தில் கொண்டு பொன்னாலைக் குளம். அத்துளுக்குளம் போன்றவற்றில் கிணறுகளை அமைத்துள்ளார்கள் போலும். மாயைக்கைக் குளத்தில் அமைந்துள்ள சின்னக் கந்தன் கிணறும் இப்படி அமைக்கப்பட்டவையே. இவை வற்றாக் கிணறுகளாகக் கொள்ளப்படுகின்றன. இதே ஏற்பாட்டை வேறுள்ள குளங்களிலும் அமைத்து வந்தோமாயின் கூடிய அளவு நீர் குளத்தில் தேங்கி இருக்கும். மிகுதி கிணற்றின் ஊடாகச் சென்று நில நீர் சேமிப்பைக் கூட்டும்.

நில வடி நீர்

இது மூன்று வகையாக உள்ளது.

1. மிக ஆழத்தில் இரட்டை ஊடு புகவிடா பாறைகளுக்கு இடையில் உள்ளது.

2. ஊடு புகவிடா பாறையின் மேல் தொங்கி உள்ளது.

3. மழை நீர் நிலத்தினுட் சென்று மண்ணிலுள்ள இடைவெளிகளில் தேங்கியிருக்கும்.

முதலாவது வகை நீர் இறைத்து வெளிக்கொண்டு வராமலேயே சொந்த அமுக்கம் காரணமாக நில மேல் மட்டத்திற்கு வரும் (யுசவநளயைெ வுலிந) தன்மை கொண்டவை. யாழ்ப்பாணத்துச் சுண்ணாம்புப் பாறைகள் நீரை உட்புகவிடாத் தன்மையைக் கொண்டிராத காரணத்தால் இந்த வகை யாழ்ப்பாணக் குடாநாட்டில் காண ஃஏற்படச் சாத்தியமில்லை.

2. இரண்டாவது வகையும் சாத்தியமில்லை.

3. மூன்றாவது வகை நில நீரே குடாநாட்டில் உள்ளது.

இந்நீர் நுன்றுழைகளில் தங்கியிருக்கக் கூடியது.

இந்நீரை நாம் கிணறுகள் வாயிலாகப் பெறுகிறோம். பெறுவதற்கு துலாஃகப்பிகள் மூலமாகவும் எந்திர இறைக்கும் பொறிகள் வாயிலாகவும் பெறுகிறோம்.

நீர் இறைப்பதை ஊற்று வாயிலாகச் சுரக்கும் நீருக்கு மேல் அதிகரிக்காமல் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

தொடரும் ...

படிப்பகம்

www.padippakam.com



# எல்லாம் உலகமயம் III

## ஒரு வகை மதம்

- ஐ. ஐ. ஒ. -

இப்போது நம் உலகம் பல நாடுகளாகப் பிரியட்டு இயங்குகிறது. ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வோர் அரசு இருக்கிறது. பழங்காலத்திலே "அரசு" என்ற சொல்லுக்கு இராசா அல்லது வேந்தன் என்ற கருத்தும் இருந்தது. ஒவ்வொரு வேந்தனும் ஒவ்வொரு நாட்டினை ஆண்டு கொண்டிருந்தான். அவனுக்குப் படை பலம். கொடி, குடை, ஆலவட்டம் எல்லாம் இருந்தன. ஏவல் செய்யப் பணியாளர்களும் ஆலோசனை கூற அமைச்சர்களும் இருந்தார்கள்.

மன்னர் ஆட்சி நிலவிய காலங்களில், மன்னர்களே சகல அதிகாரங்களையும் பெற்று, சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு பெற்று விளங்கினார்கள். இது ஒரு வகையான அரசு-வரலாறு கண்ட பல விதமான அரசுகளுள் இதுவும் ஒன்று.

இப்படிப்பட்ட ஓர் அமைப்பில், மன்னர்கள் தம் போர் வலிமையை நம்பித்தான் ஆட்சியைக் கொண்டு நடத்தினார்கள். "தடி எடுத்தவன் தண்டல்காரன்" என்று தமிழில் ஒரு பழமொழி வழங்குகிறது. பலாத்காரம்தான் அரசியல் அதிகாரத்தின் அத்திவாரமாக அன்றும் விளங்கிற்று: இன்றும் விளங்குகிறது.

புராதன சமுதாயங்களிலே கொள்ளையிலும் கொலையிலும் கொடுமையிலும் வல்லவர்களான சண்டியர்கள் தான் மக்கள் தலைவர்களாகத் தம்மை நிலைநாட்டிக் கொண்டார்கள் என்று, அரசுகளின் தோற்றம் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் சுட்டிக் காட்டி உள்ளார்கள். புறநானூறு காட்டும் குறுநில மன்னர்களும் தம் எதிரிகளின் மாட்டு மந்தைகளை (ஆநிரைகளை) பறித்தெடுக்கும் செய்கையுடன்தான். தங்கள் சண்டைகளைத் தொடங்கினார்களாம்.

சரியாகச் சொல்வதானால், பழங்காலங்களிலே கூட்டுடமையாய் இருந்த பொதுச் சொத்துகள் தனிச் சொத்துகளாகப் பிரிந்து திரள்வதற்கு, வன்செயல்களே ஆயுதமாகப் பயன்பட்டன.

ஒரு காலத்திலே, சிறுச்சிறு பிரதேசங்களைக் குறுநில மன்னர்கள் பலர ஆண்டனர். அதனைத் தொடர்ந்து, அந்தக் குறுநில மன்னர்கள் தம்மிடையே சண்டையிட்டு, சிற்சில ஆள்புலங்களைத் தம் வசமாக்கித் திரட்டி எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் மன்னர்கள் எனவும் சக்கரவர்த்திகள் எனவும் தம்மை நிலைநாட்டிக் கொண்டார்கள்.

சிற்றூர்கள் சில சேர்ந்து பேரூர்கள் பலவற்றைக் கொண்ட பேரரசுகளும் உருவாயின.

வரலாற்றில் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சிகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் போது, ஓர் உண்மை நமக்குத் தெளிவாக விளங்குகிறது. பேரரசுகள் தலைதூக்கிச் சிறப்புடன் மிளிர்ந்த காலங்களிலே அரச அமைப்புகள் விரிவடைந்தன : தென் தமிழ் நாட்டில் ஆட்சி புரிந்த சோழர் காலத்தில், பல்வேறு திணைக்களங்களுடன் கூடிய அரசுயந்திரம் நுணுக்கமாக நிறுவப்பெற்றது: வலிமையும் இறுக்கமும் எய்தி ஒழுங்காக்கம் பெற்றது. இதனை வரலாற்று அறிஞர்கள் எடுத்து விளக்கியுள்ளார்கள்.

பேரரசு

சோழர் காலத்திலே இலங்கையின் பிரதேசங்களிற் சில, சோழச் சக்கரவர்த்திகளின் அதிகாரத்துக்கு உட்பட்டு இருந்தனவாம். ஈழ மன்னன் ஒருவன், மாணிக்கவாசகர் காலத்திலே சோழ நாடு சென்றிருந்தானாம். அப்பொழுது அவன் யானைகளையும் பட்டாடைகளையும் அணிமணிகளையும் சோழச் சக்கரவர்த்திக்குத் திறையாகச் செலுத்தினானாம். இவ்வாறு கடவுள் மாமுனிவர் இயற்றிய திருவாதவூரடிகள் புராணம் சொல்லுகிறது.

பல்வேறு காலகட்டங்களிலே சோழ சாம்ராச்சியத்தின் ஆட்சிக் கரங்கள் இலங்கையின் சிற்சில பகுதிகள் வரை நீண்டு வந்து இந்த நாட்டில் ஆதிக்கம் செலுத்தின என்று வரலாற்று ஆசிரியர்களும் (மகாவம்சம் முதலான) சமயச் சரிதையை எழுதியவர்களும் குறித்துச் சென்றுள்ளனர்.

ஆதிக்க வன்மை உடைய சாம்ராச்சியங்கள் தத்தம் ஆள்புலங்களை விரித்துப் பரப்புவதற்கு முயல்வதுண்டு என்று நிறுவுவதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. இதற்கு இலங்கைத் தமிழர்களும், சிங்கள மக்களும் நன்கு அறிந்த சிறந்த உதாரணம் சோழ சாம்ராச்சியத்தின் விரிவாக்க முயற்சிகள் ஆகும்.

சக்கரவர்த்திகள் தத்தம் நாடுகளுக்கு அருகில் உள்ள அயல் நாடுகளில் ஆட்சி புரியும் குறுநில மன்னர்களுடன் போர் தொடுத்து. அவர்களை வென்று. தமக்கு இசைவான சிற்றரசர்களைத் தமது பிரதிநிதிகளாக நியமித்து. அவர்களின் கைகளிலே சிற்றரசுகளின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து. தம் செல்வாக்கைப் பெருக்குவது, சரித்திர காலங்களில் இம்பெற்று வந்ததொரு சர்வசாதாரணமான நிகழ்முறை ஆகும்.

இப்படியாக. சிற்றரசுகள் பலவற்றைக் கையகப்படுத்திய பெரு மன்னர்கள் "உலகு" முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளுகின்ற "சிறப்பினைப்" பெற்றுவிட்டதாக உரிமை கோருவதுண்டு. புலவர்களும் இசைவாணர்களும் பாணரும் கூத்தருமாகிய பரிவாரங்கள், பெருவேந்தர்களைப் பலவாறாகப் போற்றிப் புளுகிப் புகழ்ந்து அவர்களின் ஆதரவைப் பெற்றுப் பிழைத்துக் கொள்வது வழக்கமாய் வேரூன்றலாயிற்று.

இப்படிப்பட்ட புளுகும் புலவர்களின் பிரபந்தங்களில் வரும் "உலகு" முழு உலகத்தையும் குறிக்கக் கூடிய ஒரு சொல்லாக இருக்கவில்லை. இது வெளிப்படை.

உலகு. உலகம் ஆகிய சொற்களால், பூமியில் உள்ள நாடுகளையும் சேர்த்துக் குறிக்கும் மரபு, ஒப்பீட்டளவில், அண்மைக் காலங்களிலேதான் நிலைநாட்டப்பட்டது. கடற்பயணமும் கப்பலோட்டமும் கண்டறியப்பட்டதன் பின்னர். உலகம் பற்றிப் பொதுசனங்கள் கொண்டிருந்த எண்ணக்கரு பெரிதும் விரிவடைந்தது.

ஒரே காசின் இரண்டு பக்கங்கள்

ஆனால், ஆசியாவைப் பொறுத்தவரையிலே, மேற்கு நாடுகளின் படையெடுப்புகளும் வன்செயல்களும்தான். உலகம் பற்றிய எண்ணக்கருக்களை விரிவு செய்யும் பிரதான ஏதுக்கள் ஆயின. எனவே, "உலகம்" என்னும் கருத்துள்ள சொல். பல்வேறு மொழிகளிலும் தொன்று தொட்டே வழங்கி வந்தாலும். அந்தச் சொல் குறிக்கும் கருத்தின் பரிமாணம். காலந்தோறும் பரந்து வளர்ந்து வந்துள்ளது. அந்த எண்ணக்கரு, இப்பொழுதும் கூட, வளர்ந்த வண்ணம்தான் உள்ளது. இது, நாம் நன்கு கவனிக்க வேண்டியதோர் உண்மை ஆகும்.

இந்தக் கருத்து வளர்ச்சியின் வரலாற்றை நாம் உற்றுப் பார்க்கும்போது, முக்கியமான மற்றுமோர் உண்மையும் புலனாகும். அந்த உண்மை எது?

உலகம் என்னும் எண்ணக்கருவின் வளர்ச்சியோடு. ஆதிக்கப் பரவல். வன்செயல். அடக்குமுறை ஆகியவை எல்லாம். தவிர்க்க இயலாதபடி பின்னிப் பிணைந்தே உள்ளன. ஆதிக்க சக்திகளின் வெற்றிகள் எல்லாமே. தோல்வி கண்ட தரப்பினரின் சுதந்திரத்தைப் பறிப்பனவாகத்தான் உள்ளன. அப்படித்தான் அவை இருக்க முடியும். ஆதிக்க வெற்றியின் மறுபுறத்திலே. பிரிக்க இயலாதபடி சேர்ந்திருப்பது சுதந்திரப் பறிப்பு.

இவை இரண்டும். ஒரே காசின் இரண்டு பக்கங்கள்.

ஏகாதிபத்தியங்களின் பரவலையும். பெருக்கத்தையும் வலிமைப்பேற்றையும் நோக்கும்போது. இவற்றின் உடன் விளைவாக இருப்பன. நாடுகள் பலவற்றின் வீழ்ச்சியும் தேய்வும் முடக்கமுமே என்பது விளங்கும்.

"தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு. பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசம்" என்று பாரதி பாடியபோது அடிமைத்தனத்தின் இழிவையும் தாழ்வையும் நினைந்து அந்தக் கவி ஏன் எவ்வளவு வேதனையை அடைந்தான்-மனம் புழுங்கினான்-என்பதை நாம்,தெரிந்து கொள்கிறோம்-உணர்ந்து கொள்கிறோம்.

தொடர்ச்சி 11ம் பக்கம்..

# மலேசிய தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள்

## சுரண்டப்பட்டு ஏமாற்றப்படுகிறார்கள்



கேள்வி : உங்களது எழுத்துலகப் பிரவேசம் பற்றிக் கூற முடியுமா?

பதில் : நான் தோட்டத்தில் பிறந்தவன். தோட்டத்தில் வேலை செய்தவன் என்ற வகையில் அங்கு வாழும் மக்கள் படும் வேதனைகளையும் துன்பங்களை யும் அனுபவித்துள்ளேன். தோட்டப் பகுதியில் வாழும் இந்தியத் தமிழர் களின் சமூகப் பிரச்சிகைகள் எண்ணிக் கையற்றவை. ஆங்கிலேயரால் எமது மக்கள் மலேசியாவுக்கு இழுத்து வரப் பட்ட காலம் முதல் இன்று வரை உழைப்பைத் தவிர வேறொன்றையும் அறியாதவராய் வாழ்ந்து மடிந்தனர். இன்றும் வாழ்ந்துக் கொண்டிருக் கின்றனர். றப்பர் தோட்டங்களையும். செம்பனைத் தோட்டங்களையும் உருவாக்கிய மக்கள் கூட்டத்தினரின் வாழ்வை குறிப்பாக அவர்களது வரலாற்றைப் பதிவு செய்ய வேண்டும் என்ற எண்ணமே என்னை எழுதத் தூண்டியது.

கேள்வி : மலேசியாவில் வாழும் தோட்டத் தொழிலாளரின் வரலாற்றைப் பதிவு செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியமைக்கு வேறு ஏதேனும் விசேட காரணங்கள் உள்ளதா?

பதில் : ஆம்.... இங்கு வாழும் தோட்டத் தொழிலாளர்கள் அவர்களது வரலாறு. பிரச்சினைகள் பற்றி தமிழில் எழுதப் பட்ட நூல்கள் மிக மிகக் குறைவு. ஆங்கில மொழியில் ஒரு சில நூல்கள் இருக்கின்றன. ஆனால் தோட்ட மக்கள் வாசிப்பதற்குரியதாக அவை மொழிபெயர்க்கப்படவில்லை. தோட்டப் பகுதி மக்கள் எத்தனையோ முறை ஏமாற்றப்பட்டு விட்டனர். அதுபற்றிய விளக்கத்தை அடுத்து வருகின்ற பரம்பரையினர் அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் மிகக்குறைவு. எனவேதான் நடந்து முடிந்த சம்பவங்களைத் தொகுத்து நூலாக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் தோன்றியது.

கேள்வி : மலேசியாவில் வாழுகின்ற தென்னிந்திய தோட்டத் தொழிலாளர் பல முறை ஏமாற்றப்பட்டதாக கூறினீர்கள். அதுபற்றி விரிவாகக் கூறமுடியுமா?

பதில் : வெள்ளைக்காரர்களால் ஏமாற்றப்பட்டுத்தானே. நாங்கள் இங்கே வந்தோம். நாடு சுதந்திரம் பெற்றுவிட்டது என்றார்கள். அதற்குப் பிறகாவது. நம்மவர்கள் மற்றையவர்களுக்கு சமனாக வாழ முடிந்ததா என்றால் இல்லைதானே. இதில் வேடிக்கை என்னவென்றால் இந்திய மக்களது தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களாலேயே நமது மக்கள் ஏமாற்றப்படுவதுதான். 'குருவிக்கும் கூடு உண்டு. நமக்கும் சொந்த வீடு வேண்டும்' எனக்கூறி தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தொழிலாளரிடம் பணம் வசூலித்தது. ஆனால் நடந்தது என்ன? துன்சம்பந்தனால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய நியதி கூட்டுறவு சங்கம் என்னவாயிற்று. டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் தொடங்கிய 'நேசா' என்ற திட்டமும். இன்றைய சமூகக்காவலர் என்று கூறப்படுகின்ற அமைச்சர் சாமிவேலுவினால் தொடங்கப்பட்ட தொழிலாளர் மேம்பாட்டுக் கூட்டுறவு கழகத்திற்கும் 'மைக்கா' ஹோல்டிங்ஸ் திட்டத்திற்கும் என்ன வாயிற்று என்பது சற்று அறிவு உள்ளவர்களுக்கும் தெளிவாகத் தெரியும். இம்மாதிரி எத்தனையோ உதாரணங்களைக் கூறமுடியும். இவை எல்லாவற்றையும் பார்த்தால் மலேசிய நாட்டு இந்திய தோட்டத் தொழிலாளர் வரலாறு, அம்மக்களின் தலைவர்களால் ஏமாற்றப்பட்ட வரலாறாகவே அமையும்.

கேள்வி : உங்களது நூல்களில், எழுத்துக்களில், இங்குள்ள தோட்டத் தொழிலாளர்களின் வரலாறு, மற்றும் வாழ்வை எந்தளவுக்கு பதிவு செய்து ள்ளீர்கள்?


பதில் : நான் பெரிய கல்விமானல்ல. ஆறாம் வகுப்போடு, எனது பாடசாலைக் கல்வியை இடைநிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. தோட்டத்தொழிலாளர்களது பிரச்சினைகளைப்பற்றி நான் பலருடன் பேசி இருக்கிறேன். இம்மக்கள் பட்ட துன்பங்களை. தொழிற்சங்கத் தலைவர்களாலும், அரசியல் தலைவர்களாலும் ஏமாற்றப்பட்ட சம்பவங்களை முப்பது வருடங்களாக ஆய்வு செய்து குறிப்புக்களைத் தேடி, மலேசிய தோட்டத் தொழிலாளர்கள் வரலாறும் பிரச்சினைகளும் என்ற நூலை எழுதினேன். அந்நூல் இங்குள்ள ஏமாற்றுத் தலைமைகளுக்கு எரிச்சலைத் தந்தாலும், தொழிலாளர் மட்டத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றது. குறிப்பாக தமிழர் திருநாள் என்ற நிகழ்வை ஏற்பாடு செய்து மக்களுக்கு சமூகக் கருத்துக்களை முன்வைக்க, ஏற்பாடுகள் செய்கின்றோம். தொழிலாளர்களைத் தனியாகவும் கூட்டாகவும் நான் சந்திப்பதுண்டு.

கேள்வி : இவ்வாறான செயற்பாடுகளில் மக்களின் பங்கேற்பு எந்தளவுக்கு உண்டு?

பதில் : குறைவாகவே உள்ளது. காரணம் எதையும் அறிவுப்பூர்வமாக சிந்திக்கும் பழக்கம் எமது இந்திய தமிழ் மக்களிடம் இல்லை. வரலாற்றை மறந்த நிலையிலேயே உள்ளனர். சாதி சார்ந்த அமைப்புக்களில் சேர்ந்து கொண்டு, செயற்படுவதோடு. பிற்போக்கான சிந்தனைகளிலும் மூழ்கிக்கிடக்கின்றனர். தமிழ் சினிமா மறுபுறம். தொடைகளையும் தொப்புள்களையும் வைத்துக் கொண்டு ஒரு கூட்டம் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறது. கோயிலுக்கு பால் செம்பு தூக்கிச் சென்றால் பரீட்சையில் பாஸ் பண்ணி விடலாம் என்று இன்னொரு கூட்டம். இதையும் மீறி மக்களை ஒன்று திரட்டுவது கடினமாகவே உள்ளது. எனினும் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றோம்.

**மலேசிய நாட்டு எழுத்தாளரும். அங்கு வாழும் தமிழ்பேசும் தோட்டத் தொழிலாளர்களது போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள வருமான தோழர். மு. வரதராசு. புதிய பூமிக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்.**

இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் உள்ள எழுத்தாளர்கள் இம்முயற்சியைப் பெரிதும் பாராட்டினர். எனது இன்னொரு நூலான மலேசிய தோட்டத்தொழிலாளர்களின் தொடரும் பிரச்சினைகளில் எங்கே என் பங்கு? என்ற நூலிலும், தோட்டத்தொழிலாளர் ஏமாற்றப்படும் விதத்தை தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டினேன். இந்நூல் மலேசியாவில் தடை செய்யப் பட்டதாக அறிவிக்கப்பட்டது. எனினும் நண்பர்களின் உதவியால். அதை வெளியிடக்கூடிய வாய்ப்பும் எனக்குக் கிட்டியது. இந்நூல்களில் கூறப்பட்ட உண்மைகள் தொடர்பாக தொழிற் சங்கத் தலைவர்களுக்கு பெரும் திண்டாட்டமான நிலை. அவர்கள் தங்களைத் திருத்திக் கொள்வதற்குப் பதிலாக. எனக்கெதிராக வழக்குத் தொடரவும் தயாராகி விட்டனர்.



கேள்வி : இச்சம்பவங்களால் உங்களது எழுத்துப் பணிகளில் ஏதேனும் தடைகள் ஏற்பட்டனவா?

பதில் : நிச்சயமாக இல்லை. எனக்கு ஏற்பட்ட பொருளாதார பிரச்சினைகள் காரணமாக அடுத்து ஒரு பெரிய நூலை ஆக்க முடியாவிட்டாலும். பல கட்டுரைகளை எழுதி. நண்பர் களுக்கு கொடுத்துள்ளேன். திருப்புமுனை என்ற சஞ்சிகையை தொடர்ச்சியாக வெளியிடுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக் கின்றேன்.

கேள்வி : எழுத்துலகப் பணியைத் தவிர. வேறு ஏதேனும் சமூகப்பணிகளில் உங்களது ஈடுபாடு எந்தளவு உள்ளது?

பதில் : தோட்டத்தொழிலாளர்களது பிரச்சினைகளில் நான் பங்கு கொள்வது உண்டு. அவர்களை எப்படியாவது. ஐக்கியப்படுத்த வேண்டும் என்பதற்காக தொடர்ந்து பல நிகழ்ச்சிகளை நண்பர்கள் உதவியுடன் செய்து வருகின்றேன். வருட தொடக்கத்தில்

கேள்வி : இந்திய சினிமா மோகம் இங்கு எந்தளவில் உண்டு?

பதில் : மோகம் என்பதைவிட பைத்தியம் என்றே கூறலாம். இந்திய நடிகர்கள் வந்து ஆடுகிறார்கள் என்றால் கூட்டம் கூடிவிடும். பேச்சு. சிந்தனை எல்லாமே இந்தியாவின் கீழ்த்தரமான படங்களால் சீரழிந்து விட்டது. யாருக்கும் விளங்காத பாடல்களை பாடுவதும் ஆடுவதுமாக இங்குள்ள இளைஞர்கள் இருக் கின்றனர். பத்திரிகைகளும் இந்திய செய்திகளுக்கும். நடிகர். நடிகைகளின் 'லேட்டஸ்ட்' தகவல்களைக் கொடுப் பதிலும் முக்கியம் கொடுத்துவருகின் றன. இந்திய நடிகர் ஒருவர் திரு மணம் செய்தால் இங்குள்ள யுவதிகள் தற்கொலை செய்யக்கூடும். இளைஞர் களும் அப்படியே. இத்தகைய சூழலில் மலேசிய தமிழ்க் கலைஞர்களும் போரா டிக் கொண்டுதான் இருக் கின்றனர்.

கேள்வி : மலேசிய நாட்டு. தமிழ் எழுத்தாளர்களுக்கு நீங்கள் கூறும் செய்தி என்ன?

பதில் : மக்களுக்காக எழுத வேண்டும். பல்கலைகழகங்களில் உளளவர்கள் இதில் கூடிய பங்களிப்பை செய்யலாம். பணத்துக்காகவும், பட்டத்துக்காகவும். கௌரவத்துக்காகவும், எழுதுதல் என்ற

### சாதி மதம் சினிமாவில் மூழ்கி நிற்கும் இந்திய தொழிலாளர் சமூகம்

மனோநிலை மாற வேண்டும். எழுத்தாளர்கள் அடிமைச் சிந்தனைகளி லிருந்து விடுபட வேண்டும். சுதந்திரமாக உண்மைகளை எழுத வேண்டும். பிழைகளை எந்த கொம்பன் செய்தாலும். தயங்காது, மக்கள் முன் எழுத்தாக முன்வைக்க வேண்டும்.

கேள்வி : மலேசியாவில் வாழும் தோட்டத்தொழிலாளர்களின் விடுதலைக்கு நீங்கள் கூறும் வழிமுறை என்ன?

பதில் : தொழிலாளர்கள் வரலாற்றைப் புரிந்து கொள்ள வேண்டும். தொழிற் சங்கங்களாலும் அரசாங்கங்களாலும் இம்மக்கள் எவ்வளவு தூரம் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்பதை மீட்டுப் பார்க்க வேண்டும். சரியான அரசியல். மற்றும் தொழிற்சங்க அமைப்புக்களில் பொறுப்புடன் செயல்பட்டு. தமது ஐக்கியத்தை உறுதிசெய்ய வேண்டும். சாதி. மதம் போன்ற பிற்போக்கு கலாசாரத்தை தூக்கியெறிந்த புதிய சிந்தனையுடன் ஒன்று திரண்டால் மட்டுமே. தொழிலாளர் விமோசனம் பெறமுடியும்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் (11)

இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு மூட்டை கட்டி அந்த முழுப்பாரம் பின் முதுகிற் போட்டுக் குனிந்து புறப்பட்டோம் நீள் பயணம், தேட்டம் என்றே நம்பி, சிதைந்த பழம் பொருளின், ஓட்டை, உடைசல், உளுத்த இறவல்கள், பீத்தல், பிறுதல், பிசகி உதிர்ந்தவைகள், நைந்த கந்தல், நன்றாக நாறிப் பழுதுபட்டுச், சிந்தி இறைந்த சிறிய துணுக்கு வகை- இப்படியான இவற்றையெல்லாம் சேகரித்து மூட்டைகட்டி, அந்த முழுப் பாரம் கண் பிதுக்கக், காட்டுவழியிற் பயணம் புறப்பட்டோம். இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு.

.......மேலிருக்கும் மூட்டை இறக்கி, அதை அவிழ்த்துக் கொட்டி உதறிக் குவிக்கின்ற கூளத்துள் வேண்டாத குப்பை விலக்கி, மணி பொறுக்கி அப்பாலே செல்லும் அறிவு விழிப் பென்பதோ சற்றேனும் இல்லோம்.

சலிப்பும் வலிப்பும் எழ, பின்முதுகைப் பாரம் பெரிதும் இடர்படுத்த ஊருகிறோம்; ஊருகிறோம்- ஓயாமல் ஊருகிறோம்.

பரந்த உலகோர் பலரும் சுமையைச் சுருங்கும்படியாய்க் குறைத்துச் சிறிதாக்கிக் கைப்பைக்குள் வைத்துக் கருமங்கள் ஆற்றுகையில், வெற்றுக் கை கொண்டும் வியப்புக்களை ஆக்குகையில், புத்தி நுட்பம், செய்கை நுட்பம், போக்கு நுட்பம் என்ப வற்றால் சித்தி பல ஈட்டிச் செகத்தி னையே ஆட்டுகையில். நாங்கள் எனிலோ நலிந்து மிக இரங்கி பின் முதுகைப் பாரம் பெரிதும் இடர்படுத்த ஊருகிறோம், ஊருகிறோம்- ஓயவில்லை, ஊருகிறோம். வேண்டாத குப்பை விலக்கி, மணி பொறுக்கி அப்பாலே செல்லும் அறிவோ குறைவு. ஓ! இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு, பண்பாட்டின் பேராற் பல சோலி எங்களுக்கு".

ஆம் இது மக்கள் கவிஞர் முருகையனின் 'இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு' என்ற கவிதையின் சில பகுதிகளாகும்.

தேசியம் என்பது நவீனத்துவம் சார்ந்தது. புதுமையை நிகழ்த்துவது அதன் முன் நிபந்தனையாகும். நிலமானியத்தையும் அதன் வழியான பழைமைச் சிந்தனையையும் செயலை யும் எவ்வித நிபந்தனையும் இன்றி நிராகரிப்பது. அத்தேசியத் தகைமை களை எமது தமிழ்த்தேசியம் பெற்று ள்ளதா? பழைமை எது, புதுமை எது என்பதையேனும் சிந்தித்துள்ளதா? அகற்றப்பட வேண்டியவை எவை? சேர்க்கப்பட வேண்டியவை எவை என தமிழ்த் தேசிய நிகழ்ச்சி நிரலில் ஏதேனும் உள்ளதா? அல்லது அத்தகைய ஏதேனும் நிகழ்ச்சி நிரல் பற்றிய சிந்தனையாவது இருந்துள்ளதா? எவ்வாறெனினும் இனியாவது சிந்திக்கத் தாமதித்தால் விளைவுகள் மிகவும் பாரதூரமாகச் செல்வதைத் தவிர்க்க முடியாது போய்விடும்.

முதலாவதாக, யுத்தம் என்பதன் எண்ணக்கருவை நாம் எவ்வாறு விளங்கிக் கொள்கிறோம். போராட்டம் என்பதன் அர்த்தம் என்ன? ஓர் ஒடுக்கப்பட்ட தேசிய இனம் யுத்தம் சார்பாக இருக்க முடியாது. ஏனெனில் யுத்தம் என்பது தன்னிகரற்ற ஓர் மன்னனை அல்லது அவனது குழாத்தினரை மையப்படுத்தி நடாத்தப்படுவதாகும். நவீன சகாப்தத்தில் ஏகாதிபத்திய ஆயுத வியாபாரிகளின் பேராசைக்கு உலகைக் கூறுபோடும் நோக்குடைய யுத்தம் மக்களை, தேசங்களை, நாடுகளை அவற்றின் இறைமையை, சுயநிர்ணயத்தை, எல்லைகளை அழிப்பதனையோ - தகர்ப்பதனையோ நோக்கமாகக் கொண்டது. மக்களை அழிப்பது பற்றியோ அவர்களை கொன்று குவித்து - இடம் பெயரச் செய்து அகதிகளாக அலையச் செய்வதுபற்றியோ யுத்தத்தினை நடாத்தும் எசமானர்கள் கவலைப்படுவதில்லை.

போராட்டம் என்பது ஒடுக்குமுறை சார்ந்த மக்கள் சார்பானது. அது ஏகாதிபத்தியத்துக்கும் - ஆண்டபரம்பரைக்கும் எதிரானது. யுத்தம் திணிக்கப்படும்போது போராட்டம் மக்களின் ஆயுதப் போராட்டமாக உச்சக் கட்டத்தை அடைகிறது. போராளிகள் என்போர் யுத்தப்பிரியர்களாக ஒருபோதும் இருப்பதில்லை. கூலிப்படையினரே யுத்தப்பிரியர்களாவர். மக்கள் போராளிகள் போராட்டப்பிரியர்களாக விளங்குவர்.

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'எந்தையும் தாயும்' 'அன்னை இட்ட தீ' ஆகிய நாடகங்கள் யுத்தத்துக்கெதிரான நாடகங்களே தவிர போராட்டத்துக்கெதிரான நாடகங்களல்ல. முருகையனின் 'வெறியாட்டு' யுத்தத்துக்கு எதிரான நாடகமே தவிர போராட்டத்துக்கு எதிரானதல்ல. இந்நாடகங்கள் மேடையேற்றப்பட்ட போது அந்நேரங்களில் போராளிகளை மகிழ்விக்கவில்லை" என்றே கூறப்பட்டது. இது யுத்தம்- போராட்டம் பற்றிய தெளிவீனத்தையே வெளிப்படுத்தியதனை அவதானிக்கலாம்.

பண்டைய தமிழ் அரசர்களைக் கற்பனை செய்துகொண்டு "மண்பிடி மாடுபிடி" சண்டையை நடாத்த முடியாது. நவீன யுகத்தில் மக்கள் நலன் மட்டுமே முதன்மையானது. பழிவாங்கும் ஆண்டபரம்பரை எண்ணத்தில் குறுநில அரசுகளை ஒன்று சேர்ப்பது போல் சகல இயக்கங்களையும் சகல வர்க்கங்களையும் ஒன்றிணைப்பது நவீன யுகத்தில் சாத்தியப்படக்கூடியனவல்ல. இத்தகு செயற்பாடுகள் யுத்தத்தைத் தோற்றுவிக்க உதவுவனவேயன்றிப் பரந்துபட்ட மக்கள் போராட்டத்தை வலுப்படுத்தப் பயன்படமாட்டாதன.

இரண்டவதாக், தேசியத்தின் நவீன சிந்தனை ஜனநாயகத்தைச் சாராம் சமாகக் கொண்டது. 'எல்லோரும் இந் நாட்டு மன்னர்' என்பதே ஜனநாயகத்தின் அடிப்படையாகும். தமிழ்த்தேசியப் போராட்டம் சரியான திசைமார்க்கத்தில் செலுத்தப்பட வேண்டுமெனில் மக்கள் அரசியல் போதம் ஊட்டப்பட்டு ஆளுமை பெற்றவர்களாக ஏன், எதற்கு, எப்படி என்ற ஆய்வுத்திறன் மிக்கவர்களாக, காசுக்கும் சலுகைக்கும் ஆடம்பரத்துக்கும் மக்களின் இறைமையையும் அரசியலையும் விலை பேசும் பேரப்பேச்சு ஆதிக்கசக்திகளை தெளிந்து அறிவுடை மக்களாய் மாற்றமடைதல் தவிர்க்கவியலாத அவசியத் தேவையாகிறது.

மூன்றாவதாக, ஜனநாயகப் பண்பைச் சாத்தியமாக்கவேண்டுமெனில் மாற்றுக் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும். 'ஆமா' போடும் கூட்டத்தையோ 'அரோகரா' பாடும் பக்தர்களையோ மட்டும் தேசியம் கொண்டிருத்தல் தோல்விக்கேயிட்டுச் செல்லும். சமகாலத்தில் கூட்டுக்குடும்பத்து ஆணாதிக்க தந்தைவழி அதிகாரக் கட்டமைப்பு மாறி பாதித்தொகையினருக்கு மேற்பட்ட பெண்களின் புத்தி மதிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டு குடும்பம் ஒன்றின் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு ஒப்ப, மாற்று இயக்கங்களையும் கட்சிகளையும் கருத்துக்களையும் மதிப்பதும் முன்நிபந்தனையாகிறது.

நான்காவதாக, சாதியமைப்புமுறை நீண்டகால நோக்கில் நீக்கப்பட்டு மனித உரிமைகளைப் பேணும் வகையில் அகமணத் திருமண உறவுமுறை எனக்கருதப்படும் ஒரே சாதியினருள் திருமணங்கள் நடைபெறுவதற்குப் பதிலாக கலப்புத் திருமணங்கள் ஊக்குவிக்கப்பட்டு சமூக அங்கீகாரம் வழங்கும்படி ஊக்கப்படவேண்டும். சாதிக்கொரு கிறிஸ்தவ ஆலயம் அமைக்கப்படுவதையும் ஆலயங்களுக்குள் சாதிவேறுபாடு காரணமாக உள்ளே அனுமதிக்கப்படாது ஆலயங்கள் மூடப்பட்டுக் கிடப்பதும் திறக்கப்பட்டு சமத்துவ சமூகத்துக்கான தேசிய உணர்வு கட்டமைக்கப் படவேண்டும்.

ஐந்தாவதாக, எளிமை, உழைப்பு, கூட்டுச்செயற்பாட்டுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு ஆடம்பர மோகமும் அந்நிய பண்பாட்டு ஆதிக்க வெறுப்பும் பழமைப் பண்பாட்டுச் சடங்கு சம்பிரதாயங்களை நிராகரிப்பதும் அவசியமாகும். எனினும் தமிழர் மத்தியில் எஞ்சியிருப்பது ஆடம்பரமும் பழமைச் சடங்கு சம்பிரதாயங்களுமே? எளிமைக்கு மதிப்பளிக்கப்படுமா? உழைப்புக்கு உரிய கௌரவம் வழங்கப்படுமா? இக்கேள்விகளுக்கான பதில்களை ஒன்றுபட்ட கூட்டுச்செயல்கள் மூலமே நிதர்சனமாக்கப்பட முடியும்.

தேசியம் என்பதும் இனத்தன்னடையாளமும் என்பதும் பழமைவாத சமயஞ் சார் சடங்குகளிலேயே தீர்மானிக்கும் அவலம் நீக்கப்பட வேண்டும். தேசியத்தின் பொதுமையில் மத அனுட்டானங்களுக்கு முன்னுரிமை வழங்குவது என்பது பழமையின் நீட்சிக்கே வழிவகுக்கும்.

தேசியம் என்பது ஏனைய இனங்களின் தனித்துவத்தை மதிப்பதும் அங்கிகரிப்பதன் மூலமும் மட்டுமே முன்னோக்கிச் செல்லமுடியும். பழமையைக் கடப்பதும் புதுமையை நிகழ்த்துவதற்கும் பரந்த மனப்பாங்கும் .உலகப்பார்வையும் தேவை. இவற்றை தமிழ்த் தேசியத்தினுள் தேடினும் கிடைக்குமா?

## பழமையைக் கடப்பதும் புதுமையை நிகழ்த்துவதும் சாத்தியமா?

### செண்பகன்

## மனிதம் மடியலாமோ?

*சூனியமாய்*
*இருந்த பூமிக்கு*
*சூரியனை*
*தொட்டுக் காட்டியவர்கள்.*
*சூட்டுக் கோல்களால்*
*சுடப்படுவதால் மட்டும்*
*வெற்றியை எட்டிவிட முடியுமா?*

*உண்பதற்காக மட்டும்*
*வாய் திறக்கும்*
*விலங்குகளைப் போல*
*மனிதர்களும்*
*ஊமையாய் வாழ்வதில்*
*என்ன விவேகம்?*

*குரல்வளைகளுக்கு விலங்கு போட்டு*
*சமுதாய மேடையில்*
*வந்துதிக்கும்*
*கதாபாத்திரங்கள் :*
*சிந்தனை வீச்சுக்களுக்கும்*
*தடுப்புக் காவல்!*

*உயிர்களை மட்டும்*
*விலையாகக் கொடுத்தும்*
*மலிவாக வாங்கிவிட முடியாத*
*உரிமைத் தேசத்திற்குள்*
*மனித உணர்வுகள்*
*மரணிப்பதில் என்ன பயன்?*

*ஓ மனிதர்களே*
*பகுத்தறிவு ஆடையை*
*போலித்தனமாக உடுக்காதீர்!*
*பார்ப்பவர்களே அதனை*
*கிழித்தெறிந்து அசிங்கப்படுத்த*
*ஓடாதீர்!*
*மதித்து உயிர் கொடுத்துப்*
*பாருங்கள்.*
*மனிதம்*
*மற்றொரு விடியலுக்கு*
*முரசறைந்து நிற்கும்!*

ச. சிவரூபன்




## பின்நவீனத்துவக் கட்டவிழ்ப்பு

பின்நவீனத்துவத்தின் பேரால் மாக்ஸிய எதிர்ப்பில் இறங்குகிறவர்கள் பின் நவீனத்துவச் சிந்தனையாளர்கள் வற்புறுத்துகிற வரலாற்று மறுப்பையும் பொதுமைப் படுத்திய சிந்தனையின் நிராகரிப்பையும் கொண்டு மாக்ஸிய முடிபுகளைத் தாக்க முற்படுவதில் அதிசயமில்லை. "ஆசிரியன் இறந்து விட்டான்" என்ற அதிரடிப் பிரகடனத்தைக் கொண்டு எந்தப் படைப்பையும் தான் விரும்பியபடி விளங்கவும் விளக்கவும் வாசகனுக்கு உரிமை உண்டு என்று சொல்லுமளவுக்கு இவர்களது "ஞானம்" இருந்தது.

மறுவாசிப்பு, கட்டுடைத்தல் (கட்டவிழ்த்தல்) போன்ற பதங்களும் முற்குறிப்பிட்ட 'ஆசிரியனின் மரணம்' போன்று "வித்தியாசமே அடிப்படையானது" என்ற சுலோகமும் வாசிப்பவர்களை மருளவும் வியக்கவும் செய்வதற்கு மிகவும் உதவியாக இருந்தன. இவற்றுக்கும் மேலாக, அமைப்பியலில் பயன்பட்ட கலைச்சொற்கள் பலவும் இவர்களுடைய கட்டுரைகளின் சிந்தனை வறுமையை மழுப்பும் "மசாலாப் பொடி" போல பயன்பட்டது.

மிகவும் விறைப்பான விஞ்ஞான, மெய்யியல் ஆய்வு முறைகளுடன் பரிச்சயப்பட்டவர்களுக்குப் பின் நவீனத்துவம் ஒரு ஞானோதயம் போலத் தென்பட்டிருக்கலாம். அதிலும் முக்கியமாக, உலக அரசியல் நிலவரங்களில் 1970களின் பிற்பகுதி முதல் சோஷலிஸம் எதிர்நோக்கிய இடைஞ்சல்களும் ஏகாதிபத்திய 'உலகமயமாதல்' வீறுகொண்டு எழத் தொடங்கியது காரணமாக மாக்ஸிய அனுதாபிகளாக இருந்த பல புத்திசீவிகளிடையே காணப்பட்ட சோர்வும், மாக்ஸியத்துக்கு மாற்றாக இல்லாது போனால், மாக்ஸியத்திலிருந்து நழுவிச் செல்வதற்கு வசதியாக 'முற்போக்கான' பின்நவீனத்துவக் கதவுகளைத் திறந்துவிட்டன.

மாக்ஸியத்தின் இயங்கியல் அணுகுமுறையைக் கண்டுகொள்ளாதது போல, அதையும் ஒரு விறைப்பான தத்துவமாக்குவதில் மாக்ஸிய விரோத அணி முனைப்பாக இருந்தது. பின்நவீனத்துவம் ஏற்படுத்திய சலசலப்பின் விளைவாக 1970களில் அதனாற் கவரப்பட்ட மேனாட்டு முற்போக்குச் சிந்தனையாளர்கள் பலர், வெகு விரைவிலேயே அதன் போதாமைகளை இனங்கண்டு மயக்கம் தெளிந்தனர். முதிர்ந்த சிந்தனையாளர்களுக்குப் பின்நவீனத்துவவாதிகளது சிந்தனைப் போக்கு முதலிலிருந்தே தெளிவாக இருந்தது. ஆனாலும், அலங்காரச் சொல்லடுக்குகளால் மயங்குகிற போக்கும் புதிய சிந்தனைகளுடன் தங்களுக்குப் பரிச்சயமுண்டு என்று காட்டும் நிர்பந்தமும் தம்மைப் புலமையாளர்கள் என்று நிறுவத் திணறுகிறவர்கட்கு என்றுமே அதிகம்.

இதன் விளைவாகப், பின்நவீனத்துவவாதிகள் முன்வைக்கிற கோஷங்களிற் சிலவற்றைத் தாங்களும் ஒப்பிப்பது பல புத்திசீவிகளுக்கும் தேவைப்பட்டது. இதற்குப், பேராசிரியர்கள் எனப்படுவோரும் விலக்காக இருந்ததில்லை. அண்மையில், ஒரு உள்ளூர்ப் பேராசிரியர், பின்நவீனக் கட்டவிழ்த்தலை நாடகத்துறைக்குப் பாவித்த ஒரு முயற்சி மிகப் பரிதாபமாக இருந்தது. கட்டவிழ்த்தல் என்ற கோட்பாடே வரைவிலக்கணங்களை மறுப்பதாகும். கட்டவிழ்த்தலை ஒரு செய்முறையாக்குவது பற்றி அக்கருத்தாக்கத்தை முன்வைத்தவரான ஷாக் தெரிதா என்பாரே மறுப்புத் தெரிவித்ததை நமது பேராசிரியர்கள் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை.

இதற்கு முன்னர், இலங்கையின் தேசியப் பிரச்சினையை ஆய்வதற்குக் கட்டவிழ்த்தலைப் பாவிப்பதாகச் சொல்லிக்கொண்டு சிலர் மாஓசேதுங் முன்வைத்த முரண்பாடுகள் பற்றிய கருத்துக்களைக் கொஞ்சம் குழப்பமான விதத்தில் முன்வைத்தனர். இவர்களுக்கு உள்ள சிக்கல் ஏதென்றால் பொதுமைப்படுத்தப்பட்ட எல்லாவற்றையுமே நிராகரிக்கும் பின்நவீனத்துவ அணுகுமுறையைக் கொண்டு பொதுமைப்படுத்தப்பட்ட அறிவு அனைத்தையும் பொதுமைப்படுத்த முனையும் சிந்தனை முறைகளையும் நிராகரிக்க வேண்டும். அதேவேளை தங்களுக்குத் தேவையானதைத் தங்களுக்கு ஏற்றபடி பொதுமைப்படுத்த வேண்டும்.

உதாரணங் கூறுவதானால் மாக்ஸியம் இவர்களைப் பொறுத்தவரை பொதுமைப் படுத்தப்பட்ட சிந்தனை. அது ஒரு 'பெருங்கதையாடல்' வர்க்கம், வர்க்கப்போராட்டம் எல்லாமே பெருங்கதையாடல்கள். பொதுமை முழுமையை நிராகரித்துக் குறிப்பான விடயங்கள், பகுதிகளை, முக்கியமாக சினேக முரண்பாடுகளை, முதன்மைப்படுத்தி இவர்களால் 'சிறுகதையாடல்களை' வற்புறுத்த முடிகிறது. மாக்ஸியத்துக்கு எதிராகப் பல்வேறு விதமான தேசியவாதங்களையும் தலித்தியம் போன்ற "கோட்பாடுகளையும்" நிலைநிறுத்த இவர்கட்கு இது உதவுகிறது. ஆனால் இவர்கள் முன்வைக்கிற சிறுகதையாடல்களுக்குள் ஏற்படுகிற முரண்பாடுகட்கு முகங்கொடுக்க இவர்களுக்கு இயலுவதில்லை.

தலித்தியத்தின் பேரால் மாக்ஸியத்தை நிராகரிக்கும் தமிழகத்து அ. மார்க்ஸ், ரவிக்குமார் போன்றவர்களால் தாழ்த்தப்பட்ட மக்கள் நடுவே உள்ள ஆணதிக்கத்துக்குப் பதில் தேட இயலவில்லை. 1992ல் குஜராத்தில் இந்துத்துவவாதிகள் நடத்திய முஸ்லிம் விரோத வெறியாட்டத்தில் பார்ப்பனியச் சாதி வெறியர்களுடைய சகாக்களாக தாழ்த்தப்பட்ட சாதியினர் கொலையிலும் கொள்ளையிலும் தீவைப்பிலும் பங்கு பற்றியதுபற்றி விளக்குவதற்கு இவர்களுடைய சிறுகதையாடல்களால் இயலவில்லை.

சமூகப்பிரச்சினைகளைச் சமூக முரண்பாடுகளின் அடிப்படையில் ஆய்வதும் அடிப்படை முரண்பாடு எது துணை முரண்பாடு எது என்று கண்டறிவதும் குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் ஒரு துணை முரண்பாடு எப்படிப் பிரதான முரண்பாடாகிறது என்று விளங்கிக்கொள்வதும் மாக்ஸிய நடைமுறைக்கு அத்தியாவசியமானவை. இந்த அணுகுமுறையில் பகை முரண்பாட்டுக்கும் சினேக முரண்பாட்டுக்கும் உள்ள வேறுபாடு முக்கியமானது. ஒரு சினேக முரண்பாடு பகை முரண்பாடாகும் நிலைமைகளை விளங்கவும் விளைவுகளைச் சீர் செய்யவும் வழி உள்ளது. ஏனெனில், மாக்ஸியம் கூறும் பொதுமை, காலத்தால் மாறாத, விறைப்பான பொதுமை அல்ல. அது குறிப்பான அம்சங்களின் முக்கியத்துவத்தைப் பொதுமைப்படுத்தல் என்ற பாறையின் கீழே போட்டு நசுக்கும் அணுகுமுறை அல்ல. எனவேதான் திராவிட தேசியம் தொட்டு தமிழ், முஸ்லிம் தேசியங்கள்வரை, பெண்ணியம் தொட்டு தலித்தியம் வரை உள்ள 'சிறுகதையாடல்கள்' தடுமாறுகிற இடங்களில் எல்லாம் மாக்ஸிய இயங்கியல் அணுகுமுறையால் குழப்பத்தினூடு தெளிவைக் காணவும் தோற்றப்பாடான ஒழுங்கீனத்தினின்று ஒழுங்கைக் கண்டறியவும் இயலுமாகிறது.

மாக்ஸியவாதிகள் உலகை அறியும் நோக்கம் உலகை மாற்றுவதே. எனவே மனித அறிவின் ஒவ்வொரு செயற்பாடும் சாதனையும் அந்தப் பார்வையில் புதிய ஒளியில் நோக்கப்பட வேண்டியதாகிறது. இதனாலேயே, மாக்ஸிய அணுகுமுறை, அதன் வருகைவரை ஆதிக்கம் செலுத்தி வந்த வரலாற்றை எழுதும் முறைக்கு ஒரு மாற்று முறையை முன்வைத்தது.


மன்னர்களது சாதனைப் பட்டியல்களும் நாடுகளிடையிலான போர்களும் தனிமனிதர்களது மேன்மைகளும் கொண்டு புதைக்கப்பட்டிருந்த உலக வரலாறு, மனித இனத்தின் வரலாறாகவும் மனித சமுதாய முரண்பாடுகளின் வரலாறாகவும் அந்த முரண்பாடுகளின் விளைவான வளர்ச்சியின்

தொடர்ச்சி 11ம் பக்கம்...

படிப்பகம்

# ஈராக் மீது போர் தொடுக்காதே!

## உலக மக்கள் கோபாவேசம்!!




ஈராக் மீது போர் தொடுக்க நிற்கும் அமெரிக்க போர் வெறியை எதிர்த்து இத்தாலி நாட்டில் ஃப்லோரன்ஸ் நகரில் 4லட்சம் மக்கள் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்

இரண்டு மாதங்களுக்கு முன்பு ஜெர்மனியில் நடந்த அதிபர் தேர்தல் பிரச்சாரத்தின் பொழுது. அந்நாட்டு நிதித்துறை அமைச்சர், அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷை ஆரிய இனவெறி பிடித்த பாசிச சர்வாதிகாரி இட்லரோடு ஒப்பிட்டுப் பேசினார். அந்தப் பெண் அமைச்சர், உலகின் "மிகச் சிறந்த ஜனநாயக" நாட்டின் அதிபரை, ஒரு பாசிச சர்வாதிகாரியோடு குருட்டாம் போக்கில் ஒப்பிடவில்லை.

இரண்டாம் உலகப் போர் தொடங்குவதற்கு முன்பாக, ஜெர்மன் அதிபர் இட்லர், ஆஸ்திரேலியாவை ஜெர்மன் நாட்டோடு இணைத்துக் கொள்ள விரும்பினான். இட்லரின் விருப்பத்திற்கு அடி பணிய மறுத்த ஆஸ்திரிய நாட்டின் அதிபர், ஆஸ்திரியா–ஜெர்மன் இணைப்பு குறித்து. ஆஸ்திரிய நாட்டு மக்களிடம் பொதுஜன வாக்கெடுப்பு நடத்தினார். இதனால் ஆத்திரமடைந்த இட்லர், ஆஸ்திரியாவில் ஆட்சி மாற்றம் தேவை என்றான்.

ஆஸ்திரேலியாவுக்கு அடுத்து. செக்கோஸ்லாவியாவை விழுங்கிய இட்லர், அதன் பின். "போலந்து நாட்டு அதிபர் கர்னல் ஜேசப் பெக் பதவியை விட்டு இறங்க வேண்டும்; போலந்தை யார் ஆள்வது என்பதை ஜெர்மன்தான் தீர்மானிக்கும் " என்றான் .

இட்லரின் வாயிலிருந்து வந்த ஆட்சி மாற்றம் என்ற அதே வார்த்தைகள், இப்பொழுது ஜார்ஜ் புஷ்ஷின் வாயிலிருந்து வருகின்றன. நாஜி ஜெர்மனியின் இடத்தில் ஜனநாயக அமெரிக்கா : பாசிச சர்வாதிகாரி இட்லர் இடத்தில் "ஜனநாயகக் காவலர்" புஷ், ஆஸ்திரியா, செக்கோஸ்லாவியா, போலந்து ஆகிய நாடுகளின் இடத்தில்




தென்கொரிய தலைநகர் சியோலில் ஈராக் மீது போர் தொடுக்க வேண்டாம் என அமெரிக்காவை எதிர்த்து மக்கள் கோபாவேசத்துடன் ஆர்ப்பாட்டம் செய்தனர்

ஆப்கானிஸ்தான், ஈராக்.

ஈராக்கில் நடந்து வரும் சதாம் உசேன் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு, கடந்த பத்தாண்டுகளாகவே அமெரிக்கா முயன்று வருகிறது.

அமெரிக்காவும், பிற ஏகாதிபத்திய நாடுகளும் "ஏதோ. அமெரிக்கா இனிமேல்தான் ஈராக் மீது போர் தொடுக்கப் போவதைப் போல" பசப்பி வருகின்றன. உண்மையில், 1991-ஆம் ஆண்டு நடந்த வளைகுடா போருக்குப் பின், அதன் தொடர்ச்சியாக கடந்த பத்தாண்டுகளாகவே. ஈராக் மீது ஒரு தாழ்நிலைப் போரை நடத்தி வருகின்றது. அமெரிக்கா, குறிப்பாக. 1998-ஆம் ஆண்டு. "பாலைவனக் குள்ளநரி" என்ற பெயரில் ஈராக் மீது அமெரிக்கா மிகப் பெரும் தாக்குதலை நடாத்தியது. ஏறத்தாழ ஒரு மாதத்திற்கும் மேல் நடந்த வளைகுடாப் போரின் பொழுது, ஈராக் மீது 183 குருயிஸ் ஏவுகணைகளை வீசிய அமெரிக்கா, அதைவிடக் குறுகிய காலமே நடந்த "பாலைவனக் குள்ளநரி" போரின் பொழுது 450 குருயிஸ் ஏவுகணைகளை வீசியது.

ஈராக் குவைத்தை ஆக்கிரமித்ததையொட்டி ஈராக் மீது போடப்பட்ட பொருளாதாரத் தடை இன்னும் நீக்கப்படவில்லை. ஈராக்கின் எண்ணெய் வியாபாரமும், அதன் இறக்குமதியும் ஐ.நா. மூலம் ஏகாதிபத்தியங்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன. குர்திஷ் இன மக்கள் அதிகமாக வாழும் ஈராக்கின் வடபகுதி மற்றும் ஷியா பிரிவு முசுலீம்கள் வாழும் ஈராக்கின் தென்பகுதி வான் பரப்பில் ஈராக்கின் விமானங்கள் பறக்க அமெரிக்கா தடை விதித்திருந்தது. ஈராக் மீது நினைத்த நேரத்திலெல்லாம் தாக்குதல் தொடுக்க அமெரிக்கா இந்த வான்வழித் தடங்கங்களைப் பயன்படுத்தி வருகிறது. மேலும். குர்ர்திஷ் மற்றும் ஷியா கைக்கூலி அமைப்புகளை உருவாக்கி, சதாம் உசேன் ஆட்சியைக் கவிழ்க்கச் சதி வேலைகளையும் நடத்தி வருகிறது, அமெரிக்கா.

இப்படி கடந்த பத்தாண்டுகளாகவே.

## அமெரிக்கா இன்றைய நாஜி ஜெர்மனி
## ஜோர்ஜ் டபிள்யூ புஷ் நவீன ஹிட்லர்!

அமெரிக்கா ஈராக்கை முற்றுகையிட்டு. தாழ்நிலைப் போரை நடத்தி வந்த போதிலும், சதாம் உசேனைத் தூக்கியெறிய முடியாததால், மீண்டும் ஒரு வளைகுடாப் போரை நடத்தத் துடிக்கிறது. இதற்காகவே. சதாம் உசேன் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைக் குவித்து வைத்திருக்கிறார் என்றும், அவர் கெடுமதியின் அச்சு (Axis of Evil) என்றும் குற்றம் சுமத்துகிறது. அமெரிக்கா.

வளைகுடாப் போர் முடிந்தவுடனேயே ஈராக் வசமிருந்த உயிரியல், இரசாயன ஆயுதங்களைக் கண்டுபிடித்து அழிக்கவும். அந்த வகை ஆயுதங்களைத் தயாரிக்கும் திறன் பெற்ற தொழிற்சாலைகளை நிர்மூலமாக்கவும். ஐ.நா. சிறப்பு கமிசன் அமைக்கப்பட்டது. இந்தக் குழு 1998-ஆம் ஆண்டுவரை ஈராக்கில் தங்கியிருந்தது சோதனைகளை நடத்தியது.

ஐ.நா. சிறப்பு கமிசனின் தலைவராக இருந்த ஸ்காட் ரிட்டர். வளைகுடாப் போரில் பங்கெடுத்தவர். ஆயுதப் பரிசோதனையின் தொடக்கத்தில் அமெரிக்கா மற்றும் இசுரேலின் தலையாட்டி பொம்மையாக இருந்த ஸ்காட் ரிட்டர். ஒரு கட்டத்தில். " உயிரியல். இரசாயன ஆயுதங்களைத் தயாரிக்கவல்ல ஈராக்கின் திறன் அனைத்தும் முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டது. எனவே, இனியும் பொருளாதாரத் தடையுத்தரவைத் தொடர்வது அறிவீனமாகும்" என வெளிப்படையாகவே அறிவித்தார். இதன் காரணமாகவே. ஸ்காட் ரிட்டர் ஐ.நா. சிறப்பு கமிசனின் தலைவர் பதவியில் இருந்து அமெரிக்காவால் துரத்தியடிக்கப்பட்டார்.

சர்வதேச அணுச்சக்தி கழகம் 1998ஆம் ஆண்டு வெளியிட்ட ஓர் அறிக்கையிலும் " அணு ஆயுதங்களைத் தயாரிக்கவல்ல ஈராக்கின் திறன் அனைத்தும் பிடுங்கப்பட்டு விட்டதாக" கூறியிருக்கிறது. உண்மை இப்படியிருக்க. சதாம் உசேன் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களை இரகசியமாகக் குவித்து வைத்திருப்பதாக அமெரிக்கா மீண்டும் குற்றஞ் சுமத்துவதோடு, மீண்டும் ஆயுதப் பரிசோதனை என்ற பெயரில் ஈராக்கை வேவு பார்க்க அதிகாரம் தரும் ஒரு தீர்மானத்தையும் ஐ.நா. மூலம் நிறைவேற்றிவிட்டது.

"ஈராக் தொடர்பாக இதுவரை ஐ.நா.மன்றம் மூலம் நிறைவேற்றப்பட்ட 16 தீர்மானங்களையும் ஈராக் மீறியிருப்பதாக" இப்புதிய தீர்மானம் ஈராக் மீது குற்றம் சாட்டுகிறது. மேலும். ஐ.நா.வின் ஆயுதப் பரிசோதனை–கண்காணிப்புக் குழுவும், சர்வதேச அணு ஆயுத கமிசனின் ஆய்வாளர்களும். தங்களின் விருப்பப்படி. எந்தவிதமான முன்னறிவிப்பும் இன்றி. ஈராக்கின் எந்தப் பகுதிகளுக்கும். எந்தக் கட்டிடம், தொழிற் சாலைகளுக்குள்ளும் நுழைவார்கள். இதற்கு ஈராக் எந்தவிதமான தடையோ, கட்டுப்பாடோ விதிக்க முடியாது.

இந்த ஆய்வாளர்களின் பாதுகாப்புக்காக ஐ.நா. பாதுகாப்பு படையினர் ஈராக்கினுள் நுழைவார்கள். இந்த ஆய்வுக் குழுக்கள். எந்தவொரு பகுதியிலும் ஈராக்கின் விமானங்கள் பறக்கத் தடை விதிக்கலாம். ஈராக்கியர்கள் நுழையத் தடை விதிக்கலாம். ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் பகுதிகளை, ஆளில்லாத (தானியங்கி) விமானங்களைப் பயன்படுத்தி வேவு பார்க்கலாம். எந்தவொரு ஈராக்கியரையும் ஈராக்கிற்கு வெளியே கடத்திப்போய், ஆயுதங்கள் பற்றி விசாரிக்கலாம்.

சுருக்கமாகச் சொன்னால். ஐ.நா.தீர்மானம் மூலம் அமெரிக்க உளவாளிகளும், இராணுவ வீரர்களும் ஈராக்கினுள் ஊடுருவ அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் சதாம் உசேனை ஆத்திரப்படுத்தி. அவரைத் தீர்மானத்தை மீறச் செய்து. அதன் பின் ஈராக் மீது ஒரு பெரும் தாக்குதலை நடத்த அமெரிக்கா சதிவலை பின்னியிருக்கிறது.

மத்திய ஆசியாவையொட்டியுள்ள காஸ்பியன் கடல் பகுதியில் கிடைக்கும் கச்சா எண்ணெய் வளத்தைக் கைப்பற்றுவதற்காக, ஆப்கானில் பொம்மையாட்சியை ஏற்படுத்தியிருக்கும் அமெரிக்கா, ஈராக்கின் எண்ணெய் வளத்தைக் கைப்பற்றவும் மேற்காசியாவில் தனது ஆதிக்கத்தை வலுவாக்கிக் கொள்ளவுமே. ஈராக்கில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவரத் துடிக்கிறது. முதலாளித்துவ அறிஞர்கள் கூறுவது போல. அமெரிக்கா தனது உள்நாட்டுப் பிரச்சினைகளைத் திசை திருப்புவதற்காக நடத்தும் போரல்ல இது. "மூலப் பொருட்களையும் கொலனிகளையும் கைப்பற்றிக் கொள்ள ஏகாதிபத்தியங்கள் மூர்க்கமாக முயலும்" என்பதன் வெளிப்பாடே இந்தப் போர்.

இதற்காக ஆசியாவையே முற்றுகையிடுகிறது அமெரிக்கா. ஏற்கனவே. மேற்காசியாவில் சவுதி அரேபியா. கத்தார், குவைத், ஓமான் ஆகிய நாடுகளில் தனது இராணுவத் தளங்களை அமைத்துள்ள அமெரிக்கா, தற்பொழுது. மத்திய ஆசியாவில் உள்ள உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தானிலும் மற்றும் ஜியால்ஜியாவிலும் புதிய இராணுவத் தளங்களை அமைத்துள்ளது. துருக்கியில் உள்ள விமானத் தளத்தை நவீனப்படுத்தியிருக்கிறது. மேலும்; ஆப்பிரிக்காவின் வடபகுதியில் மேற்காசியாவை ஒட்டியுள்ள சோமாலியா. சூடான் நாடுகளிலும் இராணுவத் தளங்களை அமைக்க அமெரிக்கா முயன்று வருகிறது.

அமெரிக்காவின் பன்னாட்டு எண்ணெய் நிறுவனங்களுக்கு அடுத்தபடியாக. அமெரிக்கா நடத்திவரும் பயங்கரவாதத்துக்கு எதிரான போரைப் பயன்படுத்திக் கொள்ளை இலாபம் அடிப்பவை அமெரிக்காவின் ஆயுதத் தளபாட நிறுவனங்கள்தான். பிற நாடுகளை வேவுபார்க்கும் செயற்கை கோள்களுக்குத் தேவைப்படும் உதிரிப் பாகங்களின் உற்பத்தியை அதிகப் படுத்தும்படி போயிங் நிறுவனத்திற்கு உத்தரவிட்டுள்ளது அமெரிக்க அரசு. இது ஒரு புறமிருக்க. இந்தப் போரைக் காட்டி உஸ்பெகிஸ்தானிடம் 125 கோடி ரூபா பெறுமான ஆயுதத் தளபாடங்களையும். கிர்கிஸ்தானிடம் 70 கோடி ரூபா பெறுமான ஆயுதங்களையும், தாஜிகிஸ்தானிடம் 600 கோடி ரூபா பெறுமான ஆயுதங்களையும், இந்தியாவிடம் 730 கோடி ரூபாய் நவீன ராடர் சாதனங்களையும் விற்க அமெரிக்கா ஒப்பந்தம் போட்டுள்ளது.

பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களை சதாம் உசேன் குவித்து வைத்திருப்பதாகச் சந்தேகம்தான் எழுப்பப்படுகிறது. ஆனால். இப்படிப்பட்ட ஆயுதங்களை அமெரிக்கா குவித்து வைத்திருப்பது உலகமே அறிந்த உண்மை. அமெரிக்கா. வளைகுடாப் போரின் பொழுது. ஈராக் மீது கதிர்வீச்சு குறைந்த அணுகுண்டுகளை வீசியதால், அந்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் ஊனமாகப் பிறக்கின்றன. இந்த அணுகுண்டு வீச்சால் புற்று நோய் பிடித்து. பொருளாதாரத் தடையால் அதற்குரிய மருந்துகள் கிடைக்காமல, இறந்து போன குழந்தைகள் – சிறுவர்களின் எண்ணிக்கை ஐந்து இலட்சத்தைத் தாண்டி விட்டது.

இதன்படி பார்த்தால். ஈராக்கிற்கு முன்னதாக அமெரிக்காவில்தான் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும். சதாம் உசேனுக்கு முன்னதாக, புஷ்தான் பதவியில் இருந்து தூக்கியெறியப்பட வேண்டும். சதாம் உசேக்கு முன்னதாக. ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும், உலகின் பல்வேறு நாடுகளிலும் பேரழிவை ஏற்படுத்திய அமெரிக்க அதிபர்கள்தான் போர்க் குற்றவாளிகளாக விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும்.

நன்றி : புதிய ஜனநாயகம்
டிச. 2002

### சமாதானத்தின்...

1ம் பக்க தொடர்ச்சி..

வரவேற்கும் மனநிலைக்கு மக்கள் வந்துள்ளனர்.

அதேவேளை இச் சமாதானத்திற்கு அடுத்த ஒரு பக்கம் இருக்கிறது. அதுவே இன்றைய சூழலைப் பயன்படுத்தி இதுவரை வடக்கு கிழக்கிற்குள் புகுந்துகொள்ள முடியாமல் இருந்து வந்த பல்தேசியக் கம்பனிகள் தமது ராட்சத மூலதனத்துடன் புகுந்துகொள்ள நிற்பதாகும். ஏற்கனவே 1980ம் ஆண்டுகளில் இருந்து இலங்கைக்குள் திறந்த பொருளாதாரத்தின் மூலம் தனியார்மயத்தின் ஊடாக பல்தேசியக் கம்பனிகள் உட்புகுந்து தம்மை நிலைநிறுத்திக் கொண்டன. நாட்டின் வளங்களும் மக்களின் உழைப்பும் கொள்ளையிட்டுச் செல்லப்படுகின்றன. அதேவேளை வடக்கு கிழக்கு இதிலிருந்து விடுபட்டே இருந்தது. இப்பொழுது முன்னெடுக்கப்படும் சமாதான சூழலின் ஊடாக உலகமயமாக்கலின் சகல நச்சுத்தனங்களும் வடக்கு கிழக்கிற்குள் செலுத்தப்பட வழிவெட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே நாட்டின் பொருளாதாரம் அரசியல் சமூக பண்பாட்டுத் தளங்கள் அனைத்தும் அமெரிக்காவின் தலைமையிலான உலகமயமாதல் நிகழ்ச்சி நிரல் முன்னெடுப்பால் சீரழிவுகளுக்கு உள்ளாகி உள்ளன. உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் உதவி வழங்கும் நாடுகளும்தான் நமது நாட்டின் தலைவிதியைத் தீர்மானிப்பவையாக உள்ளன. அத்தகைய ஆதிக்கப் போக்கிற்கு தடையாக இருக்கும் ஒவ்வொன்றையும் அகற்றி ஏகாதிபத்திய முதலாளித்துவ சுரண்டலுக்கும் ஆதிக்கப் பிடிக்கும் வழிவகுப்பதையே தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தையின் மறுபக்கம் பிரதானமாகக் கொண்டிருக்கிறது.

எனவே ஒருபுறத்தில் சமாதானத்தின் அவசியத்திற்காக பேச்சுவார்த்தையையும் நியாயமான அரசியல் தீர்வையும் வற்புறுத்துவது தவிர்க்க முடியாத தேவையாகின்றது. அதேவேளை அதே சமாதானம் என்பதற்கு ஊடாக ஏகாதிபத்திய பொருளாதார அரசியல் ராணுவ பண்பாட்டு ஊடுருவல் வேகப்படுத்தப்பட்டு வருவதை எதிர்த்து நிற்பது அவசியமாகின்றது. சமகாலத்தை மட்டுமன்றி எதிர்காலத்தையும் சிந்தித்தே செயல்பட வேண்டியது மக்கள் முன்னால் உள்ள கடமையாகின்றது. எனவே சமாதானத்திற்கான ஒவ்வொரு நகர்வையும் உன்னிப்பாக அவதானித்து ஆதரிக்க வேண்டியவற்றை ஆதரித்து எதிர்க்க வேண்டிய அம்சங்களை மக்களுக்கு அறிவுறுத்தி எதிர்ப்பது நம் அனைவருக்கும் முன்னால் உள்ள கடமையாகும்.

www.padippakam.com



# கைலாசபதி எதிர்ப்புக் கதையளக்கும் காலமும் - சுவடும்

சுந்தர ராமசாமியின் மார்க்சிச வெறுப்பு ஊரறிந்தது. அவருடைய விமர்சனப் பார்வையும் இலக்கியத் தூய்மைக் கோட்பாடும் அந்தப் பகைமையில் வேரூன்றி இருப்பதை அறிய அதிகம் முயற்சி தேவையில்லை. முற்போக்கான பார்வை இடதுசாரி அனுதாபமும் மறைக்கப்பட்டுப், புதுமைப்பித்தன் அவருடைய இலக்கிய உன்னதமாவது. அவர் எவரையெல்லாம் ஏன் கொண்டாடுகிறார் என்பதை நமக்குச் சிறிது விளக்கும். மு.தளையசிங்கம் அவருக்கு முக்கியமான சிந்தனையாளராகத் தெரிவது ஏனென்று யாருமே விளக்கத் தேவையில்லை. சுந்தர ராமசாமி தமிழகத்தின் முக்கியமான புனைக்கதை யாளர்களுள் ஒருவர் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவரது இலக்கியப் பார்வை குழறுபடியானது. அவருக்கும் அவருடைய ஈழத்து அபிமானிகளுக்கும் பொதுவான கொள்கை மார்க்சிச எதிர்ப்பு ஒன்றே. கடல் கடந்து போயும் தேசியவாதத்தின் வறுமையை அறிந்தும் அனுபவித்தும் கூட, மார்க்சிச வெறுப்புக் கழியாத ஒரு தூய இலக்கிய வட்டம். கனடாவிலிருந்து காலம் என்கிற சஞ்சிகையை இடையிடை வெளியிடுகிறது. காலச் சுவடு என்ற சஞ்சிகையோ சுந்தர ராமசாமியால் தொடக்கப்பட்டு இப்போது ஒரு சனரஞ்சகப் பத்திரிகையாகி வருகிறது. காலம் என்கிற பேர் கூட காலச்சுவட்டின் சுவட்டில் வந்திருக்கலாம்.

இடதுசாரி விரோதமாக எழுதுவதிலும், முக்கியமாகக் கைலாசபதி பற்றி நிந்தனையாக எழுதுவதிலும், "காலம்" விடாது அக்கறை காட்டுகிறது. கடைசியாக வந்த காலம், ஏ.ஜே.கனகரத்தினா சிறப்பிதழாக வந்துள்ளது. ஏ.ஜே.யை வைத்து இடதுசாரி படைப்பாளிகளைத் தாக்குவது கடினம். ஏனெனில், பலவேறு கருத்து வேறுபாடுகள் நடுவிலும் அவரது இடதுசாரி அனுதாபமும் மாக்ஸியச் சார்பான சிந்தனையும் தொடர்ந்து நிலைத்துள்ளது. என்றாலும் விடுவார்களா?

ஈழத்து இலக்கியம் பற்றி அதிகம் தெரியாத ஏ.எஸ்.பன்னீர் செல்வத்தைக் கொண்டு கைலாசபதி, சிவத்தம்பி ஆகியவர்களிலும் ஏ.ஜே. பெரிய ஆளுமை என்று எழுத வைத்துள்ளார்கள். எனக்கு ஆளுமைகளை அளக்கத் தெரியாது. எனினும் இந்தப் பன்னீர் செல்வம் போல ஒருவர் கையால் இப்படி ஒரு பரிசு வாங்குவது நிச்சயமாக ஏ.ஜே.க்கு ஒரு கவுரவமல்ல.

இன்னொரு கட்டுரையில் எஸ்.வி.ராஜதுரை "கலாச்சாரக் கமிசர்கள்" மீதான தாக்குதலுடன் தொடங்கி ஏ.ஜே.யை அவர்கட்குப் பணிய மறுத்த வீரராகக் காட்டுகிறார். ராஜதுரைக்கு ஈழத்து இலக்கிய உலகத்தைப் பற்றித் தெரிந்தது சொற்பம். யாரோ சொன்னதைக் கேட்டு மலையக மக்களின் வாக்குரிமையைப் பறிக்க இடதுசாரிகளும் துணைபோனதாக ஒரு காலத்தில் எழுதிய இவருடைய கேள்வி ஞானம் ஈழத்து இடதுசாரி இலக்கியம் பற்றி அறிவதெல்லாம் மார்க்சிச எதிர்ப்பாளர்கள் வழியாகவேதான் கிடைக்கிறது. அவரைக் குற்றஞ் சொல்லி என்ன பயன். யாரையும் மட்டந் தட்ட ஏ.ஜே. தனது மேதமையைப் பயன்படுத்தவில்லை என்று அவர் எழுதிய கட்டுரை வந்துள்ள இதழிலேயே ஏ.ஜே. தர்மு சிவராமுவுக்குக் குட்டுப்போட்ட கதை உள்ளது. அத்துடன் லங்கா கார்டியனில் இருபது வருடங்கள் முன்பு சமுத்திரன் என்ற சண்முகரத்தினத்துக்குப் போட்ட பலமான குட்டுப் பற்றியும் ஏ.ஜே. வலியச் சண்டைக்குப் போவதுமில்லை வந்த சண்டையை விடுவதுமில்லை என்பது பற்றியும் ராஜதுரை அறிய நியாயமில்லை.

இத்துடன் மன நிறைவெய்யாத "காலம்," எம்.தேவசகாயகுமார் என்பவரது மு.தளையசிங்கத்தின் இலக்கியப் பார்வை என்ற கட்டுரையையும் வெளி யிட்டுள்ளது. அதில் அவர் கைலாசபதி பற்றி தளையசிங்கம் முன்வைக்கிற கண்டனங்களையெல்லாம் எதுவித விசாரணையுமின்றிச் சத்தியவாக்காகப் பயன்படுத்தி மீள எழுதுகிறார். தளையசிங்கத்தின் வீர வழிபாட்டாளர்களுக்கு உண்மையாகத் தெரிவன பலவும் பொய்யானவை என்று திரும்பத்திரும்ப எடுத்துரைக்கப்பட்ட பின்பும், சில கதைகளை அவை நம்பப்படும் வரை, விக்கிரமாதித்தன் பாணியில் சற்றேனும் மனந்தளராது வேதாளத்தின் பின்னால் முருக்க மரமேறியபடி கிளிப்பிள்ளைகள் போல சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள்.

என்ன செய்வது! அவர்களுடைய காலம் அப்படி! **சிவா ~**

# அவர்களது அங்கீகாரம் வேண்டாமல்

**அதிகாரப்பீடங்களின் விருதுகளையும் நல்லாசிகளையும், இரந்து**
**பெற்றவர்கள் சொல்லுகிறார்கள் :**
**உன் கவிதைகள் பரிசுக்குரியனவல்ல.**
**நீயும் சான்றோர் மண்டலங்களின் அங்கீகாரத்துக்குரியனசல்ல.**
**தூய கலை இலக்கிய அங்கியால்**
**தம் அரசியலை மூடியவாறு**
**அழகியல் உபாசகர்கள் சொல்லுகிறார்கள் :**
**உன் கவிதைகள் காலத்தால் அழியாதவையல்ல.**
**அவை உலகத்தரம் கொண்டனவுமல்ல.**
**தங்களைச் சூழும் வட்டங்களின் எல்லைகளைக் காணத்**
**தலைகுனிந்தும் பார்க்காதவர்கள் சொல்லுகிறார்கள் :**
**உன் கவிதைகள் குறுகிய அரசியல் சிந்தனை வட்டத்துக்குரியன.**
**நீ அதனின்று வெளியேற முயல வேண்டும்.**
**காலத்தால் அழியவொண்ணாக் கலைஞர்களெனத்**
**தம்மைக் கற்பனை செய்கிறவர்கள் சொல்கிறார்கள் :**
**நீ என்றுமே கலைஞனல்ல.**
**கருவிலே திருவில்லா நீ வெறும் எழுத்தாளன் மட்டுமே.**
**ஒரு வணிகன் என்னிடம்**
**ஒளிவுமறைவின்றிச் சொல்கிறான் :**
**உன் கவிதையை விற்று நீயும் பிழைக்க முடியாது.**
**நானும் பிழைக்க முடியாது.**
**ஒளிவுமறைவின்றி நானும் சொல்கிறேன் :**
**மேலிடத்து அங்கீகாரமோ பரிசோ பெற வேண்டாது**
**காலத்தாற் சிதைகின்ற காகிதத்தில்**
**வெய்யிலுக்கு மங்குகிற மை கொண்டு எழுதிய**
**என் கவிதை**
**உலகத்தரத்தை எட்டும் மொழிக்குப் பெயராமல்**
**விற்பனைக்கில்லாத என்னுடைய அரசியற் சிந்தனை மீது**
**உறுதியாகக் காலூன்றி நிற்கின்றது.**
**இன்னுஞ் சொல்லுகிறேன் :**
**பெருமைமிக்க ஆரவாரங்கட்கு உரியோரின் பார்வைக்கு**
**எட்டாத ஓர் உலகம் எனக்கு அருகே தெரிகிறதால்,**
**தூய்மையாளர்களின் சொர்க்கத்தில் இடம் வேண்டாமல்,**
**நான் எழுதும் எளிய வரிகளை,**
**வேறு எவரேனும் இவ்வேளை எழுதிக்கொண்டிருக்கலாம்**
**என நன்கு அறிந்தும்,**
**என் பாழ்நரகத்துக்குப் போகும் வழியில் எழுதிக்கொண்டிருக்கிறேன்.**

நன்றி : தாயகம்
செப்.05-2002

**~சிவசேகரம்~**

# லெனினது கல்விச் சிந்தனைகள் ஒரு பெறுமதியான நூல்

யோ. பெனடிக்ற் பாலன் நாடறிந்த மாக்சிச கலை இலக்கியவாதியும் சிறந்த எழுத்தாளருமாவார். சிறுகதை, நாவல், கவிதை எழுதுவதில் தனித்துவம் கொண்டவர் பெனடிக்ற் பாலன். தான் பெற்றுக்கொண்ட மார்க்சிச உலகக் கண்ணோட்டத்தை கலை இலக்கிய தளத்தில் மட்டுமன்றி தனது கல்விப் புலத்திலும் கால் பதிக்கச் செய்தவர். அதன் பெறுமதியான அடையாளமாகத் தந்து சென்ற நூலே லெனினது கல்விச் சிந்தனைகள் என்னும் இந் நூலாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுமானிப்பட்டம் பாட நெறிக்குரிய ஆய்வுக் கட்டுரையாகவே "லெனினது கல்விச் சிந்தனைகள் பற்றிய ஆய்வு" என்னும் இக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

பெனடிக்ற் பாலனின் இவ் ஆய்வுக் கட்டுரைக்கு யாழ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ப. சந்திரசேகரமும் அவரது மறைவுக்குப் பின் கலாநிதி சபா. ஜெயராசாவும் வழிகாட்டியாக இருந்து நெறிப்படுத்தியதை பாலன் தனது முன்னுரையில் நன்றியுடன் குறிப்பிட்டுள்ளார். மார்க்சிச நிலைப்பட்ட பெனடிக்ற் பாலனின் இவ் ஆய்வுக் கட்டுரைக்கு மார்க்சிச சிந்தனையோடு மிக நெருக்கமான உறவைக் கொண்டிருந்த மேற்படி இரு கல்வியாளர்கள் நெறிப்படுத்தியமை இந் நூலின் கனதிக்கு பெறுமதி சேர்த்துள்ளது எனக் கூறலாம்.

ஒன்பது உள்ளடக்கக் கூறுகளில் எழுதப்பட்டுள்ள இவ் ஆய்வுக் கட்டுரைகள் லெனின் என்ற மார்க்சிச மேதையின் ஊடாக கல்வியின் அடிப்படையையும் அதன் சமூக வர்க்க இயங்கு நிலையையும் சமூக சார்புத்தன்மையும், மக்களுக்கான பயன்பாட்டையும் மிக விரிவாக ஆராய்ந்து நிற்கிறது. கல்விப் புலத்தில் சமூக அக்கறையோடு இருந்து வரும் ஒவ்வொரு மாணவருக்கும் ஆசிரியருக்கும் பயன் உள்ள ஒரு நூலாக "லெனினது கல்விச் சிந்தனைகளைக்" கொள்ள முடியும். பெனடிக்ற் பாலன் இந்நூலினூடாக தனது மார்க்சிச நிலைப்பாட்டை கல்வி ஆற்றலை வெளிப்படுத்தி சமூகப் பயன்பாட்டிற்காகத் தந்து சென்றிருக்கிறார் என்பது மிகையான கூற்றாகாது. அதனை தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியிட்டு மறைந்த யோ. பெனடிக்ற் பாலனை கௌரவித்துள்ளது. இந்நூல் சவுத் ஏசியன் புக்ஸ் கொழும்பு. வசந்தம் புத்தக நிலையம் யாழ்ப்பாணம் ஆகிய புத்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.




## எல்லாம் உலகமயம்... 8ம் பக்க தொடர்ச்சி..

அடிமைத்தனங்களின் மொத்தப் பகிர்வாளர்களாக இன்று விளங்குகிறவர்கள் யார்?

வேறு யாரும் அல்ல: அதீத வல்லரசுகள் என்று தம்மை நிலைநாட்டுவதற்குப் பேராசை கொண்டு, திமிர்த்தனங்களின் திரட்சிகளாய்த் தம்மை நிலைநாட்டிக் கொள்ளப் "படாத பாடு படும்" மூர்க்கத்தனமான "முதலாளியும்தான்": அனைத்துலக முற்றாதிக்கத்தின் மூலவர்களாக மாறிவிட்டிருக்கும் அந்தக் கும்பல்தான்: உலகத்தின் இரட்சகர்களாகவும் எல்லாம் வல்ல சண்டியர்களாகவும் தம்மைத் தாமே நியமித்துக் கொண்டு, யாவற்றையும், யாவரையும் ஆட்டிப் படைக்கத் துணிந்து சன்னதம் ஆடும் தம்பிரான்கள்தான்: எவரையும் தட்டிக் கேட்கும் ஆற்றலும் உரிமையும் தமக்கு வாய்த்துவிட்டது என்று தலை கால் தெரியாமல் முறுக்கி அடிக்கும் சண்டப் பிரசண்டர்கள்தான்: காலங் காலமாக, பாட்டாளிகளின் உடலுழைப்பு, அறிவுழைப்பு ஆகியவற்றை எல்லாம் பிழிந்து வடித்துத் திரட்டி எடுத்து, அபகரித்து அவற்றை மூலதனமாகக் கொண்டு வியாபாரம் பண்ணித் திரியும் மேலோங்கிகள்தான்.

இந்தச் சண்டித்தனத்துக்கும் மேலாண்மைக்கும் இத்தனை வலிமை எப்படி வந்தது? இந்த வலிமையும் வாழ்வும் எல்லையே இல்லாமல் நீடிக்கப் போகின்றனவா? இதற்கு ஒரு முடிவு ஏற்படமாட்டாதா?

"துன்பமே வாழ்க்கை" என்று சுழன்று துடித்து உழன்று நலியும் மாந்தர்களின் இதயங்கள், இவ்வாறான சோக கீதங்களை இசைத்தபடியேதான் இப்போதும் உள்ளன. வசதிகள் குன்றி வாய்ப்புகள் கெட்டு மாயும் மனிதர்கள்.

"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்,",என்று தணியும் இந்த அடிமையின் மோகம்" என்று தவித்தவாறு உள்ளார்கள். இவர்களின் இதன் வேதனைகளை, நடுத்தரத்தினரும் மேலோங்கிகளும் கண்டு கொள்வதே இல்லை. இது என்ன கொடுமை!

ஏனையோர் எப்பாடு பட்டால் என்ன? தாங்கள் உண்டு களித்துப் படாடோபமாக இருந்துவிட்டால், அவ்வளவும் போதும் அவர்களுக்கு.

அவர்கள் இப்பொழுது உயர்த்திப் பிடிக்கும் "விளம்பரப் பலகையில்" முழிப்பாக மின்னிக்கொண்டிருப்பது, "உலக மயம்" என்ற "திருவாசகம்" தான். அந்த மாயமந்திரத்தை மையமாகக் கொண்ட பூசனைகளும் பரப்புரைகளும்தான். இன்றைய "அள்ட்ரா மொடேண்" கொண்டாட்டங்கள் - கருத்தேற்றச் சுலோகங்கள் - ஊடகங்களின் உள்ளடக்கங்கள் - ஊது குழல்களின் ஆப்த வாக்கியங்கள். அந்த வேத வாக்குகளின் சாராம்சம் என்ன?

சாராம்சம்

தொடர்புத் தொழில்நுட்பத்தின் விருத்தியினால், உலகு முழுவதுமே சுருங்கிச் சிறுத்துவிட்டது: குக்கிராமம் போலக் குறுணி ஆகிவிட்டது: இனி "ஒரு பொல்லாப்பும் இல்லை": "எல்லாம் எப்பவோ முடிஞ்ச காரியம்": "முழுவதும் உண்மை" என்று கொழும்புத்துறை யோகர் பாணியிலே பிரசங்கம் பண்ணுகின்றன, சனத்தொடர்பு ஊடகங்கள்.

அதே பாணியில், இனிமேல் இந்த உலகத்தில் யாருமே பாடுபட்டு உழைக்கத் தேவை இல்லை: "சும்மா இரு" என்றெல்லாம் சத்சங்க உபதேச சாதனங்கள் தம் நித்திய கருமங்களைப் படுவேகமாக முழுக்கிவிட்டுள்ளன.

இந்த உலகமயக் கோட்பாடு, ஒரு புதிய மதம் போலவே வளர்க்கப்பட்டு வருகிறது. இந்த மதத்துக்குப் பல சாகைகள் உள்ளன: இயமம், நியமம், ஆசனம், தியானம் என்பன போன்ற படிமுறைகளும் அந்த மதப்பிரிவுகளின் நியதிகளாக விதிக்கப்பட்டுள்ளன.

இந்த நியதிகள், பயிற்சிகள் யாவுமே முற்றிலும் அபத்தமானவையும் அல்ல. இவற்றுட் பலவற்றுக்கு உண்மையான வலிமையும் சக்திகளும் உண்டு. பயனுறுதியும் பெறுமதியும் உண்டு.

ஆனால், "உலக மயம்" என்ற மையக் கருத்தைச் சுற்றி எழுப்பப்படும் கருத்தியற் பரிமாணங்களுக்கு உறுதித் தன்மையையும் மதிப்பையும் அதிகமாக்கும் பொருட்டு, இவற்றின் உள்ளார்ந்த பரிமாணங்கள் மிகைப்படுத்தப் பெறுகின்றன: ஊதிப் பெருப்பிக்கப்படுகின்றன, திரிபாக்கம் செய்யப்படுகின்றன: உருமாற்றப்படுகின்றன.

இந்தத் திரிபாக்கங்கள் பற்றியும் மிகையாக்கங்கள் பற்றியும் அவதானமாக இருக்க வேண்டும்.

இல்லையானால், "உலக மயவாக்கம்" என்னும் பண்டத்தின் தாற்பரியத்தை விளங்கிக் கொள்வதோ, அதனைச் சரியாகப் பிரயோகிப்பதோ இயலாத காரியமாகி விடலாம்.

## பின்நவீனத்துவக்... 9ம் பக்க தொடர்ச்சி

வரலாறாகவும் வெளிக்கொணரப்பட்டது. இவ்வாறு வரலாற்றை அறிவதற்குப் புதிய தகவல்களை விட முக்கியமாகப் பயன்பட்டது மாக்ஸியத்தின் வரலாற்று இயங்கியல் அணுகுமுறையே. இதை வேண்டுமானால் மீள்வாசிப்பு என்றோ வரலாற்றுத் தகவல்களான பழைய வரலாற்றின் கட்டுடைப்பும் மீள்கட்டமைப்பும் என்றோ யாரும் சொல்லலாம். எவ்வாறாயினும் மாக்ஸிய இயங்கியலும் அதன் பொதுமைப்படுத்தும் அணுகுமுறையும், பழக்கப்பட்டுப்போன யாந்திரிகமான பகுப்பாய்வையும் தொகுத்தலையும் தாண்டி, எழுதப்பட்ட வரலாற்றின் விடுபட்டுப்போனவற்றின் பெரிய இடைவெளிகளை நிரப்பின.

யாந்திரிகமான பகுப்பாய்வை விறைப்பான தர்க்க ரீதியான முறையில் நிகழ்த்துவோர் இயங்கியல் முறையில் விடயங்களை ஆராய விரும்ப மாட்டார்கள். ஆனால் இயங்கியல் பற்றிய அறிவோ அதை நடைமுறையில் பயன்படுத்தும் அக்கறையோ இல்லாமல் வரட்டுச் சூத்திரத்திலிருந்து பின்நவீனத்துவப் பெருங்கதையாடலுக்குத் தாவுகிறவர்களால் எதைப் புதிதாகக் கண்டறிய முடிந்துள்ளது.

எல்லாக் கொள்கைகளையும் சமமான அளவுக்குச் செல்லுபடியாகக்கூடிய சிறுகதையாடல்களாகச் சிதறடிக்கலாம். அதிலிருந்து நாம் நினைத்தவிதமாக உருவாக்கும் கொள்கை நமது கட்டவிழ்த்தலால் சிதறடிக்கப்பட்ட கொள்கையை விட அதிகம் செல்லுபடியானதாக இருக்கும் என்பதற்குப் பின்நவீனத்துவ உத்தரவாதம் எதுவும் இல்லை.

பின்நவீனத்துவப் புலமையாளர்களாக உலாவருகிறவர்களிடம் மீளவும் மீளவும் கேட்கப்படுகிற கேள்வி இதுதான்: இயங்கியல் பொருள்முதல்வாதத்தின் மூலம் கண்டறிய இயலாத, செல்லுபடியான, நடைமுறைப் பயனுள்ள எந்த முடிவைப் பின்நவீனத்துவ அணுகுமுறைகள் மூலம் கண்டறிய முடிந்துள்ளது என்று கூறமுடியுமா?

மாக்சிய எதிர்ப்பாளர்கட்குப் பின்நவீனத்துவம் புகலிடம் தருவது புதினம் இல்லை. மாக்சியவாதிகள் எனப்படுவோர் முதலில் தமது இயங்கியல் அணுகுமுறையைக் கொஞ்சம் கூர்மைப்படுத்திக் கொண்டால் குழப்பங்கள் தெளியும்.

**~ இமயவரம்பன் ~**

## தீ விபத்திலும் .....

5ம் பக்க தொடர்ச்சி.

ஆனால் உண்மை விரைவாகவே வெளிப்பட்ட தால் இனவாதப் பிரச்சாரம் மேலோங்க முடியாது பிசுபிசுத்துப் போய்விட்டது.

இது மட்டுமன்றி வடபுலத்தில் சில பத்திரிகைகள் தமிழர் கடைகள் மீது சிங்கள இனவாதிகளின் கைவரிசையே மேற்படி தீ விபத்து என்றவாறு திகில் தரும் செய்திகளை வெளியிட்டன என்பதையும் கவனிக்க முடிந்தது.

கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலான பாராளுமன்ற ஜனநாயக அரசியலில் இலங்கை மக்களிடையே விதைக்கப்பட்ட இனவாதத்தின் பலா பலன்கள் தான் மேற்கூறிய சிங்கள தமிழ் இனவாதப் பிரசாரங்கள். மனிதர் கள் என்பதற்கு அப்பால் சிங்களவன் தமிழன் முஸ்லீம் மலையகத்தான் என்ற கேவலமான குறுகிய பார்வைக்குள் மக்களை பாராளுமன்ற அரசியல் முடக்கியுள்ளதையே காணமுடிகிறது. இந்த அவலத்தைப் போக்க உண்மை யான மக்கள் அரசியல் மேலோங்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



புதியபூமி
පුදිය පුමි
PUTHIYA POOMI
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
சுற்று 10 ஜனவரி 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 54



இந்து கலாச்சார அமைச்சர் தி.மகேஸ்வரன் திக்கம் வடிசாராய நிலையத்தை விடமாட்டேன் என்று கூறுகிறாரா?



அமைச்சர் மகேஸ்வரனால் இந்து கலாச்சாரம் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்ட திக்கம் வடிசாராய நிலையத்தைத் தம்மிடம் மீள ஒப்படைக்கும்படி வடமாராட்சி பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவு உறுப்பினர்கள் மறியலில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# இலங்கையில் சமாதானம் நீடித்து நிலைக்க வேண்டும் கம்யூனிஸ்டுக்கள் யுத்தத்தை வெறுத்து எதிர்ப்பவர்கள்

## யாழ்நகரில் நோர்வே தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதி

இலங்கையில் நீண்ட யுத்தத்திற்குப் பின் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் வெற்றிபெற்று நீடித்து நிலைக்க வேண்டும். அதற்கான அடிப்படையாக அரசியல் தீர்வு அமைய வேண்டும். அத்தகைய அரசியல் தீர்வு எவ்வாறானதாக அமைய வேண்டும் என்பதை வெளியில் இருந்து திணிக்கவோ மாதிரி இதுதான் என்று கூறவோ முடியாது. அதனை தீர்மானிக்க வேண்டியவர்கள் இலங்கையின் அனைத்து மக்களுமாகவே இருக்க முடியும். நோர்வேயின் தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒருவராகவே இங்கு வந்துள்ளேன். நாங்கள் உட்பட உலகின் எந்தவொரு கம்யூனிஸ்டும் யுத்தத்தை ஆதரிப்பதில்லை. அதனை எப்பொழுதும் வெறுத்து ஒதுக்கி எதிர்த்து வந்துள்ளோம். அதேவேளை எந்தவொரு மக்களும் தமது உரிமைகளுக்காகப் போராடுவதை ஆதரித்தும் அதில் பங்குகொண்டும் வந்துள்ளோம். அதன் காரணமாகவே நிக்கரகுவா, பாலஸ்தீனம் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற போராட்டங்களில் அங்கு சென்று முடிந்தளவு பங்குகொண்டு பணி புரிந்துள்ளேன். அது எமது கட்சியின் முடிவுமாகும்.

இவ்வாறு புதிய ஜனநாயக கட்சி யாழ்–சிற்றிஹோல் மண்டபத்தில் 29–12–2002இல் நடத்திய பகிரங்க கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய நோர்வே தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சியின் வெளிவிவகாரப் பிரதிநிதி தோழியர் ரூனா மரியா விபரிக் கூறினார்.

கட்சியின் தேசிய அமைப்பாளர் இ. தம்பையா தலைமை தாங்கிய இக்கருத்தரங்கில் தோழியர் ரூனா மரியா விபரிக் தொடர்ந்து உரையாற்று கையில் நோர்வே நாடு இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளில் பங்கெடுத்து வரும் ஒரு நாடாகும். அது இங்கு மட்டுமன்றி பாலஸ்தீனம் உட்பட வேறு சில நாடுகளிலும் இவ்வாறான சமாதான முன்னெடுப்புகளுக்கு உதவி வந்திருக்கிறது. அவ்வாறு அந்நாடு ஈடுபடுவதற்கு சில வரலாற்றுக் காரணங்கள் இருக்கலாம். எவ்வாறாயினும் அந்த நாடு ஒரு முதலாளித்துவ அமைப்பைக் கொண்டநாடு. அத்துடன் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சார்பான நாடுமாகும். எனவே நோர்வே நாட்டின் அனுசரணை என்பதில் சாதகமான அம்சங்களும் உண்டு. பாதகமான பக்கங்களும் உண்டு. எனவே சாதகமானவற்றைப் பயன்படுத்துவதும் பாதகமானவற்றுக்கு எதிராக முன்னெச்சரிக்கையாக இருப்பதும் அவசியமானதாகும்.

இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முன்னெடுப்பை பாலஸ்தீன சமாதான முயற்சிகளில் இருந்து வேறுபடுத்தியே பார்க்க வேண்டும். அங்கே முழுக்க முழுக்க இஸ்ரேலிய நலன்களில் இருந்தே சமாதான முயற்சி முன்னெடுக்கப்பட்டது. ஆனால் இலங்கையில் அது சற்று வித்தியாசமாகவே காணப்படுகின்றது. எல்லாவற்றிலும் மேலாக சமாதானத்தைக் கொண்டு வரக்கூடியவர்களாக மக்களே இருந்து வருகின்றனர் என்பதே மிக முக்கியமானது என்றும் கூறினார்.

மேற்படி கருத்தரங்கில் புதிய ஜனநாயக கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா. செந்திவேல், அரசியல் குழு உறுப்பினர் சோ. தேவராஜா ஆகியோர் உரையாற்றினர்.

தோழியர் ரூனா மரியா விபரிக் புதிய ஜனநாயக கட்சியின் அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்து கட்சியின் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். யாழ் குடாநாடு உட்பட பல்வேறு பிரதேசங்களுக்கும் சென்று மக்களைச் சந்தித்து நாடு திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முஸ்லீம் பாராளுமன்றத் தலைமைகள் ஏட்டிக்குப் போட்டியாக தீவிரம் பேசுகின்றன!

சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் இன்று மூன்று நிலைகளில் பிளவுபட்டு நிற்கிறது. முன்பே அஷ்ரப்பின் மனைவி பேரியல் தலைமையில் ஒரு பகுதி இருந்து வருகிறது. பின்பு மு.கா. என இருந்து வந்த ஹக்கீம் தலைமையில் உடைவு ஏற்பட்டு அதாவுல்லா குழுவினர் உருவாகியுள்ளனர். இப்போது முஸ்லீம் மக்களின் தலைமைத்துவத்திற்காக தாங்கள் மட்டுமே பாடுபடுவதாக உரிமை கோரி இம் மூன்று பிரிவினரும் தீவிரப் பிரசாரத்திலும் ஒருவரை ஒருவர் நிராகரித்து தாக்குவதிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதில் ஹக்கீம்–அதாவுல்லா குழுக்களிடையே கடுமையான போட்டி நிலவுகிறது.

இவர்கள் ஒருவரை ஒருவர் முந்துவதற்காக தீவிரமாகப் பேசி வருகிறார்கள். இப் பேச்சுக்கள் முஸ்லீம் மக்களிடையே கடுமையான எதிரொலிகளைக் கிளப்பியும் வருகின்றது. இவர்களது பேச்சில் பிரதான எதிரியான பேரினவாதத்தைப் பற்றி எதுவும் இல்லை என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். ஏனெனில் தமது பாராளுமன்றப் பதவிப் போட்டியில் இரண்டு பேரினவாதக் கட்சிகளில் ஒன்றையே நம்பியிருக்க வேண்டியுள்ளதால் அவை பற்றி மிக மிக அடக்கியே வாசித்து வருகிறார்கள்.

அதேவேளை புலிகளுக்கு விட்டுக் கொடுத்துவிட்டார் ஹக்கீம் என அதாவுல்லா குழு சற்று காரத் தொனியில் பேசுகிறது. அதில் தமிழர்களுக்கு விரோதமான தொனியும் தொக்கி நிற்கிறது. இதற்கு மறுத்தானாக ஹக்கீம் குழு மேலும் ஒரு படி சென்று புலிகளை விமர்சிப்பதன் மூலம் தமது நிலைமையை முஸ்லீம்கள் மத்தியில் உறுதிப்படுத்த முற்பட்டுள்ளது. இவற்றுடன் கிழக்கின் உண்மையான மண்ணின் மைந்தர்கள் நாமே என்றும் வெளியில் இருந்து வந்து தலைமை தாங்க வேண்டிய அவசியமில்லை என்றும் ஹக்கீமிற்கு எதிரான பிரசாரமும் கிழக்கில் முடுக்கி விடப்பட்டுள்ளது. இது முஸ்லீம் குறுந் தேசியவாதத்தையும் பிரதேச வாதத்தையும் தூண்டி வருகின்றது. இது முன்னைய தமிழர தலைமைகளின் குறுந் தேசியவாத போட்டி அரசியலை நினைவுபடுத்தி நிற்கின்றது. இவர்களது பாராளுமன்ற அரசியல் போட்டி காரணமாக முஸ்லீம்கள் மத்தியில் பிளவுகள் தோன்றுவதுடன் தமிழ் முஸ்லீம் உறவு நிலைகளிலும் விரிசலும் மோதலும் உருவாகக் கூடிய ஆபத்தும் தோன்றலாம். இது சமாதானத்திற்கான பேச்சு வார்த்தையையும் சீர்குலைப்பதில் ஒரு பிரதான அம்சமாகவும் மாறலாம். எனவே பதவிக்கும் சொத்து சுகத்திற்கும் நிற்கும் பாராளுமன்றத் தலைமைகளைப் பற்றி முஸ்லீம் மக்கள் விழிப்பாக இல்லாது விடில் எதிர்காலம் துன்பமயமாகலாம்.

# ஆறுமுகம் தொண்டமான் அடுத்த பக்கம் பாய்வாரா?

விரைவில் பொதுசன முன்னணியை அரசாங்கம் அமைப்பதற்கு ஜனாதிபதி அழைப்புவிட இருக்கிறார். அத்தகைய சூழலில் முஸ்லீம் காங்கிரசின் ஒரு பகுதியினரும் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா.வினரும் தங்களுடன் சேர்ந்து கொள்வார்கள். இவ்வாறு பொதுசன முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அமைச்சர் ஆறுமுகம் கருத்துக் கூறுகையில் அப்படி எதுவும் இல்லை என மழுப்பி அமுனுகமவைத்தான் சந்தித்து பல மாதங்கள் என்றும் தனது மழுப்பலுக்கு நியாயம் கூறுகிறார். ஆனால் இதனை நம்புவது கஷ்டம் என்றே மலையகத்திலும் கொழும்பிலும் பேசப்படுகிறது. ஏனெனில் ஆறுமுகம் தொண்டமான் தனது தாத்தா வழி நடப்பவர். அதாவது இ.தொ.கா. ஒரு போதும் எதிர்த் தரப்பில் இருக்காது என்ற 'லட்சியத்துடன்' தாத்தாவின் கொள்கையில் இருந்து வருபவர். அப்படியானவர் பொதுசன முன்னணி அரசாங்கம் அமைத்தால் எப்படி எதிர்க் கட்சியில் இருக்க முடியும்.

எனவே ஆறுமுகம் அடுத்த பக்கம் பார்த்து வருகிறார் என்பதில் உண்மை இல்லாமல் இல்லை. மலையகத் தலைமைகளுக்கு இரண்டு பக்கத்திலும் ஆட்களும் இடமும் இருந்து வரவே செய்கிறது. பேரினவாதமோ மலையக மக்களுக்கு விரோத நிலைப்பாடு பற்றியோ அவர்களுக்கு கவலை கிடையாது. மலையக மக்களின் அரசியல் அறியாமையும் தலைமை தரிசன வழிபாடும் இத் தலைமைகள் வேண்டிய நேரம் தேவையான பக்கம் பாய்ந்துகொள்வதற்கு ஏதுவாக அமைந்து விடுகின்றன. அடுத்த அரசாங்கம் சந்தர்ப்ப சூழ்நிலையால் அமைந்தால் அங்கே ஆறுமுகம் தொண்டான் அமைச்சராகவே இருப்பார் என்பது ஏதோ நடக்க முடியாத பெரிய விடயம் அல்ல.

# ஆளும் வர்க்க அதிகாரப் பசியால் சி.ல.சு.கட்சி–ஜே.வி.பி. கூட்டு

ஆண்டு அனுபவித்த மேட்டுக்குடி ஆண்டபரம்பரையினர் ஆளும் தரப்பிலிருந்து எதிர்த்தரப்பில் மாறி இருந்து வருவது மிகக் கஷ்டமானது என்பதை சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் மூலம் காணமுடிகின்றது. எப்படியாவது மீண்டும் அதிகாரத்திற்கு வந்துவிட வேண்டும் என்பது அவர்களது குறிக்கோள். அதற்காக எதையும் எப்படியும் செய்து கொள்ளத் துணிந்து நிற்கின்றனர். இதில் அனுரா பண்டாரநாயக்கா. சரத் அமுனுகம, மங்கள சமரவீர. லக்ஷ்மன் கதிர்காமர் மும்முரம் காட்டி வருகின்றனர். அதேவேளை ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் தனது அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் முனைந்து காணப்படுகின்றார். இந்தியா சென்று கோள்மூட்டி வந்தார்கள். இனவாதம் கக்குவதில் புதிய மேடைகளை உருவாக்கிக் கொண்டனர். அனுரா. மங்கள சமரவீர ஆகிய கடைக்கோடி வலதுசாரிகள் பேரினவாத 'இடதுசாரிகள்' என்று கூறப்படும் ஜே.வி.பியோடு கட்டி அணைத்துக் கொஞ்சுகிறார்கள். இப்போது லண்டனுக்குச் சென்று ஜே.வி.பி. தலைவர் சோமவன்சவோடு பேசி சிறிலங்கா–ஜே.வி.பி ஐக்கிய முன்னணிக்கு அலுவல் நடைபெறுகிறது. இதுபற்றி ஏற்கனவே ஜனாதிபதி – ஜே.வி.பி பேச்சுவார்த்தை நடைபெற்றிருக்கிறது. இதனால் பழைய பாராளுமன்ற இடதுசாரிகள் எனப்பட்ட சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சிகள் அதிருப்தியும் வெறுப்பும் தெரிவித்துள்ளன.

சிறிலங்கா சு. கட்சி – ஜே.வி.பி. கூட்டணி மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றியவை அல்ல. உலகமயமாதல் திறந்த பொருளாதாரம் தனியார்மயம் ஆகியவற்றுக்கு எதிரான வகையில் அல்ல. பேரினவாதத்தை அடிப்படையாகக் கொண்டதேயாகும். வழமை போன்று தமது அதிகாரப் பசியைத் தீர்ப்பதற்குரியதாக இருக்கும் என்றே நம்புகிறார்கள். தம்மோடு பொதுசன முன்னணி என்ற பெயரில் முன்பு இணைந்து நின்ற இடதுசாரி களையும் கை கழுவிவிட்டு புதிய கூட்டாக சி.ல.சு. கட்சி –ஜே.வி.பி. கூட்டு சாத்தியமாக உள்ளது. அதற்கு இந்தியாவும் பின்புலமாக இருந்து உற்சாகமளிக்கிறது. ஏனெனில் இப்போது இந்தியாவிற்குத் தேவைப்படுவது தனது பிராந்திய மேலாதிக்க நோக்கங்களுக்குரிய அரசியல் சக்தி அதிகாரத்திற்கு வருவதேயாகும்.




கடந்த 29.12.2002 அன்று யாழ். நகரில் புதிய ஜனநாயக கட்சி சமாதான முன்னெடுப்புகளும் எதிர்நோக்கும் சவால்களும் என்னும் தலைப்பில் நடாத்திய பகிரங்க கருத்தரங்கில் நோர்வே தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதி தோழியர் ரூனா மரியா பிபரிக் உரையாற்றுவதையும். தோழர் தம்பையா தலைமை தாங்குவதையும் தோழர்கள் சி.கா.செந்திவேல். சோ.தேவராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

வெளியிடுபவர் : இ. தம்பையா. இல. 47. 3ம் மாடி. கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட். கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யூகே. பிரின்டஸ் 98A. விவேகானந்தா மேடு. கொழும்பு 13.

படிப்பகம்